14
No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 1. | ஹிஜ்ரி 1349 ரபீஉல்ஆகிர் மீ, 1930 செப்டம்பர் மீ | இதழ் 8

OFFICE OF THE REGISTRAR
23 SEP 1930

உள்ளடக்கம் — பக்கம்

1.	ஸூரத்துல் காபிரூன்	337
2.	நாயக வாக்கியம் ...	340
3.	நபிகள் திலகத்தைப் பின் பற்றுதல் ...	343
4.	வலிகள் நாயகம் ...	345
5.	அபூபக்கர் ஸித்தீக் (ரலி) என்னும் நூலில் தாவூத்ஷா இழைத்த தவறு ...	350
6.	தா. இ. ஹாபிஸின் தடுமாற்றம் ...	353
7.	தா. இ. ஹாபிஸின் தவறான பத்வா ...	364
8.	தா. இ. ஆசிரியர்களின் இலங்கை விஜய வினோதம் ...	366
9.	அழைப்புக் கடிதம் ...	371
10.	பா. தா. ஒரு பக்கா அஹ்மதியே ...	376
11.	நிரூபசாரம் ...	379
12.	இஸ்லாத்தின் பாதுகாப்புச் சங்க அறிக்கை ...	383
13.	ஆசிரியர் குறிப்பு ...	384

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,, 4	0	0
தனிப் பிரதி	...	,, 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்.

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்ரஹீம் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 1	ஹிஜ்ரி 1349 ரபீஉல் ஆகிர் மீ 1930ஞு செப்டம்பர் மீ	இதழ் 8

OFFICE OF THE REGISTRAR ... 23 SEP 1930 MADRAS

ஸூரத்துல் காபிரூன்.

[illegible]ற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருப்பெயரால் (நான் இதனை ஓதுகின்றேன்).

(1) சொல்லும் (முஹம்மதே!) ஹே! காபிர்காள்! (விசுவாச மற்றவர்காள்!)

(2) நீவிர் வணங்குவதை யான் வணங்கேன்.

(3) யான் வணங்கு கின்றவனை நீவிர் வணங்குபவ ரல்லீர்.

(4) நீவிர் வணங்கியதை யான் வணங்கினவனல்லன்.

(5) யான் வணங்குபவனை நீவிர் வணங்குபவரல்லீர்.

(6) உங்களது மார்க்கம் உங்களுக்காக இருக்கும், எனது மார்க்கம் எனக்காக இருக்கும்.

இத்திருவத்தியாயம் ஹிஜ்ரத்திற்கு முன்னரே எழுந்தமைபற்றி இதனை 'மக்கீ' என ஓதுவர், இதில் காபிர்களாய விசுவாச மற்றவர்கள் நெறிக்கும் இஸ்லாம் மெய் நெறிக்கும் எத்தகைய தொடர்பு மில்லையென்று வரையிறுத் துரைக்கப் பெறுவதால், இது 'காபிரூன்' என்னும் பெயரால் வழங்கப்படுகின்றது.

நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் வாழ்க்கையினைத் துவக்கந் தொட்டு மிகத் தூய்மையாய் நடத்தி வந்தார்கள் என்பதை சரித்திர வாயிலாய்த் தெளிய உணரலாகும், இவர்கடம் இளமையின் தூய்மைக்கு இவர்கள் கொடிய பகைவர்களாய குரைஷிக் காபிர்கள்கூட எட்டுணையும் இழுக்குரைத்தார் களல்லர். நாயகமவர்கள் நியதி, பொறுமை, சகிப்புத் தன்மை, உபகாரம், உபசாரம், தயை, சாந்தம், சத்தியம், மன்னிப்பு இவைகளைத் தம் பூஷணங்களாக அமையப் பெற்றிருந்தார்கள். அவர்கட்கு "அல்அமீன்" என்னும் சிறப்புப் பெயரும் பரவி வழங்குவதாயிற்று. அவர்கட்கு நாடெங்கணும் அளவிலா நன்மதிப்புப்

பெருகியது. நபித்துவம் வாய்த்த பின்னர் மக்கட்கு ஏகதெய்வக் கொள்கையைப் போதித்து வந்தார்கள். பயனற்ற கற்களையும், மரங்களையும் மக்கள் வணங்கிப் பாழ்படாதவாறு தடுத்து வந்தார்கள். எனவே, தமது மனித அறிவை மரப் பொம்மைகட்கும், கற்சிலைகட்கும் அடைக்கலம் புகுத்திய தம்குறைஷிக் காபிர்கள், கற்சாமிகளும் மரச்சாமிகளும் உண்மைச் சாமியல்லவென்று உண்மை புகலும் நபிகள்பெருமான் (ஸல்) மீது பகைமை கொண்டனர்; வன்னெஞ்சத்தராய் நாயகமவர்களை வசைகூறத் துவங்கினர்; அலருரைத்தனர்; கல்லெறிந்தனர்; கொல்லவும் துணிவராயினர். இம்மட்டோ! நாயகமவர்கட்கும், அவர்கடம் உறவின் முறையாரான ஹாஷிம் குலத்தினர்க்கும் நீர் நெருப்பும் வழங்கலாகாதெனச் சமுகக் கட்டுப்பாடும் செய்து கொண்டனர். இதன்பயனாய் நாயகமவர்களும் அவர்கள் உறவினரும் ஓர் மலைக் குன்றிலுறைந்து வாழலாயினர். பகிஷ்காரத்தின் கொடுமையால், எதிர்பார்த்த அளவில் உணவுப் பொருள் கிட்டாமல் நாயகமவர்களும் அவர்களுடனிருந்தாரும் அடைந்த துன்பம் அம்ம! அம்ம! இயம்பவும் இயலுமோ? எத்துணைக் காலந்தான் அக்கிரமக் காரர்களின் கொடுமை நீடிக்கும்? காபிர்களிலும் சிலர் பச்சாத்தாபம் உடையவர்கள் இருந்தனர். இவர்கள் தாங்கள் செய்திருந்த பகிஷ்கார உடன்படிக்கை முறியைக் கிழித்தெறிந்து விட்டனரெனினும் குரைஷியர்களால் நடைபெற்ற துன்பங்கள் அறவே ஒழிந்தனவன்று. இத்துணைக்கும் நாயகமவர்கள் தாம் கொண்ட கொள்கையை நெகிழவிடாது, ஏக தெய்வத்தத்துவத்தை மக்கட்குப் போதித்த வண்ணமாகவே இருந்தார்கள்.

கொடிய துன்பங்களைச் செய்தனர்; சிரச்சேதம் செய்வதாக அச்சுறுத்தினர்; மற்றும் தம்மாலியன்ற எல்லாக் கொடுமைகளையும் ஒன்று விடாமல் செய்து பார்த்தனர். நாயகமவர்களோ இவற்றைக் கண்டு மனம் சலித்து அஞ்சினார்களல்லர்; இவர்கடம் ஊக்கமும் மட்டுப்பெற்றதன்று. குரைஷியர்கள் துன்புறுத்தத் துன்புறுத்த, அஃதாவது எதிர்ப்பு மிகுதியாக, நாயகமவர்களின் உழைப்பும் முன்னையினும் பன்மடங்கு நூறு மடங்காய் அதிகரித்தது. என் செய்வார்கள் குரைஷிக் காபிர்கள்! சமாதானம் கூற முன் வந்தனர். அபூஜஹ்லு, ஆஸிப்நுவாயில், வலீ திப்னு முகிரா, அஸ்வதிப்நு அப்துயகூது, அஸ்வதிப்நு அப்துல் முத்தலிபு, முதலானவர்கள் சில நிபந்தனைகளோடு சமாதானம் செய்து வருமாறு தூது அனுப்பினார்கள் தூதறிக்கையாவது:—

"ஹே! முஹம்மதே! நீவிர் எமது சாமிகளான சிலைகளை இழித்துக் கூறவேண்டாம். அவைகள் ஜனங்களுக்காக ஆண்டவனிடத்தில் பரிந்து பேசுவனவென்பதை ஒப்புக் கொள்ளக்கடவீர். இத்தோடு எமது சிலைகளையும் வழிபடக்கடவீர். அவ்வாறு செய்வீரேல் யாமும் உமது இறைவனை வழிபடுவோம்." இத்தூதறிக்கைக்கு மறுமொழி நபிகள் பெருமான் திருவாக்கால் ஒன்றும் பிறக்கவில்லை. இறைவனே அருள்கூர்ந்து ஓர் திருவத்தியாயத்தை இறக்கினான். அத்திருவத்தியாயந்தான் தலைப்பில் கூறப்பெற்றுள்ள 'ஸூரத்துல் காபிரூன்'

குறைஷிக் காபிர்கள் கல்லாலும் மண்ணாலும் மரத்தாலும் செம்பாலும் செய்யப்பெற்ற எண்ணிறந்த சிலைகளையும், பஞ்சபூதங்களையும், நட்சத்திரங்களையும், வானவர், சாத்தான் முதலானவர்களையும் வணங்கி வந்தார்கள். இவை ஆண்டவன்பால் தம்பொருட்டுப் பரிந்து பேசும் ஆற்றலுடையன என்றும் எண்ணி ஏமுற்றார்கள். நாடோறும், நாள் ஒன்றுக்கு ஒவ்வொன்றாக வணங்குமாறு 360 சிலைகளைப் படைத்து அவைகட்குப் பூசை புரிந்தும் வந்தார்கள்.

இறைவன் ஒருவனே என்றும், அவ்வொருவனே எல்லோரும் வணங்கற்குரியவன் என்றும், ஒருமையோன் என்றும், அவனாலேயே இவ்வண்ட பிண்ட சராசர மனைத்தும் இயங்குகின்றது என்றும், அவனாலேயே எல்லாச் செயல்களும் இனிது நடைபெறவேண்டும் என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதியாக நம்பியிருந்தார்கள். இதுவே ஏக தெய்வக் கொள்கை யாகும்.

எனவே, குரைஷியர்கள் கொள்கைக்கும், நாயகமவர்கள் கொண்ட கொள்கைக்கும் முற்றிலும் வேற்றுமை உண்டு என்பது வெளிப்படை. இவ்விரு கொள்கைகட்கும் தொடர்பு என்பது அறவே இல்லை என்பதும் மலையிலக்காம். ஆதலின் குரைஷியர்கள் விழையும் வண்ணம் இவ்விரு

கொள்கைகளையும் அநுட்டிக்கலாம் என்பதும் பொருந்தா நோக்காகும். நாயகமவர்கள் எக்காலத்தும் குரைஷிக்காபிர்கள் வணங்கியவற்றை வணங்கினவர்களல்லர். இனி வணங்கப்போகின்றவர்களுமல்லர். அஃதேபோல் குரைஷியர்களும் ஏக தெய்வக்கொள்கையை இனிதேற்றுத் தம் 360 சிலைகளையும் தகர்த்தெறிந்து சன்மார்க்கராகின்றவர்களுமல்லர். ஆதலாற்றான், குரைஷியர்கள் தம் தூதறிக்கையில் வெளியிட்டவாறு இவ்விரு மார்க்கங்களையும் இணைத்து நடத்துவது என்பது இயலாத செயல் என்று குரைஷியர்கட்கு நல்லறிவுறுத்துமாறு இத் திருவத்தியாயத்தை இறக்க இறைவன் திருவுளங்கொண்டான். இத்திருவத்தியாயத்தில் கூறப்பெற்ற காபிர் என்னும் பதம் இறுதிவரை ஈமான் (மெய்ந்நெறி) கொள்ளாமல் இறப்பவர்களையும் இறந்து போனவர்களையும் குறிப்பிடுகின்றதென்றறிக.

இத்திருவுரை இறங்கியகாலத்து இணைவைக்கும் கூட்டத்தோரில் இருந்த சிலர் இஸ்லாத்தைத் தழுவிச் சிறப்புற்று அல்லாஹ் ஒருவனையே வணங்கினர்கள். அவர்கள் பிற்காலத்தே இஸ்லாத்தைச் சார்ந்தமையால், அவர்களும் அல்லாஹுத் தஆலாவினிடத்தில் முஸ்லிமாகவே இருந்தவர் என்றும் அறிக.

இத்திருவுரைக்கண் 'உங்கள் மார்க்கம் உங்களுக்கே, எனது மார்க்கம் எனக்கே' என்று வரையிறுக்கப்பெற்றுளது. இதனுல் குரைஷியர்களின் மார்க்கத்தில் தலையிட்டு அவர்களை எவ்விதத்திலும் சீர்திருத்தி, அவர்களை இஸ்லாத்தில் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கக்கூடாதென்று குறிப்பிடப்படுவதாகப் பொருள் கொள்ளக்கூடும். ஆதலாற்றான், இத்திருவத்தியாயம் இதற்குப் பின்னர் இறங்கிய அத்தியாயங்களால் (மன்ஸூக்) மாற்றப்பெற்றது என்றும் பிரபல்யமாய் கூறப்படுகின்றது. எனினும் இதுபற்றி ஷாஹ் அப்துல் அஜீஸ் தெஹ்லவி அவர்கள் "இத்திருவத்தியாயத்தின் கருத்து இஸ்லாம் மதத்திற்கும் குப்பார்களின் மதத்திற்கும் எத்துறையானும் தொடர்பில்லை, முற்றும் முரண்கொண்டதாகும் என்பதேயாகும். இதனுல் அவர்களை மோட்சமுடைய கூட்டத்தில் சேர்த்துவிட முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை யென்பதன்று ஆதலால் இத்திருவத்தியாயத்தை 'மன்ஸூக்' ஆனதோர் அத்தியாயம் எனப் பகர்தல் கூடாததாகும்" என்று தெரிவிக்கின்றுர்கள்.

நிச்சயமாக அல்லாஹுத் தஆலாயிடத்தில் (ஒப்புக்கொள்ளப் பெற்ற) மார்க்கம் இஸ்லாமாய் இருக்கும்—அல்குர்ஆன்.

கிறிஸ்துவ மதம், யூத மதம் போன்ற மதங்களிலும் 'ஷிர்க்'கான பல கிரியைகள் மலிந்து காணப்படுகின்றன. எனவே 'ஷிர்க்' என்பது எட்டுணையும் இன்றி, ஏக தெய்வத்துவத்தோடு தூய்மைகொண் டிலங்குவது இஸ்லாம் என்னும் மெய்ந்நெறியே அன்றி வேறெந்நெறியுமில்லை. உண்மை இங்ஙனமாக, காதியானிகள் எம்மதமும் சம்மதம் என்று பிரம ஞான சங்கத்தார் (Theosophists) கூறுவதேபோல் பிரசாரம்புரிந்து வருகின்றனர். இத்தகைய அபிப்பிராயமும், அக்கொடிய அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்ட செயல்களும், பிரசாரங்களும், தலைப்பில் எடுத்துக் காட்டப்பெற்ற திருமொழியால் ஐயந்திரிபற மறுக்கப்படுகின்றமையை அன்பர்கள் கண்டு தெளிவார்களாக.

நிச்சயமாக அல்லாஹுத் தஆலாவாகிறவன் தனக்கு இணை வைப்பதை மன்னிக்க மாட்டான். இதைத் தவிர்த்து இதரப் பாவங்களை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். "அல்குர்ஆன்"

நாயக வாக்கியம்.

(1) ஹஸ்றத் உபாதாபின் ஸாமித் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது :— ஒருமுறை நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்தில், சுவர்க்கலோகத்தைப்பற்றியும், அதன் சுகபோக பாக்கியங்களைப்பற்றியும், அது எத்தகையவர்க்குக் கிடைக்குமென்பதைப் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதுசமயம் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாவது :—

"நீங்கள் உங்கள் ஆன்மார்த்தத்தை யொட்டிய ஆறு விஷயங்களைப்பற்றி அறுதிமானஞ் செய்து கொடுங்கள். யான் உங்களுக்கு சுவர்க்கலோகத்தைப் பற்றி அறுதிமானஞ்செய்து தருகின்றேன். அவை (1) நீங்கள் ஏதேனும் சம்பாஷிப்பீர்களாயின் உண்மையையே பேசுவீர்களாக. (2) நீங்கள் வாக்குறுதியளிப்பீர்களாயின் அதை நிறைவேற்றுவீர்களாக. (3) உங்களிடத்தில் அமானத் (பொருள் பாதுகாப்பு) வைக்கப் படுமாயின் அதைக்காப்பாற்றிக்கொடுப்பீர்களாக. (4) உங்களது மர்மஸ்தானங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவீர்களாக. (5) உங்கள் பார்வையை கீழே தாழ்த்திச் செல்லுவீர்களாக. (6) உங்கள் கரங்களை தடுத்துக்கொள்வீர்களாக (மிஷ்காத்)

மர்ம ஸ்தானங்களைப் பாதுகாத்துக் கொள்வதென்பது விபசாரம் முதலிய துர்ச் செயல்களினின்றும் புறம்போந்து நடத்தலாம். பார்வையைக் கீழே தாழ்த்திக்கொள்வதென்பது பரஸ்திரீகளை காமக்கண்கொண்டு நோக்காது திருஷ்டியைத் தரைமீது செலுத்திப் போதலாகும். அங்ஙனம் எதிர்ப்பாரா விதமாய் அன்னிய ஸ்திரீகள் கண்ணுக்குப் புலனாய்விடின், இயன்றவளவில் பேணிக் கொள்ளல்வேண்டும். கரங்களைத் தடுத்துக் கொள்வதென்பது, தம் கரத்தால் பிறரைத் துன்புறுத்தல் ஒழித்தும், பிறர் பொருளை கவர்தல் நீக்கியும், மோசஞ்செய்தல் ஆகியவைகளை விட்டும், மற்றும் கையினலாகும் எல்லாப் பாவச்செயல்களை விலக்கியும் சன்மார்க்கம் சாதித்தலாகும்.

உண்மை முஸ்லிமின் நான்கு அம்சங்கள்.

(2) அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) ஒருமுறை நாயகம் (ஸல்) அவர்களது திருச் சமுகத்துக்குச் சென்று "அல்லாஹ்வின் ரஸூலே! நான் நற்குணமும் நல்லொழுக்கமும் பெற்று, இகபர மிருலோகபாக்கியமும் அடைவதற்கான நல்ல அம்சங்களை எனக்குப் போதியுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்கள். எனவே, எம்பெருமானர் (ஸல்) அவர்கள் கூறியதாவது :—

"உண்மை முஸ்லிமுக்கு நான்கு ஒழுக்கங்கள் அத்தியாவசியமாகும். அந்நான்கும் தங்கள் வாழ்க்கையில் அமைந்துவிடுமாயின், உலக சுக சாதனங்கள் குறைந்துபோவதைப் பற்றி தங்களுக்கு யாதொரு விசாரமுமிராது. அவை, (1) அழகிய நற்குணம் (2) ஹலாலான உணவைப் புசித்தல் (3) உண்மையினையே பேசுதல் (4) அமானத்தைப் பாதுகாத்துத் தரல்."

பொறுமை, மன்னித்தல், சகித்தல், தன்னைப்போல் பிறரையும் பாவித்தல் அழகிய் குணங்களாகும். சுயப்பிரயாசையால் ஒழுங்கான முறையில் சம்பாதித்துண்ணல் ஹலாலாகும். பொய்சொல்லாதிருத்தல் உண்மை பேசுவதாகும். பிறர் நம்மை நம்பியிருக்குங்கால் அன்னரை மோசஞ்செய்யாதிருத்தல் அமானத்தாகும்

உயரிய அறம்.

(3) நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஜ்றத் அபூஹுரைரா (ரலி) பின் வருமாறு அறிவிக்கின்றார்கள் :—

"அறம் வழங்குதல் என்பது ஒவ்வொரு முஸ்லிமின் மீதுமுள்ள கடமையாயிருக்கின்றது என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினர்கள். எனவே, ஜனங்கள் நாயகமே அவனிடம் செல்வம் யாது

மில்லையேல் என் செய்வது?'' என்று வினவினார்கள். அதற்கு நாயகமவர்கள், 'அப்படிப்பட்டவர் தம் கரங்களைக் கொண்டு பாடுபடட்டும், அதனின்று தன்சொந்தத்துக்காகவும் பிரயோஜனம் பெறட்டும், அதினின்று ஓர் சொற்பப் பகுதியைத் தர்மமும் செய்யட்டும்' என்று பதில் கூறினார்கள். மீண்டும் 'ஜனங்கள், நாயகமே! இவ்விதம் பாடுபடவும் அம் மனிதனால் முடியாவிட்டால் என் செய்வது?' என்று வினவினார்கள். அதற்கு நாயகமவர்கள் அப்படியானால் 'தேவை (ஹாஜத்) உடையவர்க்கு உதவி புரியட்டும்' என்று பதில் கூறினார்கள். மீண்டும் இதுவும் செய்ய இயலவில்லையாயின் என் செய்வது என்று வினவினார்கள். எனவே நபிகள் நாயகமவர்கள் அப்படியானால் அவன் பிறர்க்கு நன்மையைப் பற்றி போதிக்கட்டும் என்று பதிலிறுத்தார்கள். மீண்டும் 'ஜனங்கள், நாயகமே! இதுவும் முடியாவிட்டால் என் செய்வது' என்று உசாவினார்கள். 'அப்படியானால் எல்லாத் தீமைகளையும் விட்டகன்று அவன் தன்னையேனும் பாதுகாத்துக் கொள்ளட்டும். இதுவே இன்னவனுக்கு மேன்மையான தருமமாகும்'' என்றார்கள் எம்பெருமானார்கள். (மிஷ்காத்)

இதினின்று புலனாவது புனிதமான பெரும் பெரும் செயல்களைச் செய்ய இயலாவிடினும் தன் சக்திக்கியன்றவாறான சிறிய நற்காரியத்தையேனும் புரிதல் வேண்டுமென்பதாகும். பொதுவாக இஸ்லாம் சன்மார்க்கத்தில் சர்வ அனுஷ்டானத்திலும் மானிட கோடிகளுக்கு சவுகரியத்தையே செய்தளிக்கப்பட்டுள்ளது இஸ்லாமிய ஷரீஅத்து மிக மிக இலேசாக்கப்பட்டுள்ளதைப் போல் வேறெந்த மதமும் இலேசாகப் பெறவில்லையென்று கூறுவது பொருந்தும். ஒரு காரியம் பொருள் கொண்டு செய்ய முடியாவிடின் உடல் சிரமம் கொண்டு செய்தல் வேண்டும்; இதுவும் முடியாவிடின் வாய் கொண்டு போதிக்க வேண்டும்; இதுவும் முடியாவிடின், மனத்தினால் நன்மையினைக் கருதல் வேண்டும்.

சகித்தலும் நன்றியறிதலும்.

(4) நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி யுள்ளார்களென அத்தியந்த சஹாபியொருவர் அறிவிக்கின்றார்:—

''உங்களில் ஒருவர் தம்மைவிட (செல்வத்திலும், அழகிலும்) மேலான ஒருவரைக் காண நேரிட்டால், தன்னைவிட (செல்வத்திலும், அழகிலும்) மிகத் தாழ்ந்த மற்றொருவரையும் கண்டு கொள்ளக் கடவர்'' (புகாரி.)

செல்வத்திலும், அழகிலும் சிறந்த வரைக் காணநேரிடின், தமக்கு அவ்விதச் சிறப்புகளில்லாமைக்காக வருந்தாது சகிப்புத் தன்மையும், அமைதியும் கொள்ளல் வேண்டும். மேலும் தன்னினும், பொருளினும், அழகிலும் கீழ்த்தரமாயுள்ள மற்றொருவரைக் கண்டு அவரைக் காட்டினும் தமக்கு ஆண்டவன் அதிகச் சிறப்பினை யளித்துள்ளான் என்பதற்காக நன்றியறிதல் (ஷுக்ரு) பாராட்ட வேண்டும். ஈதன்றிச் சிறந்தோரைக் கண்டு பொறாமை கொள்ளலும், தாழ்ந்தோரைக் கண்டு செருக்கடைதலும் அடாதனவாம்.

அனாதை சம்ரக்ஷணை

(5) ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:—லோக தயாளர், அனாதைகள் ரக்ஷகர் நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்கள் அனாதைச்சிறார், சிறுமியர் பால் அளவிறந்த வாஞ்சையும், அன்பும் கொண்டு சம்ரக்ஷிப்பார்கள். ஏழை அனாதைச் சிறுவர்களை அன்புடன் தம்மில்லத்திற்கு அழைத்துச் சென்று உணவளித்து போஷிப்பார்கள். தெருவில் திரியும் அனாதைச்சிறார்களைக் கண்டால்அருகில்அழைத்து தலையைத் தடவி அன்புமொழி கூறுவார்கள். ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களை யெல்லாம் நோக்கிப் பின் வருமாறு கூறினார்கள்:—

''பல முஸ்லிம்களிடையே யிருந்து ஒரு அனாதையை எந்த ஒரு முஸ்லிம் தம் அகத்துக்கு அழைத்துச் சென்று அன்னமும், பானமும் அளித்து போஷிப்பாரோ, அப்படிப்பட்ட முஸ்லிமை அல்லாஹு தஆலா சுவர்க்கலோகத்தில் பிரவேசிக்கச் செய்வான். மேலும், மன்னிப்பதற்கு அரியபாவங்கள் எல்

லாமும் கூட (சுவனப் பிரவேசத்துக் குள்) மன்னிக்கப்பட்டு விடும்''—திர்மதீ,

அனாதைகளைக் கடுகடுத்து விரட்டி விடக் கூடாதென்று குர்ஆனிலும் போதிக்கப் பட்டுள்ளது. அனாதைகளைப் போஷித்தல் உயர்வும் நலனும் வாய்ந்த தொண்டாகும்.

ஈமானின் இன்பங்கள்.

(6) ஹஜ்ரத் அபூஹுறைரா (ரலி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்:— ஒருமுறை நந்திரு நபிநாயகம் (ஸல்) அவர்கள் ஈமானின் (நன்னம்பிக்கையின்) சிறப்பினைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தார்கள். அதுசமயம் ஈமானின் இன்பங்களைப்பற்றிக் கூறியதாவது:—

"மூன்று நற்கருமங்களுள்ளன: இவற்றினை நிறை வேற்றுவோர் ஈமானின் இன்பத்தை நுகர்கின்றனர். அத்தகையோர்:—(1) ஒரே ஆண்டவனாகிய அல்லாஹ்வையே வணங்குபவர், (2) வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரு மில்லையென (திரிகரண சுத்தியோடு) நம்பிக்கைக் கொண்டிருப்பவர். ஒவ்வோராண்டிலும் தமது முதலினின்று அதற்குரிய தர்மத்தை (ஜகாத்தை) மனப்பூர்வமாய் அளிப்பவர். (அபூதாவூத்)

அல்லாஹுவுடைய வணக்கம் புரியும் தெய்வ பக்தருக்கு ஹிருதயம் பிரகாசித்து ஆன்மார்த்த இன்பமுண்டாகும். அவ்வாறே ஏக தெய்வ நன்னம்பிக்கைப்பூண்டு தெய்வ தியானத்தி லீடுற்றோர்க்கும் பக்தி மேலீட்டாற் சொல்லற்கரிய பரவசமுண்டாகும். மேலும் தாம் பாடுபட்டுச் சம்பாதித்த பொருளினின்று ஒரு பகுதியை ஏழை எளியோர்க்கென்று திருப்தியோடு மனமு வந்து தர்மமளிப்பவர், தம் பொருளைக்கொண்டு ஏழை எளியோர் பசி தவிர்ந்து, முகமலர்ந்து, வயிறார உண்டு அகம் பூரிப்பதைக் கண்டு ஆனந்தப் பெருக்கிலாழ்வர். இவ்வாறே ஒவ்வொரு நற் கருமத்திலும், புண்ணியமும், பிரதி பலனும், ஆன்மார்த்த இன்பமும் இருக்கின்றன.

தன்னைப்போல் பிறரை நேசித்தல்.

(7) அல்லாஹ்வைக் கொண்டும், ரஸூல் (ஸல்) அவர்களைக் கொண்டும் ஈமான் கொண்ட முஸ்லிம் ஒவ்வொருவரும் தமக்குள் சகோதரத்துவம், சமரஸம், பரஸ்பர நட்பு இவைகளைப் பூண்டு வாழவேண்டியது கடமையாகும். முஸ்லிம் சதோரர் ஒருவர்க்கு இடுக்கண் நேர்ந்த காலையில் அன்னவர்க்குபகாரம் புரிதல் சசோதர வாஞ்சையாகும் இவ்வுபகாரம் ஈமானுக்கு அவசிய மானதுமாகும். தன்னைப்போல் பிறரையும் சுகதுக்கங்களில் பாவிக்கவேண்டு மென்பதைப்பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :—

"உங்களில் எந்த ஒருவரும் தன் ஆன்மாவுக்கு விரும்பிக்கொள்வதை தம் சகோதரருக்காகவும் (சமத்துவமாக) விரும்பமாட்டாரோ அதுவரை அவர் ஈமான் (பூரண நன் நம்பிக்கைக்) கொண்டவராக மாட்டார். (புகாரி முஸ்லிம்)

இஸ்லாமிய சகோதரத்துவப்படி பரோபகாரம் புரிதல் அவசியமாகும். இங்ஙனமிருக்க ஒருவரை மற்றொருவர் மோசஞ் செய்து தீங்கு விளைவித்துக்கொண்டிருப்பது எத்துணைக் கொடும் பாவமாகுமென்பதை சொல்லவேண்டியதில்லை. இத்தகைய தீச்செயல்களினின்று விலகி தூய்மையாய் அன்பு, பரநலம், சகாயம், சகோதர நேயம், பிறர்க்கு தீங்கு செய்யாமை ஆகிய புண்ணியச் செயல்களில் ஒவ்வொருவரும் ஈடுபட்டு நடந்துய்யக் கடவர்.

பிணக்குண்டாக்காதீர்கள்.

(8) பொதுஜனங்களுக்குத் தலைவர்களென இருந்துகொண்டு, அப் பொதுமக்களுக்குள் பிணக்குண்டாக்கி வேடிக்கை பார்ப்பவர்களைப்பற்றி நபிகள் நாயகம் ரஸூல் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாவது :—

"எவனொருவன் ஒரு கூட்டத்தாருக்கிடையே பிணக்குண்டாக்கி ஒரு சாணளவேனும் அவர்களைப் பிரித்துவிடுவானாயின், அன்னவனது கழுத்தினின்று (தன்மையினின்று) இஸ்லாத்தின் கயிறானது (வழிப்பட்டு நடத்தலானது) கழன்று போய்விடும்."

அதாவது, ஜனங்களுக்கிடையே கலகத்தையுண்டாக்குபவனின் ஈமானும் இஸ்லாத்துக்கு வழிப்படுதலும் பறிபட்டுப் போகிறதென்பது உண்மையாகும்.

حفاظة الإسلام مدراس

நபிகள் திலகத்தைப் பின் பற்றுதல்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒப்பற்ற வாழ்க்கையானது இம் மானிட சமூகத்திற்கே ஓர் படிப்பினையாகவும், உதாரணமாகவும் இருப்பதால், அவர்களைப் பின்பற்றி ஒழுகுபவர் இகபரமாம் இருதரச் சாதனங்களையும் பெற்றுய்வர் என்று சென்ற நமது மாசிகையின்கண் எடுத்தியம்பியுள்ளோம். அவ்வாறு அப் பெருந்தகையாரின் திருவடிச் சுவட்டினைப் பின்பற்றி வாழ்க்கை நடத்திய சிலர் தம் உயர்வு, அவர்கள் பெற்ற பேறு, இவைகளை ஈண்டு விளக்குதல் எமது கடமையாகின்றது.

லோக நாயகரை மக்கள் நான்கு வகையில் பின்பற்றி வாழ்க்கை நடத்தினார்கள். அரசாட்சியில் அவர்களைப் பின்பற்றிய 'குலபாக்கள்', 'அமீர்கள்', 'சுல்தான்கள்' இவர்கள் ஓர் வகையினர்; இமாம்கள் ஓர் வகையினர்; 'அவுலியாக்கள்' மற்றோர் வகையினர்; வணிகர்கள் பிறிதோர் வகையினராவர்.

முதன் வகையைச் சார்ந்த குலபாக்களும் சுல்தான்களும் ஒவ்வொரு விஷயத்திலும் நபிகள் பெருமானின் திருவடிச் சுவட்டினையே பின்பற்றி ராஜரீகம் புரிந்து வந்தனர். நாயகமவர்கள் காலத்திற்குப் பின்னர் கிலாபத் ஆட்சி நடைபெற்று வந்தது. இவ்வாட்சி முறை நிகழ்ந்த சொற்ப காலத்திற்குள்ளாகவே, சனநாயக ஆட்சிமுறையினை அடிப்படையாய்க் கொண்ட பெரியதோர் அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பெற்றது. நபிகள் திலகத்தின் வாழ்க்கையினையே தமக்கு ஓர் படிப்பினையாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு செங்கோலோச்சிய சுல்தான்கள் உலகப் பிரசித்தி யடைந்தனர் என்பது சரித்திர வாயிலாய் இற்றைக்கும் உணரக்கிடக்கின்றது. இவர்களின் அரும் பெரும் செயல்கள் இற்றைக்கும் அச்சரிதைகளைப் படிப்போர் மனத்தை மகிழ்வெய்தச் செய்கின்றன என்பதை யாரே மறுக்கவல்லார்? இவர்களின் பான்மை இங்ஙனமாக, பிற்காலத்துத்தோன்றிய சில முஸ்லிம் மன்னர்கள் நாயகமவர்கள் திருவாக்கினையும் திரு குர்ஆனின் உயரிய போதனையினையும் மறந்தவர்களாய் அகப்பேய் பிடித்தலைவினார்கள். இது தொட்டு முஸ்லிம்கள் பிற்போக்கடையத் துவங்கினார்கள். எனவே, நாயகமவர்களைப் பின்பற்றிப் போந்த உத்தம மன்னர்கள் புகழுக்குரியார்களாக, இத்தகையார் இகழுக்கே இலக்காயினர்.

நிற்க; இரண்டாவது வகையினராய இமாம்களில் நாயகமவர்களைப் பின்பற்றி அழியாப் புகழ் எய்தியவர்கள் பலர். இத்தகையர்களுள் இமாம்களான அபூ ஹனீபா, ஷாபிஈ, மாலிக்கி, ஹம்பலி (ரஹிமஹுமுல்லாஹ்) ஆகிய நால்வர்களைப்பற்றிச் சிறிது நோக்குவாம், இந் நால்வரும் திரு குர் ஆனுக்கும் நாயகத் திருமொழிக்கும் இயைபு கொண்டொழுகி வந்தனர். இம்மட்டோ! திரு குர் ஆனையும் ஹதீதுகளையும் முற்றும் ஓதி, அவைகளை எளிதில் இனிதுணருமாறும், அவைகளைத் தம் வாழ்க்கையில் எடுத்தாளுமாறும் அரும்பாடுபட்டுத் திரட்டி உலக உபகாரம் புரிந்தனர். தங்கள் பிக்ஹு சட்டங்களை திருகுர்

ஆனுக்கும் ஹதீதுக்கும் நேர்படச் செய்த ஓர் காரணத்தானே இந்நால்வரையும் முஸ்லிம் சனகோடிகள் பாராட்டிப் பின்பற்றி வருகின்றார்கள். இந்நால்வரும் இதுகால் இப்பூவுலகினின்றும் மறைந்தனர். எனினும், அவர்கடம் இதோபதேசங்களும் அவர்கடம் சட்டதிட்டங்களும் மக்கள் நெஞ்சத்தில் உயிர்கொண்டு உலவுகின்றன. இந்நால்வரின் சட்டதிட்டங்கட்கும் ஆழ்ந்த பொருள்செறிந்த இதோபதேசங்கட்கும் உலமாக்கள் விரிவுரைகளாக ஆயிரக்கணக்கான நூல்களை வெளியிட்டுள்ளனர்; இவைகள் யாவும் முக்காலத்திற்கும் பொருத்தமானவை என்பது அகில உலக சம்மதமாம். அறிவிற் குறைந்த சிலர், இமாம்களால் இயற்றப்பெற்ற பிக்ஹூச் சட்டங்கள் தற்காலத்திற்கு இசைந்தனவன்று என்று வீணுரை புகல்கின்றனர். என்னே! இவர்கடம் அறியாமை!

மூன்றாம் வகையினராய அவுலியாக்களும் திருகுர்ஆன், ஹதீது, இமாம்களின் சட்டங்கள், இவைகளினின்றும் தினைத்துணையும் பிறழாது தூநெறியில் வாழ்க்கை நடத்திவந்தார்கள். அல்லும் பகலும் அல்லாஹ்வையே துதித்தும் போற்றியும் வணங்கியும் வந்தார்கள். சன்மார்க்கத்தில் வரையிறுக்கப்பெற்ற எல்லாச் சுபகாரியங்களையும் ஒன்று தவறாமல் நடத்தினார்கள். நபிகள் நாயகமவர்களையே தமது வழிகாட்டியாக எண்ணி அவர்களின் நன்னடக்கைகளைப் பின்பற்றி நடந்து வந்தனர்.

இத்தகைய ஒழுக்கத்தினாலும் தவத்தாலும் இறைவனின் திருவருளைப் பெற்றதோடு, 'இல்ஹாம்' என்னும் ஞானோதயத்தையும் அடைந்தார்கள். இறைவன் அவர்கள் முன்னிலையில் பற்பல அற்புதங்களையும் நிகழ்த்தினன். இவ்வற்புதங்களைக் கண்ணுற்று இஸ்லாத்தைச் சார்ந்தவர்களும் எண்ணிறந்தவராவர். முஸ்லிம்களும் இம் மகான்களால் நல்வழிப்பட்டனர். மகா தவசீலர்களாய் இம்மகான்களில் உலகப்புகழ் பெற்றவர்களும், 'பக்தாத் நகரின்கண் அடக்கம்செய்யப்பெற்றவர்களுமான குதுப் நாயகம், கௌதுல் அஃலம் செய்யிதுனா, முஹையுதீன் அப்துல் காதிறு ஜெய்லானி (குத்திஸ ஸிர்ருஹூ) அவர்களின் திவ்வியத் திருவாழ்க்கையினைப் பிறிதோரிடத்து இவ் வெளியீட்டிற் பிரசுரித்துள்ளோம். இப்பெரியார் நம் நெறிக்காக இளமைதொட்டு முதுமைவரை ஆற்றிய தொண்டைப்பற்றிப் படிக்க படிக்க இவர்கள்பால் உண்மையான முஸ்லிம்கட்கு அளவு கடந்த அன்புண்டாகும் என்பது திண்ணம்.

நான்காம் வகையினர் வணிகர்களாவர். அஃதாவது வியாபாரத் துறையில் சீவினோபாயம் செய்து வந்தவர்கள். நாயகமவர்களும் வாணிபத்தொழிலை மேற்கொண்டமை பற்றி, இத்தொழில் புனிதமான ஓர் சீவனோபாயமாயிற்று. எனவே முஸ்லிம்கள் இத்துறையை மற்றெல்லாவற்றினும் உயர்வாகக் கொண்டனர். நாயகமவர்கள் செய்தவாறு இவ்வாணிபத்தைப் பொருள் நலன்பற்றியே இவர்கள் ஆற்றாது, தாங்கள் சென்ற இடங்கள் தோறும் நாயகமவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தைப் பரவச் செய்து வந்தார்கள். இதனை இவர்கள் தம் கடமையாகப் பாவித்தமை மிகவும் போற்றத் தக்கதாய் உள்ளது. அக்காலத்து முஸ்லிம்கள் வாணிபத்தில் மற்றெல்லா நாட்டினரினும் சிறந்து விளங்கியவாற்றால் அவர்கள் சென்ற நாடுகள் பல; அவர்கள் இறக்குமதி செய்த நாடுகளும் பல. எனவே, இவர்கள் இவ்வேற்றுமதி இறக்குமதித் தொழிலோடு இஸ்லாமியப் பிரசாரமும் ஆற்றி வந்தமை நம் மதத்திற்கு வரம்பிலா வளத்தை அளித்தது என்று கூறவும் வேண்டுமோ? இவர்கள் தொழுகையினாலும் மற்றும் இவர்கள் மேற்கொண்ட நல்லொழுக்கங்களாலும் பிறநாட்டினர் மனதில் ஓர் புதிய

எழுச்சி உண்டாயிற்று. இதன் பயனாயும் பலர் முஸ்லிம்களாயினர் என்பதற்கு, சென்னை மாகாணத்தில் வாணிபம் புரிய வந்த அராபியர்களாலேயே இஸ்லாம் பரவிற்று என்பதே ஆதாரமாகும். நபிகள் நாயகமவர்களை இவ் ஒழுக்கத்தில் பின்பற்றிய இவ்வணிகர்களால் இகச் சாதனங்களும் மிகைபடக் கிடைத்தமை போன்று பரசாதனமும் உண்டாயிற்று என்று பகரவும் வேண்டுமோ? இஸ்லாம் மதம் மனித முன்னேற்றத்திற்குத் தடையெனக் கூறித் திரியும் வஞ்சகர் இவ்வுண்மையினை உய்த்துணர்வார்களாக.

முஸ்லிம் சகோதரர்காள்! நமது நாயகம் அவர்கடம் திவ்விய சரித்திரத்தை ஊன்றிப் படிமின்; அதில் பொதிந்து கிடக்கும் உண்மையினை உணர்மின்; உணர்ந்து உணர்ந்த அதற்கேற்ப ஒழுகுமின்; இதனால் இகபர இரு நற் சாதனங்களையும் பெற்றுய்மின்!

வலிகள் நாயகம்

கவ்துல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் திவ்விய வாழ்க்கை

அல்லாஹ்வின் அன்பர், பக்தர்கள் திலகம், உயர் திருவாளர், சற்குணசீலர், இஸ்லாமியத்தலைவர், தாஜுல் அவ்லியா, கவுதுல் அஃலம், ஹஸ்ரத் ஷெய்க் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி (குத்திஸ ஸிர்ருஹு) அவர்களது திவ்விய வாழ்க்கைச் சரிதையினையும், இஸ்லாத்தின் சேவைகளையும், அப்பெருந்தகையாரின் தெய்வபக்தி, நல்லொழுக்கம், தூய்மை ஆகிய குணாதிசயங்களையும் நம் உண்மை முஸ்லிம் பக்தகோடிகள் ஆண்டாண்டுதோறும் றபீஉல்ஆகிர் மாதமதில் அன்பு விசுவாசத்தோடு கண்ணியமாய் கொண்டாடி வருகின்றனரென்பது வெளிப்படை. வலிகள் நாயகம் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள் இளமைமுதல் முதுமைவரை சீரிய சுபாவம், சற்குணம், நல்லொழுக்கம்ஆகியவைகளைப் பூஷணமாய்த்தம்மிடத்தே அமையப்பெற்று புருஷச்சிரேஷ்டராய்த்திகழ்ந்ததுமன்றி, பாமரஜனசமூக ஆசார சீர்திருத்தத்திற்காகவும், மக்களின் மெஞ்ஞான உணர்ச்சிக்காகவும், சன்மார்க்கக் கல்வி முன்னேற்றத்திற்காகவும் அல்லும் பகலும் பாடுபட்டு வந்துள்ளார்களென்பதை யாரே மறுக்கவல்லார்? அத்தகைய மெய்ச்சீலரைக் கொண்டாடுதல் அவசியமேயாகும். மேலும் அத்தகைய மகான்களை வாயார மனமாரப் புகழ்ந்து போற்றிகொண்டாடுவதுடன், அப்பெருந்தகையோரின் வாணாட் சரிதையையும் நல்லொழுக்கங்களையும் நாம் ஒவ்வொருவரும் நன்கு தெரிந்துகொண்டு, அவர்களின் சீரிய அடிச்சுவட்டைப் பின்பற்றி நடத்தல் முக்திக்குரிய சாதனமாகுமாதலால், நம் ஔலியாக்கள் திலகமான முஹ்யித்தீன் நாயகமவர்களின் திவ்விய சரித்திரச் சுருக்கத்தை ஈண்டு நேயர்கள் முன் சமர்ப்பிக்கின்றனம்.

பிறப்பு, வளர்ப்பு, கல்வி, சேவை.

தாஜுல்அவ்லியா-மஹ்பூபெ ஸுப்ஹானி-ஹஜ்ரத் ஷா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (குத்திஸ ஸிர்ருஹு) அவர்கள் ஹிஜ்ரி 471-ம் ஆண்டு ஷஅபான் மாதம் 29-ந்தேதி—அதாவது ரமலான் மாதம்முதற் பிறையிரவன்று விடியற்காலை திங்கள்கிழமை இத் தரணியின்கண் ஜனனமானார்கள். (470-ம் ஹும் பிறந்தார்கள் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்). முஹ்யித்தீன் நாயகமவர்கள் பிறந்த ஸ்தலம் ஈரான் (பர்ஷியா) தேசத்திலுள்ள “ஜீலான்” என்னுமூராகும். இதனாலேயே அவர்கள் திருப் பெயரோடு “ஜீலானி” என்று தேயநாமமும் கூட்டப்பெற்றுளது. ஹஜ்ரத் முஹ்யித்தீன் வலியுல்லா அவர்களது பிதாவின் பெயர் ஸய்யித் அபூஸாலிஹ்மூஸா என்பதாகும். தந்தை வழி வம்சப் பரம்பரையானது பண்டை இஸ்

லாத்தின் நான்காவது கலீபாவான ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள்பால் போய்ப் பொருந்துகின்றது. முஹ்யித்தீன் நாயகமவர்கள் தாயார் பெயர் "உம்முல்கைர் ஹஜ்ரத்பாதிமா தானிய்யா" என்பதாகும். இம் மாதாவின் வழியான வம்ச பரம்பரையானது நபிகள் திலகம் முஹம்மத் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள்பால் சேர்கிறது. எனவே கௌது நாயகம் அவர்கள் நபிகள் நாயகத்தின் குலத்தைச்சார்ந்த "ஸய்யிதா" வார்கள்.

முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானியவர்கள் நற்குணசீலராகவும்,விவேகசாலியாகவும், நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவந்தார்கள். வயது ஐந்து பூர்த்தியாயிற்று. முஹ்யித்தீன் நாயகமவர்களை தம் பெற்றோர்கள் கல்விப்புகட்டுவான் வேண்டி ஜீலான் என்ற ஊரில் பிரபல ஆசிரியராயிருந்து வந்த ஹஜ்ரத் அப்துல் ஜலீல் அவர்கள் திருச்சமுகத்தில் ஒப்படைத்தார்கள். முஹ்யித்தீன் நாயகமவர்களின் அன்னையார் கல்வி ஞானமும் மார்க்க பக்தியும், தெய்வவணக்கமு முள்ள தேவியாக விளங்கினார்கள். இவ் வன்னையார் குர்ஆன் ஷரீபை பாராயணஞ் செய்யுங்கால் முஹ்யித்தீன் ஹஸ்ரத்தவர்கள் சிறுவரா யிருப்பினும் குர்ஆன் வாக்கியங்களை பிரீதியுடன் செவியேற்று மனனம் செய்துகொள்ளும் சுபாவத்தினராகவும், அன்னையுடன் அமர்ந்து தொழுதுக் கொள்ளும் வழக்கமுடையவராகவு மிருந்துவந்தார்கள். எனவே உஸ்தாது அவர்கள் இப்புனித பாலகருக்கு சிரமமில்லாமல் குர்ஆன் ஷரீபை ஓதிக் கொடுத்தார்கள். வலியுல்லாஹ் அவர்கள் கூரிய அறிவுடையவர் களாக யிருந்தமையால் குர்ஆன் ஷரீபை வெகு இலகுவாய் மனனஞ்செய்து பாராயணஞ் செய்பலானார்கள்.

மற்ற சிறு பிள்ளைகள் தம் சம வயதுச் சிறார்களுடன் சேர்ந்துகொண்டு வீண் விளையாட்டுகளி லுழல்வதுபோலும், சேஷ்டைகள் புரிவதுபோலும் நாதர் அவர்கள் ஒருபோதும் நேரத்தை வீண் போக்கினார்களல்லர். கல்வி கற்பதிலும், அதைப் பயிற்சி பண்ணுவதிலும், ஆண்டவனைத் தியானித்து வணங்குவதிலும் நேரத்தை இனிது கழித்து வந்தார்கள். மேலும் வலியுல்லாஹ் அவர்கள் தமது பாட்டனாரான செய்யித் அப்துல்லாஹ் அவர்கள் சகவாசத்தில் அதிகம் உறவாடி வந்தமையால் பெருந்தன்மையும், சற்குணமுமுடையவராய் விளங்கினார்கள். கல்வியிலும் தேர்ந்தார்கள். தெய்வபக்தி வணக்கத்திலும் சிறப்புற்றோங்கினார்கள். நம் நாயகம் அப்துல்காதிர் ஜீலானி யவர்கள் ஆரம்பக் கல்வியை தம் ஜீலான் என்னு மூரிலேயே கற்றார்கள்.

பிறகு கௌது நாயகம் அவர்கட்கு வயது பதினேழாயிற்று. பெற்றோர் தம் புதல்வரை இஸ்லாமிய உயர்தரக் கலாஞானத்தில் தேற்றித் தம்கண்ணாரக்கண்டு பூரிக்கவேண்டுமென எண்ணினார்கள். பிறகு பதினெட்டாவது வயதில் ஹஜ்ரத் அவர்கள் தம் அன்னையாரிடம் அனுமதிபெற்று இஸ்லாமிய உயர்தரக் கல்வி கற்பான் பக்தாத் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். அதுகாலை பக்தாத் நகரமானது சர்வகலாஞானத்திற்கு ஓர் உறைவிடமாக (தாருல் உலூமாக) விளங்கிற்று.

உம்முல்கைர் இரண்டாவது பாத்திமா தானிய்யா அன்னையாரவர்கள் தம் திருக்குமாரரை கல்வி கற்பதற்காக பக்தாத் நகருக்கு அனுப்பி வைத்தபோது, சமீபத்தில் காலஞ் சென்றுபோன தம் கணவரால் விட்டுச்சென்ற 80 பவுன்களில் 40 பவுன்களை தம் குடும்பச் செலவுக்காகவென்று வைத்துக்கொண்டு, மற்ற 40 பவுன்களை தம் திருக்குமாருடைய சட்டையில் அக்குளருகே ஒருபை தைத்து அதில் வைத்துவிட்டார்கள். மேலும் தம் குமாரரை பக்தாது நோக்கி அனுப்பி வைத்தபோது "மகனே! நீ எந்த சந்தர்ப்பத்திலும், எக்காரணத்தை முன்னிட்டும் பொய்ம்மொழி கூறவே வேண்டாம், உண்மையையே உரைப்பாயாக" என்று உபதேசித்து அனுப்பினார்கள்.

அப் பண்டைக்காலத்தில் இந்நவீன நாகரிகக் காலத்தி லிருப்பது போன்ற துரிதப்பிரயாண சாதனங்களில்லா திருந்தமையால், பிரயாணிகள் நடையாகவோ, ஒட்டகை முதலிய வாகனங்களில் ஆரோகணித்தோதான் சென்றுகொண்டிருந்தார்கள். ஹஜ்ரத் அப்துல்காதிர் ஜீலானி யவர்கள் எளியவர்களா யிருந்தமையால் பக்தாதுக்கு அதுபோழ்து சென்றுகொண்டிருந்த காபிலா ஒன்றுடன் தாமும் ஒருவராய்ச் சேர்ந்து கொண்டு பாதசாரி

யாகவே நடந்து சென்றார்கள். இவர்களெல்லோரும் சென்ற பாலைவனப் பாதையின் ஓர் இடத்தில் வழிப்பறிக் கொள்ளைக் கூட்டத்தினர் ஹஸ்ரத் அப்துல் காதிர் ஜீலானியவர்களுடனிருந்த காபிலாக்களை வழி மறித்து கொள்ளையடித்து எல்லாருடைய பொருட்களையும் கொள்ளைகொண்டு சென்றுவிட்டார்கள். இது சமயம் ஒரு கள்வன் நமது வலியுல்லாஹ் அவர்களையணுகி "ஏ! சிறுவ! உம்மிடம் என்ன இருக்கிறது?" என வினவினன். வலியுல்லாஹ் அவர்கள் மெய்யே பேசும் சுபாவத்தினராயும், அன்னையின் சொல் வழுவா உத்தமராயுமிருந்தமையால், அக்கள்வனை நோக்கி "என்னிடம் நாற்பது பவுன்கள் இருக்கின்றன" என்று உண்மை மொழிந்தார்கள். உடனே அக் கள்வன் மூட்டை முடிச்சுகளிலும் சாமான்களிலும் அப்பவுன்களைத் தேடி அயர்ந்தான். மீண்டும் ஹஜ்ரத் அவர்களை நோக்கி "எங்கே இருக்கின்றன?" என்று வினவினன். அதற்கு ஹஜ்ரத்தவர்கள் "எனது அங்கியின் அக்குள் பையுள் இருக்கின்றன" என விடை பகர்ந்தார்கள். கொள்ளையிடப்படும் இந்நேரத்தில், இருக்கும் பொருளை மறைத்துக்கொள்ள வேண்டிய இந்நெருக்கடியான சமயத்தில், ஒரு சிறுவர் உண்மையை ஒளியாது வெளிப்படையாய்ப் பகர்ந்தமை யுணர்ந்த அக்கள்வன் வலியுல்லாஹ்வின்மீது அன்பும், அச்சமும், விசுவாசமும் பூண்டவனாகி, அச்சிறுவரை தனது கள்வர்த்தலைவன் இருக்கும் மலைச் சிகரத்துக்கு அழைத்துச் சென்றனன். ஆங்கும் அக் கள்ளர்கோன் ஹஜ்ரத் வலியுல்லாஹ் அவர்களை விசாரித்தனன். இதற்கும் நம் ஹஜ்ரத் அவர்கள் முன்போலவே உண்மையை எடுத்தோதினர். இச்சீரிய சிறுவரின் சிறந்த சற்குணத்தைக் கண்டு நாணிய அக்கள்வர் தலைவனும், ஏனைய கள்வர்களும் வலியுல்லாஹ்வின்பால் பற்றும், விசுவாசமுமுடையவர்களாய் அச்சிலரை மன்னித்ததோடு, இவர்களிடமிருந்து திருவுபதேச தீக்ஷையும் பெற்று சன்மார்க்கத் தொண்டராயினர். மற்றக் காபிலாக்காரர்களின் சொத்துக்களையும் திருப்பியளித்து விட்டார்கள். மேலும் அக்குள் பையிலிருந்த நாணயங்களைத் தொடாமல் தங்கள் சார்பாகவும் சன்மானமளித்து, தங்கள் ஆளைத் துணையனுப்பி பக்தாத் வரை கொண்டுபோய்ச் சேர்த்தும் வந்தார்கள். "மாதா மொழியைப் பேணுவார்க்கும், எக்காலும் மெய்ம்மையே பேசுவார்க்கும் மேன்மையுண்டென்பது" இதனால் நன்கு விளங்குகிறதன்றோ!

நமது கவுதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானியவர்கள் க்ஷேமமாய்ப் பக்தாது நகர் சென்று, தக்க ஆசிரியர்களையணுகி அன்னவர்களிடம் பன்னாள் இருந்து கல்வி பயின்று சர்வ கலைகளிலும் சிறுகச் சிறுகத் தேர்ந்தார்கள். தம் ஜீலானிலேயே குர்ஆன் ஷரீபை மனனஞ் செய்த ஹாபிஸாய் விளங்கினர்களாதலால், இங்கு குர்ஆன் ஷரீபுக்குப் பொருட் கற்று தப்ஸீர் கலையிற்றேர்ந்தார்கள். மேலும் நபிகள் நாதர்த் திருமொழியாகிய ஹதீஸ், மார்க்கச் சட்ட திட்டங்களாகிய பிக்ஹு, அகாயித், உஸூல், அதப் ஆகியவற்றினையும் நன்கு பயின்று தேர்ந்தார்கள். மேலும், பல மகான்களையும் பெரியோர்களையு மணுகி ஆன்மார்த்தம், வேதாந்தம், தெய்வ ஞானம் ஆகியவற்றையும் கற்றுணர்ந்தார்கள். மேலும் தியானத்தின் பாங்குகளையும், "கல்வத்" எனும் ஏகாந்த வணக்க முறைகளையும், திக்ரு, பிக்ரு, முஷாஹதா, முராகபா முதலியவைகளையும் உணர்ந்து தேர்ந்தார்கள்.

முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் சாதாரண எளிய வாழ்க்கையுடையவர்களாயிருந்தார்கள். தெய்வ பக்தி அபரிமிதமாக வகித்து இரவும் பகலும் அல்லாஹுத்தஆலாவை வணங்கிக் கொண்டேயிருப்பார்கள். ஏகாந்தமாய் வெளியிடங்கட்கும், மைதானம் வனம் முதலிய ஜனசஞ்சாரமில்லா இடங்கட்கும் சென்று அல்லாஹுத்தஆலாவை தியானித்துத் தவம் இயற்றிக்கொண்டிருப்பார்கள். நம் வலியுல்லாஹ் அவர்கள் பக்தாதில் கல்வி கற்ற பின்னர் ஞானியாகவும், தபஸியாகவும் விளங்கிய போது சுமார் 25-ஆண்டுக்காலம்வரை இராக் (மெஸபடோமியா) தேசத்தைச் சேர்ந்த வனங்களிலும், வெளியிடங்களிலும் தனிமையாக வதிந்து, கந்தமூலங்களைப் புசித்து, ஊற்று நீரை அருந்தி ஆண்டவனை நோக்கித் தவம் புரிந்து வந்தார்கள். இக்காலங்களில் வலியுல்லாஹ் அவர்கள் இரவும் பகலும் ஓயாது ஆண்டவனைத் தியானித்துப் பஜித்துக்

கொண்டிருப்பார்கள். இரவு காலத்தில்நபில் தொழுகையில் குர்ஆன் ஷரீப் முழுமையையும் பாராயணஞ்செய்து தொழுது முடிப்பார்கள். அநேக ஆண்டுகள் வரை இஷாத் தொழுகைக்காக செய்த ஒலுவிலேயே பஜ்ரு தொழுகையை தொழுது வந்துள்ளார்கள். அநேகமாக இராக் காலங்களிலேயே ஆண்டவனை அதிகமாக வணங்குவார்கள். 40 வருடங்கள் வரை இரவில் தூங்காமல் இஷாவின் ஒலுவை கொண்டே பஜ்ரு தொழுகையை நிறைவேற்றி யுள்ளார்களென ஷெய்கு அபுல் அப்பாஸ் அஹ்மத் என்னும் பெரியார் கூறியிருக்கிறார்கள்.

மேலும் நமது குத்புல் அக்தாப் முஹ்யித்தீன் வலியுல்லாஹ் அவர்கள் கல்வி ஞானத்திற்றேர்ந்த பின் அக்கால பக்தாதின் பெரியாராய் விளங்கிய ஹஜ்ரத் ஷெய்கு அபூஸயீது மக்தூமி (ரஹி) அவர்களிடம் தீக்ஷா ஞானமும், பிரதிநிதி என்னும் பதவியும் பெற்று விளங்கினார்கள். தாம் பெற்றுள்ள கல்வி ஞானங்களைப் பிறர்க்கும் போதித்துப் பொதுமக்களை சன்மார்க்கத்திற்கும்கொண்டு வரலானார்கள். குத்பு நாயகர் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானியவர்கள் உலகவாழ்க்கையைத் தூசென மதித்து தெய்வ பக்தியும், தவமுமே போதுமென்றெண்ணி காட்டுக்குச் சென்றுவிட்டார்கள். பிறரையும் சீர்திருத்த வேண்டிய கடமையைக் கைவிட்டுச் சென்ற இவர்கள்பால் ஒரு சமயம் ஸர்வரே ஆலம் ரஸூல்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொர்ப்பனத்தில் தோன்றினார்கள். அதுபோழ்து எப்பெருமானார் (ஸல்) அவர்கள் குத்புல் அக்தாப் அவர்களை நோக்கி "நீவிர் அழகிய உபதேசத்தைக் கொண்டும், நட்பமொழிகளைக் கொண்டும் ஜனங்களை உன்இறைவனின் சன்மார்க்கத்தளவில் அழைப்பீராக" என்ற குர்ஆன் வாக்கியத்தை ஓதி உபதேசித்தார்கள். எம்பெருமானாரைச் சொர்ப்பனத்தில் கண்டு திருவுபதேசம் பெற்ற இதுசமயம் அந்த உத்தமப்பெரியார்க்கு வயதுநாற்பதும் ஒரு மாதமும் 16 நாட்களும் பூர்த்தியாயிருந்தது. எனவே உடனே அவர்கள் தம் ஏகாந்த தவ வணக்கத்தை விட்டெழுந்து நேரே பக்தாத் நகர் வந்து அன்றை வெள்ளிக்கிழமையன்று மஸ்ஜிதின் மிம்பரின்மீதேறி ஜனங்களுக்கு மதோபதேசம் புரியலானார்கள். அற்றைநாள்தொட்டு இடைவிடாது பிறர்க்கு உபதேசம் புரிந்து சன்மார்க்கத்திற்குக் கொண்டு வருவதையே சிறந்த பணியென உழைத்து வந்தார்கள். கவுதுல் அஃலம் அவர்களது திரு உபதேசத்தைக் கேட்டுக் கரையா மனத்தினரும், உருகா உளத்தினரும் இல்லையெனக் கூறலாம். இவர்களது திருவுபதேசப்பயனால் நேர்வழிப் பெற்று உத்தமர்களானோர் பல்லாயிரம் பேர்களாவர். எங்கணும் இவர்களது பிரசங்கம் பிரபல்யமடைந்துவிட்டது. பிற மதஸ்தவர்களுங் கூட இப்பெரியாரின் அரிய சொற்பொழிவின் மீது ஆவற்கொண்டு இஸ்லாமிய திருவுபதேசங்களைச் செவி மடுப்பாராயினர். இதன் பயனாய்ப் பிற மதஸ்தர்கள் பலர் இஸ்லாத்தைத் தழுவி முஸ்லிம்களானார்கள்.

அல்லாஹ்வுடைய நேயர்களாகிய அவுலியாமார்களுக்கெல்லாம் கிரீடமாகவும், தலைவராகவும், திலகமாகவும் விளங்கிய குத்புல் அக்தாப் ஹஜ்ரத் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களது திருவுபேசத் தத்துவங்களை அக்காலத்திலிருந்த வேறு பல அவுலியாக்களும் மனமுவந்து சிரந்தாழ்த்திக் களிப்போடு கேட்டுச் செல்வார்கள். இக்காலத்தில் குதுப் நாயகம் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தீ (அஜ்மீரி குத்திஸ ஸிர்ருஹு) அவர்கள் வாலிபத் தசையினராக யிருந்தார்கள். இவர்களும் முஹ்யித்தீன் நாயகமவர்கள் திருச்சமுகத்துக்கு வந்து தீக்ஷைபெற்று அவர்களின் சிஷ்யர்களில் ஒருவராய் விளங்கினார்களென்று சரித்திரம் சாற்றுகின்றது.

முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள் இங்ஙனம் மதோபதேசம் புரிந்து ஷிர்க்கு பித்அத்துகளை அகற்றி வந்த சமயமானது அப்பாஸியா வர்க்கத்தாரின் கிலாபத் ஆதிக்கம் நலிவுற்றிருந்த காலமாகும். பனீஉமையாக்களது அதிக்கிரமங்கள் அதுகாலை அதிகம் தாண்டவமாடிக்கொண்டிருந்தன. இன்னோரின் எதிர்ப்புகளால் ஸிரியா, தமிஷ்கு ஆகிய இஸ்லாமிய நாடுகள் சீரழிந்து நிலைக்குலைந்திருந்தன. இஸ்லாத்தின் கீர்த்தி நயவஞ்சர்களால் நலியத்தொடங்கிற்று. இவற்றினையெல்லாம் கண்ணுற்ற நம்கௌது நாயகம் அவர்கள் அம் மாந்தர்களை சன்மார்க்கத்திய வழிப்படுத்தி சமூகத்தைப் புனருத்தாரணம் புரிந்து இஸ்லாமியக் கீர்த்தியைப் பாதுகாப்பதற்காக அரும்பாடு பட்

டார்கள். எனவே இப்பெரியாரவர்களுடைய ஓயா முயற்சியின் காரணமாகவும், சீர்திருத்தத் திட்டங்களின் பொருட்டாகவும் ஜனங்கள் நேர்வழிக்குவந்து இஸ்லாத்தின்கீழ் நிலைகின்றனர். இஸ்லாத்துக்குப் புத்துயிர் பிறந்தது. பலதேயத்து மன்னரும் நம் குத்புல் அக்தாபின் கட்டளைக்கும் உபதேசத்துக்கும் சிரம்பணியலாயினர். ஆகவே அப்துல்காதிர் ஜீலானி அவர்கட்கு "முஹ்யித்தீன்" (சன்மார்க்கத்தை உயிர்ப்பிக்கச்செய்தோர்) என்னும் சிறப்புப்பெயர் அறிஞர்களால் வழங்கப்பெற்றது.

பின்னர், ஹஸ்ரத் ஜீலானி (குத்திஸ ஸிர்ருஹூ) அவர்கள் தமக்கு எல்லாம்வல்ல இறைவனால் அருளப்பெற்றிருந்த தெய்விக சக்தியின் காரணமாக அல்லாஹ் தஆலாவின் பற்பல கராமத்து (சிறப்பற்புதம்)களைச் செய்து ஜனங்களை சன்மார்க்கத்துக்கழைத்து வந்தார்கள். பல்லோரின் கடும்பிணிகளைப் போக்கினர்களென்றும், பல மூடர்களுக்கு ஹிருதய ஞான ஒளியைப் புகட்டினர்களென்றும், பலரின் குருட்டு நேத்திரங்களைத் திருஷ்டியுடையனவாய்ச் செய்தார்களென்றும், பல மூர்க்கருடையவும், கொள்ளைக்காரர்களுடையவும், கல்மனங்களைச் சாந்த சன்மார்க்கத்தின் பக்கல் கரைத்தார்களென்றும், இன்னும் பல அதிசயங்களைச்செய்தார்களென்றும் சரித்திரங்கள் கூறுகின்றன. இம் மாபெரும் புண்ணியசீல மஹானுடைய மகிமையை விளக்கும் அற்புதச் சம்பவங்களும், நற்குண நிகழ்ச்சிகளும், புனித நூதனச் செய்திகளும் பல நூற்களில் அளவின்றிக் கூறப்பட்டிருக்கின்றன. விரிவஞ்சி ஈண்டு அவை விடுக்கப்பெற்றன.

சுருங்கக்கூறுமிடத்து நம் தாஜுல் அவுலியா குத்புல் அக்தாபு ஷெய்க் முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி அவர்கள் தாம் கல்வி கற்ற இளமைப்பருவம்தொட்டு இறுதிவரை சன்மார்க்கத் துறைக்காகவும், ஜனசமூக சீர்திருத்தத்திற்காகவும், இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காகவும், துன்மார்க்கத்தை அகற்றுவதற்காகவும், அல்லாஹ் ரஸூலின் திருநாமங்களை இத்தரணியில் ஓங்கச் செய்வதற்காகவும் பாடுபட்டு பெரும் பயன் விளையச்செய்தார்களென்பது உண்மை. ஆகவே, நாம் ஒவ்வொருவரும் அப் பெருந்தகையார்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி இஸ்லாத்தின் பாதுகாப்புக்கும், பிரசாரத்திற்கும், ஜனசமூக சீர்திருத்தத்திற்கும், புனருத்தாரணத்திற்கு முழைக்கவேண்டியது நம் கைவிடாக் கடமையாகும்.

மரணமும் படிப்பினையும்.

பிறகு குத்புல் அக்தாப் கௌதுநாயகம் அவர்கள் இத் தரணியில் செய்து முடிக்க வேண்டிய நற்சேவைகளை ஒருவாறு செய்து முடித்து விட்டார்கள். எனவே நிலையிலா இம் மண்ணுலகை விடுத்து என்றும் நிலைபெற்ற அல்லாஹ்வின் சன்னிதானத்துக்கேக மனமுவந்தார்கள். இத் தரணியில் 93 ஆண்டுகள் வரை நல்வாழ்வு நடாத்தித் தமது 93-ம் வயதில் அதாவது ஹிஜ்ரீ 564-வது ஆண்டு "ரபீஉல் ஆகிர்" மாதம் 11-ம் தேதி திங்கட்கிழமை யன்று இரவில் இஷாவுக்குப்பின் தொழுகைக்குச் செய்த ஒலுவுடன் இம் மண்ணுலகை நீத்து ஆண்டவன் திருச்சமுகம் அடைந்தார்கள் (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்). இவர்களது புனித மரணம் நேர்ந்தமை "ரபீஉல் ஆகிர்" ஆகிய இம் மாதமாதலால், அவர்கள்பால் விசுவாசகர்களாகிய நம் முஸ்லிம்கள் அந்நாளைக் கௌரவப்படுத்தி மார்க்கத்திற்கு ஆகுமான முறையில் கொண்டாடுவார் களென்பதில் ஐயமின்று. அங்ஙனம் கொண்டாடுவோர் கொண்டாடுவதோடமட்டு மிருந்துவிடாமல், அவ்வரும்பெரும் மகான் அவர்கள் இஸ்லாத்திற்காகவும், முஸ்லிம் சமூகத்திற்காகவும், எளிய ஜனங்களுக்காகவும் எவ்விதத் தொண்டுகளும், சீர் திருத்தங்களும், பரோபகாரங்களும் புரிந்து வந்தார்களோ அத்தகைய அருஞ்சேவைகளை அவசியம் புரிந்து தற்கால நெருக்கடியான நிலைமையில் இஸ்லாமிய கண்ணியத்தையும் கீர்த்தியையும் ஓங்கச் செய்வார்களென எதிர் பார்க்கின்றோம். இந் நற்கருமம் இனிது ஈடேற இறைவன் திருவருள் புரிவானாக. ஆமீன் வஸ்ஸலாம்.

அபூபக்கர் சித்தீக் (ரலி) என்னும் நூலில் தாவூத்ஷா இழைத்த தவறு

நபிகள் நாயகத்தின் மாட்சி; ஊன்றிப் படியுங்கள்.

(சென்ற ஜூலை மாதத் தொடர்ச்சி)

உதாரணமாக, மக்கா நகரில் ஸ்தாபகம் பெற்றுள்ள "தாருன்னத்வா" என்னும், நகர சபாபாளிகையில், அந்நகரின் கோத்திரத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஏகோபித்துக் கூடி இனி, முஹம்மதை விட்டுவைப்பது சரியல்ல, அவரைக் கொலை செய்தே தீரவேண்டும் என்று முடிவுகட்டி அவர்களைக் கொன்று விடும்படி பறையடித்து விட்டார்கள்.

அன்றிரவு நபீ அவர்கள் தங்கள் வீட்டில் சயனித்திருந்தார்கள். கொலைஞர்கள் அப்பொழுதே நபீ அவர்கள் சயனித்திருந்த வீட்டைச் சுற்றி முற்றுகை போட்டுக்கொண்டிருந்தார்கள்.

வீட்டை விட்டுப் புறப்பட்டு ஹிஜ்ரத்துச் செல்லும்படி ஆண்டவனுடைய கட்டளை நபீ அவர்களுக்குக் கிடைக்கவே, நபீ அவர்கள் உடனே வெளிக் கிளம்பி, சத்துருக்களுக்கு மத்தியிலிருந்து, அவர்கள் பார்வையிலேயே அவர்களைக் கடந்து சென்றார்கள். அவ்விதம் போகும்போது அவர்களுடைய நா,

"நாம் அவர்களுக்கு முன்னும் பின்னும் மதில்களை எழுப்பி யிருக்கின்றோம். அவர்கள் பார்க்கக் கூடாதபடி அவர்கள் கண்களுக்குமுன் திரைபோட்டு விட்டோம்"

என்ற ஆண்டவனுடைய திருவாக்காகிய அற்புத வரப்பிரசாத வாக்கைக் கூறிக் கொண்டே சத்துருக்களை விட்டு அகன்று விட்டார்கள்.

விவேகிகளே! பக்தர்களே!

இந்தச் சந்தர்ப்பம் நபீ அவர்கள் சத்துருக்களிடம் சிக்கிக் கொண்ட சந்தர்ப்பமில்லையா?

ஆண்டவனுடைய அற்புத வரப் பிரசாத சக்தி, சத்துருக்களின் நேத்திரங்களை, என்ன செய்தது பார்த்தீர்களா?

றசூல் அதிபர் அவர்கள், தங்களை ஒதுக்கிக்கொண்டு போவதைக் கண்ணிருந்தும், விழிகண் குருடர்கள் போல், சத்துருக்கள் பார்த்துக்கொண்டு நின்றார்கள்:—

இதனால் நபிகள் நாயகம் சிக்கிக் கொண்டார்கள், ஆனால் கொல்லப்படவே யில்லை யல்லவா?

றசூல் நாயகமும், அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும், தௌர் மலைக் குகையில்போய்த் தங்கி அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் மடியில் றசூல் அதிபர் சிரம் வைத்து, அயர்ந்த நித்திரை போய்க்கொண்டும் சித்தீக் (ரலி) விழித்துக்கொண்டும் இருந்தார்கள்:—

சத்துருக்கள் பின் தொடர்ந்து வந்து நபீ அவர்களைத் தேடி அந்த மலையைச் சுற்றி வரும்போது இந்தக் குகையை அடுத்துவந்து இதற்குள்ளும் முஹம்மத் இருக்கலாம் என்று பரஸ்பரம் பேசிக்கொண்டார்கள்.

குகையினுள் விழித்துக் கொண்டிருந்த சித்தீக் (ரலி) நபீயவர்களை உற்று நோக்கி, "தூதரே! இதோ! சத்துருக்கள் நம்மை அடுத்து வந்துவிட்டார்கள்" என்று சிணுங்கினார்கள். நபீ அவர்கள் கண் திறந்து பார்த்துத் தோழரே! "சஞ்சலப்படாதே, ஆண்டவன்நம்மோடிருக்கின்றான்" என்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நபீ அவர்கள் கடவுளிடத்தில் ஸ்திர நம்பிக்கை வைத்துக் கூறிய இந்த வாக்கைத் திரு குர்ஆன் போற்றிக் கூறும் விதத்தை நோக்குங்கள்.

(ஒரு தோழர், மற்றொரு தோழரை நோக்கி) "சஞ்சலப்படாதே, கடவுள் நம்மோடிருக்கிறான்" (என்றனர்) என்பதாம்.

சத்துருக்கள் பரஸ்பர வாக்குவாதத்தில் அவ்விருவரும் குகைக்குள் இருப்பதைத் தெரிந்து கொள்ளாமல், குகையின் வாயில் விட்டுக் கடந்துவிட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் தெரிந்து கொள்வதென்ன? சித்திக்(ரலி) சத்துருக்கள் நெருங்கிவிட்டாதாகச் சொல்லிக் கண்ணீர் விடுகிறார்கள். நபீ அவர்களோ! "சஞ்சலப் படாதே! கடவுள் நம்மோடிருக்கிறான்" என்று சொல்லி அவர்களுக்கு ஆறுதலையும், தைரியத்தையும், ஸ்திர நம்பிக்கையையும், கொடுத்தருள்கிறார்கள்.

நபீ அவர்கள், "சஞ்சலப்படாதே கடவுள் நம்மோடிருக்கிறான்" என்று சொல்லிய இவ் வாக்கானது, 'சத்துருக்கள் சமீபத்திலடுத்தா லென்ன? குகைக்குள் பிரவேசித்தாலென்ன? நாம் அவர்கள் கைவசம் சிக்கிக்கொண்டா லென்ன? எல்லாக் காலத்திலும், ஸ்திதியி லும் கடவுள் துணை நமக்குண்டு. கடவுள் என்றென்றும், என்னைப் பார்த்துக்கொண் டிருக்கிறான். சத்துருக்கள் அவனுடைய கைவசத்திலிருக்கிறார்கள். என்மேல் கை போட அவர்கள் சக்திபெறக் கடவுள் இணங் கான்' என்ற ஆழ்ந்த கருத்தை அவ்வசனம் தாங்கி நிற்கவில்லையா?

வாசகர்களே! இந்தச் சந்தர்ப்பத்தில் நபீ அவர்கள், சத்துருக்கள் கையில் சிக்கிக் கொண்டால், "நிச்சயமாகக் கொல்லப் பட்டே போயிருப்பார்கள்" என்று ஒரு பி.ஏ. டிக்ரி கூத்தாடுவது எவ்வளவு அஞ் ஞானம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

சஞ்சலப்படாதே! பயப்படாதே! அதை ரியப்படாதே! "கடவுள் நம்மோடிருக் கிறான்" என்று திருக்குருஆனில், கூறப்பட் டிருக்கும், வாக்கை உச்சரித்த, எந்த நாவும் "சிக்கிக்கொண்டால் நிச்சயமாகக் கொல்லப் பட்டே போயிருப்பார்கள்" என்று உளறிக் கொட்டுமா? நிச்சயமாக என்றும் கொல்லப் பட்டே (ஏ) என்றும், நபீ அவர்கள்பால், உறுதிப்படுத்தும் ஒரு நா, ஒரு பேதையி னுடைய அல்லது ஓர் அஞ்ஞானியினுடைய நாவேயாகும்.

நபீ அவர்கள், மிகக் களைத்துப்போய், ஒரு மரத்தடியில் சயனித்துக் கொண்டிருக்கும் போது, நபீ அவர்களைக் கொலை செய்துவிட, பதுங்கித் திரிந்துகொண்டிருந்த சத்துரு ஒரு வன், உருவின வாளுடன் அம் மரத்தடியில் வந்து படுத்துக்கொண்டிருந்த நபீ அவர் களைத் தட்டி எழுப்பி, "ஏ! இப்பொழுது உன்னை என் கையிலிருந்து தப்புவிப்பவன் யாவன்?" என்று மிக்க சந்தோஷத்துட னும் வீரத்துடனும் வினவினான். நபீ அவர் கள் அவனை ஏறெடுத்துப்பார்த்து மிக்க தைரியமாய் இப்பொழுதும் என்னைக் காப்ப வன், "சர்வ வல்லமையுள்ள என் ஆண்ட வனே!" என்று விடை பகர்ந்தனர், சத்துரு, நுபுவ்வத்தின் திருமுகம் நோக்கவும், நுபுவ் வத்தின் தொனி அவன் செவியில் படவும், பலமுள்ள அவன் கை முடமாகி, நபீ அவர் களை வெட்டுவதற்குக் கை எழாமல் கையி லிருந்த வாள் கீழே நழுவி விழுந்து விட்டது. கையிருந்தும், அது முடக்கையாயிற்று.

வாசகர்களே! இது எப்படிப்பட்ட சந் தர்ப்பம்? இங்கே நபீ அவர்கள் சத்துருவி னிடம் சிக்கிக்கொள்ளவில்லையா? ஆகவே "சிக்கிக்கொண்டால் நிச்சயமாகக் கொல்லப் பட்டே போயிருப்பார்கள்" என்றெழுத இற கெடுப்பது எவ்வளவு அறியாமை!

"எஹூதிய்யா" என்ற ஒரு பெண், நபீ அவர்களை நஞ்சிட்டுக் கொல்ல உபாயஞ் செய்து, நபீ அவர்களையும், அவர்கள் சிஷ்ய ரில் சிலரையும் தன் வீட்டுக்கு விருந்துக் கழைத்துவந்தாள். அம்மாது நபீ அவர்கள் முன், ஆகாரம் கொண்டுவந்து வைத்தனள். நபீ அவர்கள் உணவைக் கையில் எடுத்ததும் சிஷ்யர்களை நோக்கி "சிஷ்யர்களே! இந்த உணவைப் புசியாதீர்கள். இதில் விஷம் கலந் திருப்பதாய் உணவு என்னிடம் முறையிடு கிறது" என்றார்கள். சிஷ்யர்கள், தாலத்தில் கைபோடாமல் இருந்துவிட்டார்கள். உடனே "எஹூதிய்யா" என்ற மனுஷியை நபீ அவர் கள் அழைத்து வினவ, யதார்த்தத்தை ஒப் புக்கொண்டாள். பின்னர், நபீ அவர்கள், அவளை நோக்கி, "நான் இன்னான் என்று தெரிந்துகொள்ளாத அறிவற்ற பெண்ணே! என் ஆண்டவன், உன் கருத்துப்படி, இக் காரியத்தில் உனக்குச் சித்தி கொடுக்கமாட் டான்" என்று அருளினார்கள்.

அபிமானிகளே! இந்தச் சந்தர்ப்பம் எப் படிப்பட்டதென்பதையும், இந்தச் சந்தர்ப் பத்தில் நபீ அவர்கள் அருளியதையும் நோக் குங்கள். இதிலிருந்து நபீ அவர்களைக்

கொலைசெய்ய எவரும் சக்தி பெறமாட்டார் என்பது வெட்ட வெளிச்சமாய்த் தெரிய வில்லையா? இங்கே நபீ அவர்கள் சிக்கிக் கொள்ளவில்லையா? "சிக்கிக்கொண்டால், நிச்சயமாகக் கொல்லப்பட்டே போயிருப் பார்கள்" என்று சொல்லுவது எவ்வளவு விடலைத்தனம்?

"உஹத்" யுத்தத்தில், நபீ அவர்களைச் சத்துருக்கள் சுற்றி வளைந்து கொண்டார் கள். நபீ அவர்களுடைய திருமேனி சத் துருக்களின் சாவதானத்திலிருந்தது ஆயு தங்கள் சுழன்றன; வீசப்பட்டன; அம்புகள் மாரிபோல் வருஷித்துக் கொண்டிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில், நபீ அவர்களுடைய முகச் சாயலைப்போல் இருந்த நபீ அவர் களின் சேனை வீரரான, மஸ்அப் என்பவர் சத்துருக்களால் கொல்லப்பட்டுப் போனார். வெட்டினவன், அவரை, நபீ அவர்கள்தான் என்று கருதி, "முஹம்மத் மாண்டார்" என்று சத்தமிட்டான். இருதரப்புச் சேனை களும், இந்த யுத்தத்தில் பரஸ்பரம் நெருங் கிக் கைகலந்து போர் செய்து கொண்டமை யால், யுத்த ஆரவாரத்திலும், குழப்பத்தி லும், ஒருவரையொருவர், சடுதியில் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. "முஹம்மத் கொலை செய்யப்பட்டார்" என்ற வதந்தி யுண்டாகவே, நபீ அவர்களுடைய வீரர்கள் மனச் சோர்வடைந்து, யுத்தத்தில் பதிய வைத்திருந்த அவர்கள் கால்கள் நடுக்க மடைந்தன. உடனே நபீ அவர்கள் தங்கள் சேனைகளுக்கு மத்தியில் காட்சி கொடுக்க, பின் அவர்கள் மனோதிடனும், தைரியமும் அடைந்தார்கள். "நபீ அவர்கள் கொல்லப் பட்டார்கள்" என்ற வதந்தியை வீரர்கள் எதிரிகள் மூலம் கேள்விப்பட்டுச் சோர் வடைந்ததால், நீங்கள் சத்தியத்துக்காக மத யுத்தம் செய்யும்போது, எந்த ஸ்திதியிலும் சோர்ந்து போகவோ, தளர்ச்சியடையவோ, முன் வைத்த காலைப் பின் வைக்கவோ கூடா தென்று ஆண்டவன் நபீ அவர்கள் மூலம் வீரர்களுக்கு ஒரு கேள்வி போட்டு, அவர்கள் உள்ளத்தைத் திடப்படுத்துகிறான். அதா வது:—

"முஹம்மத் ஒரு தூதரைத்தவிர வேறல்ல. அவருக்குமுன் தூதர்கள் சென்றிருக்கிறார் கள். ஆதலால் அவர் இறந்தால் அல்லது கொல்லப்பட்டால் நீங்கள் பிற்கால் வாங்கித் திரும்பிப் போய்விடுவீர்களா? ஆனால் பிற் கால் வாங்கித் திரும்புகிறவன் கடவுளுக்கு யாதொரு தீங்கும் செய்யவில்லை. ஆனால் கடவுள் நன்றி யறிதலுள்ளவர்களுக்கு உட னே பலன் அளிப்பான்."

இதனால், நாம் தெரிந்துகொள்வ தென்ன வெனில் 'முஹம்மத் இறந்தோ, கொல்லப் பட்டோ போனார்கள் என்று கேள்விப்பட்ட வதந்தியினால் நீங்கள் பிற்கால் வைக்கலாமா? நீங்கள் சோர்வு பெறலாமா? மனமாறலா மா? அப்படி நீங்கள் அதைரியப்படுவது தப்பு, பிற்கால் வைப்பதினால், கடவுளுக்கு ஒரு தீங்குமில்லை; உங்களையே நீங்கள் நஷ்டப் படுத்திக் கொள்ளுகிறவர்களாவீர்கள்' என்ப தாம்.

மேற்கண்டவாறு அவர்களுக்கு வினாப் போட்டு, பின்னர் நபீ அவர்கள் இந்தச் சமயம் கொல்லப்படவோ, மரணமாகவோ மாட்டார்கள் என்பதில் அவர்கள் உறுதி வைக்கும் பொருட்டாக முன் கூறிய வாக்கி யத்தைத் தொடர்ந்து அடுத்த வாக்கியத்தில் அருளியிருப்பதாவது:—

"கால வரையறை செய்து எழுதப்பட்ட கடவுளுடைய கட்டளையினாலன்றி ஒன்றும் இறக்கத்தக்கதல்ல."

இதனால் நாம் தெரிந்து கொள்ளுகிற தென்னவெனில், 'நபீ அவர்கள் கொல்லப் பட்டோ இறந்தோ போனார்கள் என்ற வதந்தியைக் கேட்டு ஏன் சோர்வுற்றீர்கள்? அவருடைய மரணத்தின் காலமும், முடிவும் என்னிடத்திலுள்ள ஞானம். எனது கட்டளை யினாலன்றி ஒருவரும் மரிப்பதில்லை. ஆகை யால், உங்கள் றசூலின் பிரிவினை எப்பொழுது என்று நான் மட்டிட்டிருக்கும்போது, இந் தப் போலி வதந்தியினால் நீங்கள் மனமாற லாமா? என்பதுதான்.

மேலே பிரஸ்தாபித்த, "உஹத்" யுத்தத் தில் நபீ அவர்களை எதிரிகள் சூழ்ந்து கொண்டார்கள். மேலும் கைகலந்தபோர் நடந்தது. நபீ அவர்களைக் குறிப்பாகச் சத் துருக்களில் ஒவ்வொருவரும் கண்வைத் திருந்தார்கள். அந்தச்சூழலிலிருந்து தப்ப மார்க்கமில்லா திருந்தது இந்தச் சமயத்தில் அவர்கள் எப்படிக் காக்கப்பட்டார்கள் என் றால், நபீ அவர்கள் முன்பின் வலமிடம்

தேவ தூதர்களைக் கொண்ட ஒரு காலாட் படையானது, நபீ அவர்கள் பிராணனைக் காக்கும் பொறுப் பேற்றுக் கொண்டிருந்தது.

"உஹத்" யுத்த சரித்திரத்தைப் படித்திருப்போர் எவரும் நபீ அவர்கள் இந்த யுத்தத்தில் எவ்வாறு சிக்கிக் கொண்டிருந்தார்கள் என்பதைச் செவ்வனே தெரிவர்:—

சன்மார்க்கத்தில் நிற்பவரே!

இங்கே நபீ அவர்கள் எதிரிகளின் கூட்டத்தில் சிக்கிக்கொள்ள வில்லையா? "சிக்கிக் கொண்டால் நிச்சயமாகக் கோல்லப்பட்டே போயிருப்பார்கள்" என்று திருகுர்ஆன் போதனையைத் துணையாகக் கொண்டவன் எவனும் சொல்லமாட்டான்.

நபீ அவர்கள் ஓர் இரவில் தம்முடைய கூடாரத்தில் சயனித்திருக்க, அவர்களுடைய பக்த சிஷ்யர்கள் சிலர் சிலராகக் கூடாரத்தைச் சுற்றி மாறி மாறிப் பாராக் கொடுத்து வந்தனர். இந்த நிலையில்,

(நபியே) "ஜனங்கள் உம்மைக் கொல்லுவதிலிருந்து, ஆண்டவன் உம்மைக் காப்பாற்றுவான்."

என்ற ஆண்டவன் திருவாக்கு பிறக்கவே நபீ அவர்கள் கூடாரத்தி லிருந்து தமது முகத்தை வெளியே காட்டிப் பாராக் கொடுப்போராகிய தமதருமைச் சீடர்களை நோக்கி "சிஷ்யர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஜாகைக்குச் சென்று நித்திரை செய்யுங்கள். சர்வ வல்லமையுள்ள எனது ஆண்டவன் என் உயிரைக் காப்பதற்குத் தானே பொறுப்பெடுத்துக் கொண்டிருக்கிறுன்' என்று திருவாய் மலர்ந்து சிஷ்யர்களைப் போகும்படி அனுப்பிவிட்டார்கள்.

(தொடரும்)

தா. இ. ஹாபிஸின் தடுமாற்றம்

பிக்ஹு சட்டங்களெல்லாம் உறுதி அற்றதாம்

எம். வி. அப்துல் ஜப்பார் சாஹிப் வரைவது

சோதரீர்!

சென்ற 11-7-30ந் தேதியில் வெளியான தா. இ. வில் நம் சன்மார்க்கத்திற்கு முற்றும் விரோதமான விஷயங்கள் பல காணப்படுகின்றன. அவை மறுக்கப்படாவிடின் பொது ஜனங்கள் வழிகெட்டுப் போக நேரிடுமென்பதை கீழே குறிப்பிடும் விஷயங்களிலிருந்து காணக் கிடக்கின்றது. ஆனது பற்றி அந்தத் தவறுகளை விளக்கத் துணிந்தனன்.

தா. இ. ஆசிரியர்கள் பத்திரிகைகளிலும், நூற்களிலும் அளவு கடந்த தவறிழைத்தனர். அவைகளை எடுத்துக் காட்டப்பட்டபொழுது அவற்றைத் தவறு என்று ஒப்புக்கொண்டு திருத்தி விடுவதாகவும் உறுதி கூறினர். அதன்படி நாளிதுவரை ஒன்றுஞ் செய்யாமலிருக்கும் நிலைமையில் மேன் மேலும் சன்மார்க்கக் கொள்கைக்கு முற்றும் விரோதமாய் எழுதுவதையே தொழிலாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் இத் தவறுதலான கொள்கைக்கு ஆதாரமாக எவரேனுங் கூறுகின்றூர்களா என்பதைத் தேடிப் பிடித்து அவர்களின் கூற்றுக்களையே தங்களின் வழிகெட்ட கொள்கைக்கு மேற்கோளாக எடுத்து எழுத முன் வருகின்றனர். ஆனல் அவர்கள் எத்தகைய கொள்கையுள்ளவரென்பதையும் அவர்களுக்கு பெரும்பாலான உலமாக்களிடத்தில் எத்தகைய மதிப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதையும் அவர்களுடைய நிலைமை எவ்விதமென்பதையும் இவ்வாசிரியர்கள் பொது ஜனங்களுக்கு விளக்கிக் கூறுவதில்லை.

இக்காலத்தே அரபி பாஷையை எழுதவும் படிக்கவும் தெரிந்த பலதரப்பட்ட கொள்கை

யுடையவர்கள் தோன்றி தங்களின் மாருன கொள்கைகளை நூல் ரூபமாய் எழுதிப் பரப்பி வருகிருர்களென்பது நேயர்கள் நன் கறிந்த விஷயம். இத்தகையினர்களில் ஒருவரையே தா. இ. ஆசிரியர்கள் தங்களுக்கு குருவாகக்கொண்டு தங்களின் மாறுபட்ட கொள்கையை பொது மக்களிடையே பரத்த முன் வருகிருர்கள் என்பதை என்போன்ருர் எடுத்து விளக்கிக்கூற முன் வந்தால் பொருமை கொண்டு தம் பத்திரிகையைத் துருவித் துருவிக் குற்றங் காண்கின்றனர்கள் என்று வரைகின்ருர்கள். அவர்கள் சன்மார்க்கத்தை கடைப்பிடித்தொழுகி எழுதி வருவார்களாயின் யாரே அவர்களின் கூற்றை மறுக்கத்துணிவர்!

தா. இ. வில் ஷைகுதந்தாவியின் வியாசமொன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது; அதில் கூறப்படுவதாவது:—

"தற்காலத்தில் வழங்கிவரும் பிக்ஹு என்னும் சட்ட திட்டங்களெல்லாம் அநேகமாய் உறுதியற்ற லன்னியாகவே காணப்படுகின்றன..........மக்களால்நிர் மாணிக்கப்பட்டிருக்கும் பிக்ஹு என்னும் சட்ட திட்டங்களை ஆராய்ந்து பார்த்தால் அவற்றிலொன்றும் நன்மை விளையப்போவதாய்ப் பொது மக்களுக்குத் தோன்றவில்லை.... ....பிக்ஹிலான சட்ட திட்டங்களெல்லாம் லன்னியாக யிருப்பதினல் அவற்றை ஷரீஅத்துடைய சட்ட திட்டங்களுக்குள் கொணர்ந்து நுழைப்பது கூடாது"

அக்கட்டுரையை அனுசரித்து ஹாபிஸ் எழுதியிருக்கும் குறிப்பாவது:—

"மனிதர்களுக்கு நன்மை செய்யும் சமயமல்லாது வேறு சிற்சில சமயங்களில் தீமையை விளைவிக்கக் கூடியதாய் ஒரு பெரியாரின் சில வார்த்தை காணப் படுமாயின் இப்பொழுது அவரின்வார்த்தையையே உடும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனல் இந்தச் சமயத்திற்கு எந்தப்பெரியாரின் வார்த்தைகள் மனிதர்களுக்கு நன்மை விளைக்கக்கூடியனவாய்த்தென் படுகின்றனவோ அவற்றயே கைக் கொள்ளவேண்டு மென்பதாகும்........ ஹாபிஸ்"

தந்தாவி என்பார் இவ்விஷயத்தில் என்ன எழுதியிருக்கிருர் என்பதும் அதை ஹாபிஸ் என்பார் எவ்வாறு மொழி பெயர்த்திருக்கிருர் என்பதும் ஆராய்ச்சிக் குரியவையென்பது ஒரு புறமிருக்கட்டும். ஹாபிஸ் பாக்கவி மொழிபெயர்த்திருக்கிறபடி தந்தாவி எழுதியிருப்பாராயின் மிஸ்ரிலுள்ள மத்ஹபி உலமாக்களால் அதற்குத்தக்க கண்டனம் வரையப்பட்டிருக்கு மென்பதில் ஐயமில்லை. எனவே மேற்கண்ட கட்டுரையை ஹாபிஸ் எடுத்தெழுதி அதன்பேரில் அவர் குறிப்பும் எழுதியிருப்பதால் அதில்கண்ட கூற்றுக்களுக்கு அவரே ஜவாப்தாரி என்பது வெள்ளிடைமலை.

மேற்கண்ட கட்டுரையிலிருந்து காணக் கிடக்கின்றது என்னை?

பிக்ஹின் சட்டதிட்டக் கட்டளைகளெல்லாம் உறுதியற்றவைகள்.

இமாம்களாகிய பாரவான்கள் ஏற்படுத்திய பிக்ஹு சட்டதிட்டங்கள் எவ்வித நன்மைகளையும் பொதுமக்களுக்கு பயக்கக் கூடியனவா யில்லை.

மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட பிக்ஹு சட்டதிட்டக் கட்டளைகள் ஷரீஅத்து அன்று. அவைகளை ஷரீஅத்தில் கொணர்ந்து நுழைப்பது கூடாது.

முற்காலத்தில் இமாம்களால் ஏற்படுத்திய சட்டதிட்டங்கள் தற்பொழுதுள்ள நமது புத்திக்கும் நாம்கோரும் நன்மைக்கும் விரோதமாய்த் தோற்றுமாயின் அவர்களின் கூற்றுக்களை உடும்புப் பிடிப்பாகப் பிடித்துக் கொண்டிருக்கலாகாது.

நமது நோக்கத்திற்கும் நன்மைக்கும் ஏற்றவாறு இப்பொழுதுள்ள பெரியார் கூறுவதையே கைக்கொண்டு ஒழுகவேண்டும். என்பது ஹாபிஸின் குறிப்பிலிருந்து விளங்குகின்றது.

சகோதரர்காள்!

இஃதென்னே வழிகேடு! இஃதென்னே தடுமாற்றம்!! இஃதென்னே மார்க்கப் புரட்டு!!! இவ்விபரீதக் கூற்றுக்களை கண்ணுறும் எந்த உண்மை முஸ்லிமின் மனந்தான் கொதிப்படையாமலிருக்க முடியும்? பிக்ஹு சட்டதிட்டமென்பதுநமது இமாம்களாகியஹனபி ஷாபியீ, ஹம்பலி, மாலிக்கி முதலிய மகான்.

களால் குர்ஆன், ஹதீது இவைகளை ஆதாரமாகக் கொண்டே நிர்மாணிக்கப் பட்டவைகளாகும். அவைகளைப் பின்பற்றி நடப்பது ஒவ்வொரு மத்ஹபிகளின் பேரிலும் கடமையாகும். சுன்னத்துவல்ஜமா அத்து அல்லாத ஒரு சிலரைத் தவிர தற்பொழுதுள்ள 40 கோடி முஸ்லிம்களும் இச் சட்டங்களைப் பின்பற்றி அனுஷ்டித்து வருகிறார்கள் என்பது உலகறிந்த விஷயம். உதாரணமாக ஒளுவில் இமாமுல் அஃலம் அவர்கள் நான்கு பர்ளுகளென்று குறிப்பிட்டிருப்பது குர்ஆனின் அத்தாட்சியைக் கொண்டல்லவா? தண்ணீரில்லாத இடங்களில் தயம்மஞ் செய்து கொள்ளலாமென்பது குர்ஆனுடைய அத்தாட்சியைக் கொண்டல்லவா? இவைபோன்ற பிக்ஹு சட்டங்கள் ஒவ்வொன்றையும் ஆராயப்புகின் குர்ஆன் ஹதீதுகளின் அத்தாட்சியைக் கொண்டுதான் அவைகள் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன வென்பது அறிவுடையோர்களுக்கு நன்கு புலனாகும்.

உண்மை இவ்வாறிருக்க ஹாபிஸ் பாக்கவி மேலே கூறியிருக்கும் கூற்றுக்களுக்கு தக்க ஆதாரங்காட்டும்படி அவரைக்கேட்டு இதற்கு ஒரு முடிவுசெய்ய வேண்டியது நான்கு மத்ஹபுகளும் உண்மை என்று ஒப்புக்கொண்டு பின்பற்றி நடக்கும் ஒவ்வொருவரின் பேரிலும் கடமையாகும். இவ் விஷயமானது சாமானியமானதன்று. உலகத்தையே புரட்டி வழி கெடுக்கக் கூடியதாகவும், முஸ்லிம்கள் தாங்கள் பின்பற்றி வரும் மத்ஹபையே அலக்ஷியஞ் செய்யக் கூடியதாகவும் இருக்கின்றபடியால் இதை யாருக்கோ வந்த விருந்தென்று கவனக் குறைவாக யிருந்துவிடாமல் ஒவ்வொரு உலமாக்களும் முஸ்லிம்களும் முன்வந்து இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று மீண்டும் அறிவித்துக்கொள்ளுகிறேன்.

தாருல் இஸ்லாம் ஆசிரியர்கள் தங்களின் மார்க்க விரோதமான நவீனக் கோள்கைகளை ஜனங்களிடையே பரத்துவான்வேண்டி தற்காலம் மார்க்க வரம்பைக் கடந்து அதை அலட்சியஞ்செய்து நடந்துவரக்கூடிய துருக்கி முஸ்தபாகமால்பாஷா, எகிப்து அரசர் முதலியவர்களுடைய செய்கைகளையும் இவர்கள் போன்ற நவீனக் கோள்கைகளுடையோரின் செய்கைகளையும் ஆதாரமாகக் காட்டி வரைந்து பிரசாரஞ் செய்து வருகிறார்கள் என்பது நேயர்கள் அறிந்த விஷயம். இவ்வித நவீனப் பிரசாரத்திற்கு பாரவான்களாகிய இமாம்களால் ஏற்படுத்தப்பட்ட பிக்ஹு சட்டதிட்டக் கட்டளைகள் முரண்பட்டவைகளாகயிருப்பதால், அவைகளை ஆதரமாகக் கொண்டு பொது முஸ்லிம்கள் இவர்களின் விஷமப் பிரசாரத்தை ஒப்புக்கொள்ளாமல் கண்டனஞ் செய்து வருவதைக்கண்டு, பிக்ஹு சட்டதிட்டங்களையே பொதுமக்கள் அலக்ஷியஞ்செய்து அதன்பற்று அவர்களின் மனதைவிட்டு நீங்கிவிடும்படியாகச் செய்வதற்காகவே இக்குறுக்கு வழிகேடான பாதையில் இறங்கியிருக்கிறார்களென்று யூகிக்க வேண்டியதாயிருக்கிறது.

ஹாபீஸ் பாக்கவி தற்சமயம் தமக்கு இமாமாக பின்பற்றி வரும் தந்தாவி என்பார் மிஸ்ரில் தற்பொழுது நவீனக் கொள்கையை வெளியிட்டு வருபவர்களில் ஒருவராவர். அவரால் சமீபத்தில் இப்னுமர்யமின் வருகை என்று மகுடமிட்டு ஒரு கட்டுரை வரையப்பட்டிருந்ததை மொழிபெயர்த்து தா. இ. தில் பிரசுரிக்கப்பட்டு வந்ததையும் அதில்ஈஸா (அலை) அவர்கள் திரும்ப உலகத்திற்கு வருவார்கள் என்பதின் கருத்து குறிப்பிட்ட ஈஸா (அலை) வருவார்களென்பதல்லவென்றும், தற்காலம் தோன்றியுள்ள நவீன நாகரீகக் கிளர்ச்சியே ஈஸா வருவது என்ற கருத்தாகுமென்றும் குறிப்பிட்டிருந்ததையும், அப்பொழுதே அதற்குத் தக்க வாயாப்பு கொடுக்கப்பட்டு அடக்கப்பட்டதென்பதையும் நேயர்கள்மறந்திருக்க மாட்டார்களென்று நினைக்கிறேன். இத்தகையோரின் கூற்றுக்கள் தான் தற்காலம் பொது ஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக யிருக்கின்றனவென்றும், இவற்றினையே பின்பற்றி நடக்கவேண்டுமென்றும் மகான்களாகிய நான்கு மத்ஹபுடைய இமாம்களின் சொற்களைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கக்கூடாதென்றும் ஹாபிஸ் பாக்கவி குறிப்பிட்டுள்ளார். இது எம்மட்டும் ஞாயமென்பதை நேயர்களே யூகித்து அறியக் கடவர். எனவே, இவ் விஷயத்தைப்பற்றி பத்திரிகையில் எழுதிக்கொண்டே போவோமாயின் விவாதம் வளர்ந்து கொண்டேபோகும். ஆதலால் தா. இ. ஆசிரியர்களும் மற்றும் உலமாக்களும் ஒரு சபைகூடி இவ்விஷயத்தை விவாதித்து ஒரு முடிவுக்கு கொண்டுவரவேண்டியது அத்தியாவசியமும் அவசரமுமான

காரியமுமாகும். ஆதலால் இதுவரை தா. இ. ஆசிரியர்களை உலமாக்கள் நேரில்வந்து விவாதிக்கும்படி அழைத்ததற்கு இணங்காமல் மூலையில் ஒளிந்து பதுங்கிக்கொண்டு வீண்கட்டுரைகளை எழுதிக்கொண்டிருந்ததுபோல் இவ்விஷயத்திலும் அவர்கள் நடந்து கொள்வது அழகல்லவென்பதை உணர்ந்து பகிரங்கமாக வெளிவரவேண்டும். அவ்வாறு நேரில் வந்து விவாதிக்க மறுத்து மூலையில் பதுங்கிக் கொண்டிருப்பார்களாயின், ஒவ்வொரு முஸ்லிம் சங்கமும், உலமாக்களும் பொதுஜனங்களும் அவர்களை பகிரங்கமாக வெளியில் இழுத்து வருவதற்குத்தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளார்களென்பதை சகல முஸ்லிம்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உருவப் படங்கள் வைப்பது ஆகுமாம்

குர் ஆனுக்கும் ஹதீதுக்கு மிடையில் முரண்பாடு காணப்படுகிறதாம்

ஜனுப் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் பாக்கவி வரைவது.

சென்னை "தாருல் இஸ்லாம்" பத்திரிகாசிரியர்கள் தங்களுடையவும் தங்கள் நண்பர்களுடையவும் மற்றும் தாங்கள் பெரியவர்களெனக் கண்ணியமாக மதிப்பவர்களுடையவும் உருவப் படங்களைச் சித்தரித்து தங்கள் பத்திரிகையிலும் மலர்களிலும் நூற்களிலும் பிரசுரித்து வருகின்றார்களென்பதும், அவர்கள் பிரசுரித்து வரும் தோரணையானது இதுவும் இஸ்லாம் மார்க்க சம்பந்தமென்று பொது ஜனங்கள் நினைக்கக் கூடியதாயிருக்கின்றதென்பதும் நேயர்களறிந்த விஷயம். முடிவாக தங்களின் கொள்கையின்படி எம் பெருமானார் நபிகள் நாயகம் ரசூலே கரீம் (ஸல்) அவர்களுடைய படமெனவும் ஓர்படத்தைப் பிரசுரிக்கத் துணிந்து விட்டார்கள். அதைக் கண்டனஞ்செய்து ஸை. இ. தில் வெளியான வியாசத்தில் பொதுவாக முழுப் படம் சித்தரித்துப் பிரசுரிப்பதும் தொங்கவிட்டு வைப்பதும் இஸ்லாம் மார்க்கத்தில் விலக்கப்பட்ட ஆகாத காரியமாகுமென்றும், அக்காரியத்தை எந்த அரசர்களாயினும், உலமாக்களாயினும் மற்றும் எவர்களாயினும் செய்தாலும் அது மறுக்கத் தக்கதென்றும், அத்தகையினர் அவ் ஆகாக்காரியத்தைச்செய்வதனால் அவைகள் மார்க்கத்தில் ஆகுமானதாகக் கருதப்பட மாட்டாதென்றும், அவ்வாறு படம் பிடிப்பதும் சித்தரிப்பதும் பிரசுரிப்பதும் தொங்கவிட்டு வைத்திருப்பதும் ஆகுமென்பதற்கு அதைச் செய்து வருபவர்கள் தக்க மார்க்க ஆதாரங் காட்டவேண்டுமென்றும் வரையப்பட்டிருந்தது நேயர்களின் ஞாபகத்திலிருக்கலாம். அதற்குப் பதிலாக அச்செய்கைகள் ஆகுமென்று நிரூபிப்பதற்காக தா. இ. ஹாபிஸ் என்பார் சென்ற ஜூலை மாதம் 11, 18 தேதிகளில் வெளியான தா. இ. பத்திரிகைகளில் இரு தலையங்கங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார்; அவற்றின் முக்கிய பாகம் பின்வருமாறு:—

"அவர்கள் அவர் (சுலைமான் அலை) நாடியபடி மாபெரும் மஹால்களையும், உருவங்களையும், ஏரிகளே போலுள்ள தடாகங்களையும், பெரிய பெரிய பத்திரங்களையும் (பாத்திரங்களையும்) செய்து கொடுத்தார்கள். ஏ தாவூதின் சந்ததிகாள்! நன்றி செய்பவர்களாய் (நற்)காரியங்களைச் செய்வீர்களாக. மேலும் என்னுடைய அடியார்களினின்றும் ஒரு சிலரே நன்றி யுள்ளவர்களாயிருந்து வருகின்றனர்."—குர் ஆன் 34.13.

"எந்த வீட்டில் நாயும் உருவமும் காணப்படுகின்றனவோ அந்த வீட்டில் மலக்குகள் நுழைய மாட்டார்கள்."—நாயக வாக்கியம்.

"யாரேனு மொருவன் தன்னுடைய உருவத்தை மனிதர்கள் செய்துவைக்க வேண்டுமென்று எண்ணங் கொள்வானாயின் அவன் தன்னுடைய இருப்பிடத்தை நரகமாக்கிக்கொள்வானாக."—ஹதீது.

"எனவே இதனால் நாம் கவனிக்க வேண்டிய தென்னவெனின், இவ்விருவரும் சொல்லிக் கொண்டிருக்கும் ஏவல்களுக்கும் விலக்கல்களுக்கும் ஏதேனும் கருத்துக் களிருக்கின்றனவா? இல்லையா? என்பதே. கருத்துக்களுண்டென்றால் அவற்றினைப்பற்றி யாம் ஈண்டு இது சமயம் கவனிக்கவேண்டிய அத்தியாவசியமில்லை. ஏனெனின் இவ்வாறுதான்

ஒவ்வொரு வாக்கியத்துக்கும் ஒரு மேலான தாத்பரியமிருந்தே தீரவேண்டுமென்று நாம் எண்ணங் கொண்டுள்ளோம். ஆனால் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கும் திரு வாக்கியங்களில் எந்த விதமான கருத்துக்களமைந்து கிடக்கின்றன வென்பதை நாம் ஒரு சிறிதும் கவனிக்கவேண்டியதில்லை. கருத்து எப்படியிருப்பினு மிருக்கட்டும். நாம் எழுத்தையே பற்றிக்கொண்டு நடக்க வேண்டும் என்று சில பிற்போக்கானவர்கள் இத்தரணியில் எண்ணியும் பிரசாரம் பண்ணியும் வருகின்றனர். எனவே அதைப்பற்றியே தான் நாம் இதுசமயம் முக்கியமாய் ஈண்டு சவனிக்க வேண்டியவர்களா யிருக்கின்றோம். ஆதலின் நண்பர்கள் நன்கு கவனித்துப் பார்ப்பார்களாக. கருத்தை விட்டு எழுத்தை மட்டும் பற்றிக்கொண்டிருக்கும் காலம் மலையேறி விட்டதென்பதை இன்னவர் இன்னமும் உணரார் போலும்!

* * *

"எனவே, நாம் முன்னர்க் காட்டிய குர்ஆன் வாக்கியத்தில் ஹஜ்ரத் சுலைமான் (அலை) அவர்களுக்கு ஜின்கள் உருவப் படங்களையும் செய்து கொடுத்திருக்கின்றன வென்று நன்கு தெரிந்து கொள்ளுகின்றோம். ஆனால் எம்பிரான் (ஸல்) அவர்களுடைய திருவாக்கியங்களினால் உருவங்கள் வைக்கக்கூடாதெனக் கண்டிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிந்து கொள்ளுகின்றோம். எனவே குர்ஆனில் காணப்படும் எமது ஆண்டவனுடைய வாக்கியத்துக்கும் வள்ளலி ரசூல் (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கும் திருவாக்கியங்களுக்கு மிடையே முரண்பாடு காணப்படுவேதாகவே பகிரங்கமாய்த் தெரிகின்றது.'

* * *

"எனவே எமதாண்டவன் சுலைமான் (அலை) அவர்கள் உருவங்கள் வைத்துக்கொண்டிருந்தார்களென்று கூறியிருப்பதை நாம் விட்டு விடுவோம். ஆனால் எம்பிரான் (ஸல்) அவர்கள் உருவங்களை வைத்துக்கொண்டிருக்க வேண்டாமென விலக்கினார்கள் என்பதன் தாத்பரியந்தான் நமக்குப் புலனாகவில்லை. நாயகம் (ஸல்) அவர்கள் எக்கருத்தை முன்னிட்டு இதை விலக்கியிருக்கிறார்களோ! அந்தத் தாத்பரியம் இக்காலை உண்டா? இல்லையா? அதற்குரிய தாத்பரியம் யாது? என்பன போன்ற விஷயங்களைப் படித்த மேதாவிகளான பெரியார்கள் எடுத்தோதி இது சமயம் பொது ஜனங்கள்பால் பரந்து கிடக்கும் பெரிய சந்தேகங்களை யெல்லாம் நிவாரணம் பண்ணவேண்டுமாய் வேண்டி நிற்கின்றோம். எப்படியெனின் முதன்முதலாய் உருவமென்பதையே தீண்டவும் பார்க்கவும் கூடாதென்று சொல்லப்படும்போது, இவ் விந்தியாவின்பால் காணக்கிடைக்கும் நாணயவகைகளெல்லாம், தபால் தலைகளெல்லாம், கரன்ஸி நோட்களெல்லாம், இவைபோன்ற இன்னமும் எத்தனையோ வஸ்துக்களெல்லாம் உருவ மயமாகவே தாம் தென்படுகின்றன. எனவே இதுசமயமும் இவ் வஸ்துக்களின் விஷயத்தில் எமது வள்ளலவர்களின் உத்தரவுப்படி நடந்து செல்ல வேண்டுமா? இல்லையா? வேண்டுமெனின் உருவம் வேண்டாமெனச் சோல்லும் ஒரு சிலர் இவற்றினை எடுத்து தம்முடைய பணப்பெட்டியிலும் சட்டைப் பையிலும் என் பத்திரமாய் வைத்துக் கொள்ளுகின்றனர்?''

''யாரேனும் உருவங்களை வைப்பார்களாயின், வேறுவிலக்கு விதிகளான கட்குடித்தல், வியபிசாரம்புரிதல், களவாடுதல் போன்ற காரியங்கள் செய்வதனால் உண்டாகும் பாபங்களேபோல் இதற்கும் கிடைத்தல் வேண்டும் என்று சிலர்வாதித்தல்கூடும். ஆனால் இஃது இவ்வளவு தீதை விளைவிக்கக்கூடிய துர்க்காரியமா யிருக்கின்றதென்பதை யுணர்ந்த பின்னரும் இஸ்லாமிய உலகத்துக்கே மார்க்கத் தீர்ப்பாளராய ஸுல்தான் அப்துல் ஹமீத்கான் காலத்திலிருந்த ஷைகுல் இஸ்லாமும் உலகத்திலேயே இஸ்லாமிய பெரிய கலாசாலையான ஜாமியுல் அஜ்ஹரின் தலைவராய் விளங்கிகின்ற உஸ்தாத் ஷைக் முஹம்மது அப்துஹூ என்னும் பெரியாரும் இவ் விந்தியாவின் சரித்திராசிரியராய் விளங்கிகின்ற ஷிப்லி நுஃமானி என்பாரும் மௌலானா அபுல்கலாம் ஆஜாதும் மிஸ்ரில் இக்காலப் பெரிய இமாமே போல் விளங்கிக் கொண்டிருக்கும் உஸ்தாத் ஷைக் தன்தாவீ என்பாரும் இப்படியே வட இந்தியாவின்பால் காணப்படும் பல மௌலானாக்களும் சொந்தமாய்த் தென்னிந்தியாவிலுள்ள எமது

மேன்மைபொருந்திய ஆசிரியர்களும் தங்கள் உருவப் படங்களை எடுத்திருக்கின்றனர். எனவே இவர்களெல்லாரும் உருவத்தை எடுப்பது தவறான ஒரு காரியமென் றெண்ணியா இவ்வாறு செய்திருக்கின்றனர்! (நவூது பில்லாஹ்) இல்லை; இல்லை. இஸ்லாமிய தேசமான மிஸ்ரில் தபால் வில்லைகளி லெல்லாம் கூட இதுசமயம் ஷா (ஹ்) புஆத் அரசருடைய உருவமே நல்லமாதிரியில் வெளியாய்க் கொண்டிருக்கின்றது. ஆங்கு இதனை எந்தக் கல்விமானும் ஆக்ஷேபம் பண்ணியதாய்த் தென்படவில்லை. எனவே எம்பிரான் (ஸல்) அவர்களுடைய வார்த்தைகளின் தாத்பரியமென்ன வென்பதையும் கற்றறிந்த மேதாவிகள் கூற வேண்டியது அத்தியாவசியமா யிருக்கின்றது. இது விஷயத்தில் தலையிட விருப்பமுள்ளவர்கள் தற்கால ஞானவான்களின் புத்திக்குப் பொருத்தமான முறையில் விஷயங்களைக்கூற முன் வருவார்களாக. வீண்பேச்சால் விஷயம் பைஸலாகாது.' என்று ஹாபிஸ் எழுதியிருக்கிறார்.

சோதரீர்!

ஹாபிஸ் பாக்கவியின் மேற்கண்ட கூற்றுக்களிலிருந்து அவரின் உள்ளக் கிடக்கை என்ன வென்பதை நான் விளக்கிக் கூறாமலே நேயர்களறியக் கடவர். மேலும் அவர் கற்றறிந்த உலமாக்கள் இவ்விஷயத்தில் ஏதோ முடிவு கூறவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதிலும் தற்கால ஞானவான்களுடைய புத்திக்கேற்றவாறு கூற வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார். அவர் தற்கால ஞானவான் களென்று எவர்களை நினைத்ததுக் கொண்டு இவ்வாறு கூறியிருக்கின்றாரென்பதை நான் நிச்சயமாக நிர்ணயிக்க முடியவில்லை யாயினும், படங்களைச் சித்தரித்துப் பிரசுரித்திருப்பதாக அவர் மேலே குறிப்பிட்டுள்ள, மிஸிர் தன்தாவி, அபுல்கலாம் ஆஜாத் ஹாபிஸின் மேன்மை பொருந்திய ஆசிரியர் முதலிய வர்களையே அவர் தற்கால ஞான வான்களெனக் குறிப்பிடுவதாக அவருடைய கட்டுரையிலிருந்து யூகிக்க இடமுண்டாகிறது!

நன்பர்காள்! நம்முடைய மார்க்க சம்பந்தமான கட்டளைகட்கு ஆண்டவனுடையவும் அவனது உண்மைத் தூதரான நபிகள்நாயகம் (ஸல்) அவர்களுடையவும் நாம் பின்பற்றியுள்ள பாரவான்களான இமாம்களுடையவும் சொற்களைக் கொண்டு தக்க ஆதாரம் காட்ட வேண்டுமென வினவுவதே உண்மை முஸ்லிம்களின் கடமையும் ஞாயமுமாகும். அவைகளை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு குறிப்பிட்ட சில நபர்களுடைய புத்திக்குப் பொருத்தமான முறையில் மார்க்க ஹுக்மு இருக்க வேண்டுமென்று எந்த முஸ்லிமாவது கேட்கத் துணிவது ஞாயமும் பொருத்தமும் ஆகுமா? என்பதை நேயர்களே யூகித்து முடிவு செய்து கொள்வீர்களாக.

ஹாபிஸ் பாக்கவியின் கோரிக்கை எவ்வாறிருப்பினும் இப்படம் பிடிக்கும் விஷயமாக நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைகளையும் அக்கட்டளைகளை ஆதாரமாகக் கொண்டு நமது பாரவான்களான இமாம்கள் இவ்விஷயத்தில் கூறியுள்ள தீர்ப்புகளையும் நேயர்களுக்கு விளக்கிக் காட்ட நான் விரும்புகின்றேன்.

முதலாவது ஹாபிஸ் பாக்கவி எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு ஆதாரமாக "ஸூரத்தே ஸபா" வில் சுலைமான் (அலை) அவர்கள் சம்பந்தமாகக் கூறப்பட்டுள்ள விஷயத்தை மேற்கோளாகக் காட்டி யிருப்பது முற்றும் தவறாகும். ஏனெனின் முந்தின நபிமார்களின் மார்க்கங்களில் ஆகுமாக்கப் பட்டிருந்த அநேக ஹுக்முகள் நம்முடைய திருக் குர் ஆனால் மாற்றப்பட்டுப் போயிருக்கின்றன. அவைகளுள் சுலைமான் (அலை) அவர்கள் விஷயமாக ஹாபிஸ் குறிப்பிட்டுள்ள விஷயமும் ஒன்றாகும். ஆனதுபற்றி அவ்விஷயத்தை அவர் தம்முடைய கோரிக்கைக்கு ஆதாரமாக எடுத்துக் கூறி குர் ஆனின் கட்டளைக்கும் எம்பிரான் (ஸல்) அவர்களின் திரு வாக்கியங்களுக்கும் முரண்பாடாகத் தெரிகிறதென்று குறிப்பிட்டிருப்பது பொது மக்கள், குர்ஆனில் ஆகுமென்றிருப்பதாகவும் ஹதீதில் கூடாதென்றிருப்பதாகவும் நினைக்கும்படி அவர்களை ஏமாற்றுவதற்காகவே இவ்வாறு அவர் வரைந்திருக்கிறார் என்று கூறவேண்டி யிருக்கிறது. நம் மார்க்கத்தில் ஆதாரமாகக் கொள்ளத் தகாத ஓர் விஷயத்தை தம்முடைய கோரிக்கைக்கு ஆதாரமாக நுழைத்து அதன்பேரில் வழவழவென்று நீண்ட வியாசத்தை உளறிக் கொட்டியிருக்

கின்றார். சுலைமான் (அலை) அவர்களின் சரிதையை குர்ஆனில் ஸபா என்னும் அத்தியாயத்தில் அல்லாஹுதஆலா எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்குச் சொல்லிக்காட்டியுள்ள விஷயத்தையும் அதன் கருத்தையும் நேயர்களுக்கு சுருக்கமாக விளக்கிக் கூற விரும்புகிறேன்.

"அவர்கள் (ஜின்கள்) அவர் (சுலைமான் அலை) நாடியபடி (வானளாவும்) மாளிகைகளையும், உருவங்களையும் ஏரிகளைப்போன்ற தடாகங்களையும் பெரிய பாத்திரங்களையும் செய்து கொடுத்தார்கள்."—குர்ஆன் 34.13

இதனால் நாம் படம் வைத்துக்கொள்ளுதல் ஆகுமென்று குர்ஆனில் வந்திருப்பதாக ஹாபிஸ் கூறுகிறார். அது முற்ற முற்றத் தவறாகும். இதற்கு இருவிதமான பதில் கூறப்படுகிறது. சுலைமான் (அலை) அவர்களுக்கு ஜின்களால் செய்து கொடுக்கப்பட்ட உருவங்கள் எவ்வாறிருந்தன வென்பதைப் பற்றி குர்ஆன் விருத்துரைக் கர்த்தாக்களான (முபஸ் ஸிரீன்கள்) பாரவான்கள் பலவாறாகக் கூறியிருக்கின்றார்கள். அவ்வுருவங்கள் செம்பினாலும் பளிங்கியினாலும் மரத்தினாலும் செய்யப்பட்டிருந்தன; சுலைமான் (அலைஹி) அவர்களின் சிம்மாசனத்தின் கீழ் 2 புலிகளின் உருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. அதன் மேல்பாகத்தில் 2 பக்ஷிகளின் உருவங்களமைக்கப் பட்டிருந்தன. சுலைமான் (அலை) அவர்கள் சிம்மாசனத்தின்மீது ஏறும் பொழுது 2 புலிகளின் உருவங்களும் தங்கள் கைகளை நீட்டும்; அவைகளின்மீது காலை வைத்து ஏறி ஆசனத்தில் அவர்கள் அமர்ந்தவுடன் மேல்பாகத்திலுள்ள இரு பக்ஷிகளும் தங்களுடைய சிறகுகளை விரித்து சுலைமான் (அலை) அவர்களுக்கு நிழலிடும்; பார்க்கும் ஜனங்களுக்கு இஃதோர் கெம்பீரத் தோற்றத்தைக் கொடுக்கும். இவ்வாறு உருவங்களை வைத்துக்கொள்வது சுலைமான் (அலை) அவர்களுடைய மார்க்கத்தில் 'ஆகு'மானதாகயிருந்திருக்கலாம். நம்முடைய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மார்க்கமானது அதை ஹராமாக்கிவிட்டது என்று சிலர் கூறியிருக்கின்றார்கள். இதன் விவரங்கள் தப்ஸீர் பைஜாவீ, ஜலாலைனி, தப்ஸீர்காஸின், முதலிய தப்ஸீர்களில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அல்லாமா இப்னுஹஜர் அஸ்கலானி அவர்கள் எழுதியுள்ள ஷரஹ் புகாரி 10-வது வால்யம் 321-வது பக்கத்திலும், அல்லாமா ஐனீ எழுதியுள்ள புகாரீஷரீபின் விரித்துரை உம் தத்துல்காரீ 10-வது வால்யம் 308-ம் பக்கத்திலும் இவ்விவரங்கள் காணக் கிடக்கின்றன.

சுலைமான் (அலை) அவர்கள் விஷயத்தில் ஸூரத்தே ஸபாவில் "தமாதீல்" என்ற பதம் கூறப்பட்டிருக்கின்றது. அதை உயிருள்ள உருவங்களுக்கும் சொல்லலாம்; உயிரற்ற சித்திரங்களுக்கும் சொல்லலாம் எனினும் இந்த ஸ்தானத்தில் உயிரற்ற வஸ்துக்களின் சித்திரங்கள் மஹால்களில் செய்து கொடுக்கப்பட்டிருந்ததாகக் கூறுவது மிகவும் பொருத்தமானதாகக் காணப் படுகின்றதென்று அல்லாமா இப்னு ஹஜ்ருல் அஸ்கலானி அவர்கள் பத்ஹுல் பாரீ ஷரஹுல் புகாரியில் அறைந்திருக்கிறார்கள். இதற்கு ஆதாரமாக புகாரிஷரீப், முஸ்லிம், ஆகிய இரு ஹதீத் கித்தாபுகளிலும் கூறப்பட்டுள்ள கீழ் காணும் ஹதீதைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது:—

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருச் சமுகத்தில் அபீஸீனியாவிலுள்ள கிறிஸ்துவக் கோவிலைப்பற்றியும் அதிலுள்ள உருவச் சிலைகளைப்பற்றியும் கூறப்பட்டது. அதுபொழுது நபிகள் நாயகம் (ஸல்) முன்னரிருந்த சமுகள் தங்களில் எவரேனுமொரு நல்லடியார் இறந்துபோனால் அவர்களுடைய கப்றில் ஓர் மஸ்ஜிதைக்கட்டி அதில் அவரின் உருவச் சிலையையும் செய்துவைப்பார்கள். அவர்கள் (அவ்வாறு செய்பவர்கள்) அல்லாஹுதஆலாவிடத்தில் மிகவும் கெட்டவர்கள் எனத் திருவாய்மலர்ந்தருளினார்கள் என்று ஆயிஷா நாயகி (றலி) அவர்கள் பகர்ந்திருக்கிறார்கள். இந்த ஹதீதிலிருந்து விளங்குவதென்வென்றால் சுலைமான் (அலை) அவர்களுடைய மார்க்கத்தில் உருவச்சிலைகள் வைத்துக்கொள்வது ஆகுமென்றிருந்து அவ்வாறு அவர்கள் வைத்திருந்திருப்பார்களாயின், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொதுவாக முன்னுண்டானவர்களில் உருவங்களை வைத்திருந்தவர்கள் ஆண்டவனிடத்தில் கெட்டவர்களென்று சொல்லியிருக்கமாட்டார்கள்என்பதே. ஆகையால் சுலைமான் (அலை) அவர்களுடைய

மஹால்களில் ஜின்கள் உயிரற்ற மரம், செடி, கொடி முதலியவைகளின் சித்திரங்களைச் செய்துதந்தனவென்பது தான் பொருத்தமான கருத்தாயிருக்கின்றது.

இமாம் அல்லாமா பக்ருத்தீன் ராஸீ அவர்களும் தங்கள் தப்ஸீரே கபீரில் "தமாதீல்" என்ற பதத்திற்கு உயிரற்ற வஸ்துக்களின் சித்திரங்கள் என்பதுதான் கருத்தென்று கூறியிருக்கின்றார்கள். எனவே மேற்கண்ட பாரவான்களின் சொற்களிலிருந்து சுலைமான் (அலை) அவர்களுக்கு அவர்களின் மஹால்களில் ஜின்களால் செய்துவைக்கப்பட்டது உயிருள்ள உருவச்சிலைகளென்றே உறுதியாகக் கூறமுடியாமலிருக்கிறது. அவைகள் உயிரற்ற வஸ்துக்களின் சித்திரங்களென்றே தெரிகின்றது. மேலும் ஹாபிஸ் கூறியுள்ளபடி படங்கள் என்பதற்கு எத்தகைய ஆதாரமும் அதில் காணப்படவில்லை. உண்மைஇவ்வாறிருக்க இவ்விஷயத்தை ஹாபிஸ் என்பார் படம் வைப்பது ஆகுமென்பதற்கு இந்த குர்ஆன் ஆயத்தை ஆதாரமாகக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து அவருடைய கல்வி ஆராய்ச்சியின் தன்மை எத்தகையதாயிருக்கின்றதென்பதை நேயர்களே யூகித்து முடிவு செய்துகொள்ளக்கடவர்.

மேலே நான் குறிப்பிட்டுள்ள விவரங்களிலிருந்து ஹாபிஸ் என்பார் மேற்கண்ட குர்ஆன் ஆயத்தை தனது கூற்றுக்கு ஆதாரமாக வரைந்திருப்பது சரியல்லவென்றும் அவ்வாயத்தின் கருத்து எம்பெருமானாரவர்களின் கட்டளைகளுக்கு எவ்விதத்திலும் முரண்பட்டதல்லவென்றும் சுலைமான் (அலை) அவர்களுக்கு ஜின்களால் செய்து கொடுக்கப்பட்டது உருவப்படங்களென்று கூறுவது தவறென்றும், அவைகள் உருவச்சிலைகளாக யிருந்திருப்பதும், அது நம் மார்க்கத்தில் படம் வைப்பது ஆகுமென்பதற்கு ஆதாரமாக மாட்டாதென்றும் நேயர்களுக்கு நன்கு புலனாகிவிடும் என்று நம்புகின்றேன்.

சித்திரப்படம் விஷயமாக எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள திருவாக்கியங்களைப்பற்றி சிறிது ஆராய்ச்சி செய்வோம்.

ஹதீதுகள்

(1) எந்த வீட்டில் நாயும் உருவப்படமும் காணப்படுகின்றனவோ அந்த வீட்டிற்குள் மலக்குகள் நுழையமாட்டார்கள்.

(2) எந்த வீட்டில் நாயும் உருவப்படமும் காணப்படுகின்றனவோ அந்த வீட்டிற்குள் நாங்கள் புகமாட்டோம் என்று ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறினார்கள்.

(3) ஆயிஷா நாயகி (ரலி) அவர்களுடைய வீட்டில் ஓர் திரையில் உருவப்படங்களிருந்தன. அத்திரையை நபிகள் நாயகமவர்கள் கிழித்துவிட்டார்கள். அதைக்கொண்டு 2 தலையணைகள் தைக்கப்பட்டன.

(4) ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் ஒரு தலையணை வாங்கி வைத்திருந்தார்கள். அதில் உருவப் படங்கள் பொறிக்கப்பட் டிருந்தன. நாயகம் (ஸல்) அவர்கள் அதைக்கண்டு உள்ளே செல்லாது வாயிலண்டையே நின்றுகொண்டார்கள். ஆயிஷாநாயகி அவர்கள் காரணம் வினவினார்கள். இத் தலையணையின் விவரம் என்ன ? என்று நாயகம் அவர்கள் கேட்டார்கள். தாங்கள் சாய்ந்திருப்பதற்கே அதை வாங்கினதாக அறிவித்தார்கள். இந்த உருவங்களைச் செய்தவர்கள் இறுதி நாளில் வேதனை யடைவார்கள், அந்த உருவங்களுக்கு உயிர் கொடுக்கும்படி அவர்களுக்கு சொல்லப்படும், என நபிகள் நாயகம் (ஸல்) கண்டித்தார்கள்.

(5) வீட்டிற்குள் ஓர் திரையில் பொறிக்கப்பட்டிருந்த உருவப் படமொன்றை ஒருமரத்தின் உருவ மாதிரியே போல் நபிகள் நாயகம் ஆக்கி விட்டார்கள் என்று அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(6) இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடத்தில் ஒருவர் வந்தார். அவர் தமக்கு கைத்தொழில் தெரியுமென்றும் உருவப்படங்கள் எழுதுவேன் என்றும் கூறினார். இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அவரைநோக்கி எவன் உருவங்களை எழுதுகின்றானோ அவன் இறுதி நாளில் அப்படங்களை உயிர்ப்பிக்கும் வரை வேதனை அடைவான். அவனால் அவைகளை ஒருக்காலும் உயிர்ப்பிக்க முடியாது என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவுளமானார்களெனச் சொல்லிக் காட்டினார்கள். இதைக் கேட்டு அம்மனிதர் கவலைப்பட்டார். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மரங்களின் உருவங்களையும் உயிரற்ற வஸ்துக்களின் உருவங்களையும் எழுதிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். (மிஷ்காத்)

மேலே கூறப்பட்டுள்ள நபிகள் நாயகமவர்கள் திருவசனங்களிலிருந்து, உருவப்படங்களை வைக்கக்கூடாதென்று எம்பெருமானாரவர்கள் மிக அழுத்தமாகக் கண்டித்து விலக்கி யிருக்கிறார்களென்று நன்கு தெரியவருகின்றது. அதற்குக்காரணம், உருவப்படங்களை சித்திரிப்பதும், வரைவதுமானது அல்லாஹு தஆலாவைப்போன்று அவைகளைப் படைப்பதற் கொப்பாகு மென்றும், ஆனது பற்றியே அவ்வுருவங்களை உயிர்ப்பிக்கும்படி இறுதிநாளில் ஆண்டவனால் அவர்கள் ஏவப்படுவார்களென்றும், எம்பெருமானார் (சல்) அவர்களே விளக்கமாகக் கூறியிருக்கின்றார்கள். அது காரணமாகவே அவ்வுருவங்களை மலக்குகள் அருவருக்கின்றனர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு தக்க காரணங்களுடன், நபிகள்நாயகமவர்கள் விபரமாகக்கூறியிருக்க ஹாபிஸ் பாக்கவி, நாயகமவர்கள் உருவப் படங்களை வைக்கக் கூடாதென்று விலக்கிய காரணங்கள் தாம் தமக்குப் புலப்படவில்லை யென்று கூறுகிறார். என்னே இவரது ஆராய்ச்சி!

“நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லியிருக்கும் திருவாக்கியங்களில் என்னவிதமான கருத்துக்கள் அமைந்து கிடக்கின்றன வென்பதை நாம் ஒரு சிறிதும் கவனிக்கவேண்டியதில்லை. கருத்து எப்படியிருப்பினு மிருக்கட்டும், நாம் எழுத்தையே பற்றிக்கொண்டு நடக்கவேண்டும் என்று சில பிற்போக்கானவர்கள் இத்தரணியில் எண்ணியும் பிரசாரம் பண்ணியும் வருகின்றனர்—”

என்று ஹாபிஸ் பாக்கவி கூறுகிறார். அவருடைய இவ்வார்த்தைகளுக்கு ஏதேனும் அர்த்தம் உண்டா? யென்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும். கருத்தைவிட்டு எழுத்தைமட்டும் பற்றிக்கொண்டு நடக்கவேண்டுமென்று எவரேனும் இத்தரணியில் சொல்லக்கூடியவர் இருப்பதை ஹாபிஸ் நிரூபிப்பாரா? கருத்தை விட்டு எழுத்தை மட்டும் எவ்வாறு கைக்கொண்டு நடக்கமுடியும்? எழுத்தென்பது என்ன? அதைமட்டும் பின்பற்றி நடப்பதென்பது எவ்வாறு? இதற்கு விபரம் ஹாபிஸே சொல்லக் கடமைப்பட்டுள்ளார். எந்த மந்த புத்திக்காரனும் இவ்வாக்கியங்களை உபயோகப்படுத்த முன் வரமாட்டானென்பது திண்ணம். இவ்வாறு ஹாபிஸ் கூறியிருப்பது நம் உலமாக்கள் மீது சுமத்திய வீண்படுமோசமான பழியேயாகும். அல்லது ஹாபிஸின் அருத்தமற்ற உளறுபாடே யாகும். எவர்களாயினும் எழுத்து வியாஸத்தை வாசித்து அதன் அருத்தத்தையும், கருத்தையுமே பின்பற்றி நடப்பார்களென்பது உலகேற்கும் உண்மையாகும். ஆனால் அக்கருத்துக்கள் பலதிறப்பட்டனவாயுமிருக்கலாம். சிலர் தவறானகருத்துக்களைக் கொண்டுகாதியானி முதலியவர்களைப்போல் தவறாகக்கூறவும் கூடும். அது எவ்வாறாயினும் ஹாபிஸ் கூறியுள்ளபடி எழுத்தைமட்டும் பின்பற்றி நடக்கக்கூடியவர் இத்தரணியில் ஒருவரும் இருக்கமாட்டாரென்பது பிரத்தியக்ஷம். நாயகமவர்களின் திரு வாக்கியங்கள் பகிரங்கமாக காரணகாரியங்களோடு ஜனங்களுக்கு விஷயங்களை விளக்கிக் காட்டக்கூடியனவா யிருக்கின்றனவென்பது உண்மை. இங்ஙனமிருக்க ஹாபிஸ் தமக்கு விளங்கவில்லை என்று மேலே குறிப்பிட்டுள்ளபடி கூறியிருப்பதானது நாயகமவர்களின் ஹதீதுகளுக்கு நாயகமவர்களும் இமாம்களும், முஹத்திதீன்களும் பாரவான்களும்செய்துள்ள அர்த்தங்களுக்கும் கருத்துகளுக்கும் மாறாக நவீனக் கருத்துகளை நாயகமவர்களின் திரு வாக்கியங்களில் புகவிட வேண்டுமென்றே கருதுகிறாரென்று நன்கு விளங்குகிறது. என்னே இவரின் மார்க்கப்புரட்டும்! மௌட்டியமும்!!

“மேலும் உருவமென்பதையே தீண்டவும் பார்க்கவும் கூடாதென்று சொல்லப்படும்போது இவ்விந்தியாவில் பரவி காணக்கிடக்கும் நாணய வகைகளெல்லாம், தபால் தலைகளெல்லாம், கரன்ஸி நோட்டுகளெல்லாம் இவைபோன்ற இன்னும் எத்தனையோ வஸ்துக்களெல்லாம் உருவமயமாகவே தாம் தென்படுகின்றன. எனவே இது சமயமும் இவ் வஸ்துக்களின் விஷயத்தில் எமது வள்ளல் அவர்களின் உத்தரவுப்படி நடந்து செல்ல வேண்டுமா? இல்லையா? வேண்டுமெனின் உருவம் வேண்டாமெனச் சொல்லும் ஒரு சிலர் இவற்றினை எடுத்து தம்முடைய பணப் பெட்டியிலும், சட்டைப் பையிலும் ஏன் பத்திரமாய் வைத்துக் கொள்கின்றனர்?” என்று ஹாபிஸ் வினவுகின்றார். இவ்வினவுக்கு நமது இமாம்களாகிய பாரவான்களால் ஏற்கெனவே தக்க சமாதானங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. அவைகளை

ஹாபிஸ் உணரவில்லை போலும்! பெரும்பாலும் நாணயங்களாகிய ரூபாய்கள், கரன்ஸி நோட்டுகள், தபால் முத்திரைகள் முதலியவைகளில் காணப்படும் உருவப்படங்கள் அநேகமாக உயிர் நிலைக்கத் தகுதியற்ற அரைப் படங்களாகவே காணப்படுகின்றன. அவைகளில் ஒரு சில முழுஉருவப் படங்களாகக் காணப்படினும் அவைகளையும் போக்கற்ற நிலைமையில் வைத்துக்கொள்ளலாமென்று நமது இமாம்களாகிய “புக்ஹாக்கள்” கூறியிருக்கிறார்கள். அரசர்களில் பெரும்பாலோர் அன்னிய மதஸ்தர்களாகயிருப்பதனால் அவர்கள் அதன் விலக்கலைக் கவனியாமல் தங்களின் நாணயங்களில் உருவங்களை அமைத்துவிடுகிறார்கள். அவர்களைப் பின்பற்றி மார்க்கப் பேணுதலற்ற முஸ்லிம் அரசர்களினுஞ் சிலர் அவ்வாறே பிரசுரித்துவிடுகின்றனர். அவைகள் சிலாவணியாகும் நாணயங்களாயிருப்பதை முன்னிட்டு அவைகளை ஒதுக்கித்தள்ளுவது ஜீவனோபாயத்திற்குக் கஷ்டமேற்படுகிறபடியால் போக்கற்ற நிலைமையில் அதை உபயோகப்படுத்திக் கொள்வது கூடுமென்று புக்ஹாக்களாகிய இமாம்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். இத்தியாதிகாரணங்களால் தங்கள் தங்கள் உருவப் படங்களை பெருமையையும் செருக்கையும்நாடி சித்தரித்து பிரசுரித்து வருவதற்கும், சிலாவணியான நாணயங்களை அவசியத்தினிமித்தம் உபயோகப்படுத்திக் கோள்வதற்கும் வெகுதூர வித்தியாசங்கள் இருக்கின்றன வென்பது வெள்ளிடைமலை. மேலும் தபால் முத்திரைகளையோ, கரன்ஸி நோட்டுகளையோ ரூபாய்களையோ பெட்டியிலும் சட்டைப்பையிலும் வைத்திருப்பவர்கள் அஃதொரு சிலாவணி நாணயமென்ற கருத்தோடு வைத்திருக்கிறார்களேயன்றி, அவைகளில் அமையப்பெற்றுள்ள படங்களை மதித்தோ, கருதியோ, எண்ணியோ வைத்துக்கொள்வதில்லை என்பது திண்ணம். மேலும் அப்படங்களை அரசாங்கத்தைத் தவிர மற்றவர்கள் சித்திரிப்பதோ பிரசுரிப்பதோ இல்லை. இதற்கே போக்கற்ற நிலைமையெனக் கூறுவது பொருந்துமே யன்றி ஹாபிஸ் பாக்கவி கூறுவது போல் தமது படத்தை தாம் சித்திரிக்கச் செய்து பிரசுரித்தும், தமது இல்லத்துள் கண்ணடிச் சட்டமிட்டு தொங்கவிட்டு வைத்துக் கொள்வதைப்போக்கற்ற நிலைமையாகுமென்று எந்த மந்தபுத்திக்காரனும் ஒப்புக் கொள்ள முடியாதென்பது பிரத்தியக்ஷம்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் உயிரற்ற வஸ்துக்களின் சித்திரங்களை எழுதலாமென்றும், வைத்துக் கொள்ளாலமென்றும் கூறி யிருப்பதை ஆதாரமாகக்கொண்டு, உயிர் நிலைக்கத் தகுதியற்ற அங்கங்களைக் கொண்ட உருவப்படங்களை வைத்துக் கொள்வது ஆகுமென்று சில புக்ஹாக்கள் கூறியிருக்கிறார்கள். உதாரணமாக தலையில்லாத முண்டவுருவம், அல்லது தலை உருவம் மட்டும், அல்லது வயிறு வரையிலுள்ள அரைப்படம் இவைகளை வைத்துக் கொள்வது குற்றமில்லை யென்றும் கூறப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமான சகல விபரங்களும் ரத்துல் முக்தார் 1-வது வால்யூம் 454, 55-56-வது பக்கங்களிலும் மற்றும் பிக்ஹு கிதாபுகளிலும் காணலாம்.

ஹாபிஸ் பாக்கவி கருதுகிறபடி முழுப் படங்களை சித்திரித்துப் பிரசுரித்து வருவது ஆகுமென்பதற்கு எவ்விதமார்க்க ஆதாரமும் காணப்படவில்லை. ஆனதுபற்றி அவ்வாறு செய்வது ஹராமென்றே ஏற்படுகின்றது.

மேலும், துருக்கியிலிருந்த ஷைகுல் இஸ்லாமும், மிஸ்ரிலுள்ள முஹம்மது அப்துஹு என்பாரும், ஹாபிஸின் குருவாய் விளங்கும் தந்தாவி என்பாரும் வட இந்திய உலமாக்களில் சிலரும், அபுல்கலாம் ஆஜாதும், ஹாபிஸின் மேன்மை பொருந்திய ஆசிரியரும், உருவப்படம் பிரசுரிப்பதை மார்க்கத்தில் ஆகுமென்பதற்கு ஓர் ஆதாரமாக ஹாபிஸ் கூறுகிறார். இஃதென்ன விந்தை! இஃதென்ன அறியாமை!! இக்காலத்திலுள்ள அநேகர் வெளித்தோற்றத்தில் உலமாக்களாகவும் அல்லாமாக்களாகவும் காணப்படினும், அவர்களுடைய செயல்களில் சிலது மார்க்க முரணாகக் காணப்படுவது சர்வ சாதாரணமாக இருந்து வருகின்றதென்பது உலகறிந்த ரகசியமாகும். அவர்களின் செயல்கள் மார்க்கக் கட்டளைக்கு விரோதமாக இருக்கும் நிலைமையில் அச்செயலை மார்க்கத்தில் ஆகுமென்பதற்கு ஆதாரமாக எந்த முஸ்லிமும் ஒப்புக்கொள்ள மாட்டானென்பது சத்தியம். இத்தகையினர்களுடைய செயல்களெல்லாம் மார்க்கக் கட்டளையாகக் கருதப்படின் மார்க்கக் கட்டளைக்கு வரம்பு ஏது? திட்டமேது? அங்ஙன

மிருக்க, ஹாபிஸ் தமது மேன்மை தங்கிய ஆசிரியருடைய செயலை மார்க்கத்திற்கு ஆதாரமாகக் கூற முன் வந்திருப்பது அவரின் பேதமையிலும் பேதமை என்று சொல்லாமல் வேறென்னதான் சொல்லல் சாலும்! அவருடைய மேன்மைதங்கிய ஆசிரியரெனப் படுவாரும் ஹாபிஸும் தங்கள் தங்கள் படங்களைச் சித்தரித்துப் பிரசுரிப்பதைப் பற்றிக் கண்டனஞ் செய்யப்பட்டு வரும் தருவாயில் அவருடைய அச்செயலையே அது மார்க்கத்தில் ஆகுமென்பதற்கு எவரே ஆதாரமாகக் கூறத்துணிவர்? அவ்வாறு கூறுபவர்களின் கூற்றை எவரே ஒப்புக்கொள்ள முடியும்?

"ஒரு சிலர் ஊரிலுள்ள பற்பல ஜாதியார்களின் உருவப்படங்களை யெல்லாம் துண்டுத் துணியை மட்டும் அரையில் கட்டி நிர்வாணமுறையில் தம்மகத்தே வைத்துக்கொண்டு, இன்னவரும் கூட உருவம் வைக்கக்கூடாதெனப் பொது மக்களின்பால் சொல்லித் திரிவதாய் தோன்றுகின்றது"

என்று கற்பனையாக ஹாபிஸ் எழுதி ஏளனம் செய்கிறார். அவர் கூறுகிறபடி ஒருவர் இருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். அத்தகையினர் தான் படம் வைத்துக்கொண்டிருப்பதை குற்றமென்று ஒப்புக்கொள்வதோடு இவ்விதக் குற்றத்தை மற்றவர்கள் செய்ய வேண்டாமென்று கூறுகிறார் என்றுத் தெரிகிறது. ஹாபிஸ் பாக்கியோ வெனில் தமது உருவப் படத்தையும் தமது மேன்மை தங்கிய ஆசிரியருடைய உருவப்படத்தையும் சித்திரித்தும், போட்டோபிடித்தும், முழுதாகப் பிரசுரித்தும் தங்கள் இல்லத்தில் வைத்தும் மார்க்க விரோதமாக நடந்து கொள்வதோடு நில்லாமலும் அதை குற்றமென்று ஒப்புக்கொள்ளாமலும் மற்றவர்களையும் இக்குற்றத்தை செய்யும் படித் தூண்டியும், பிரசாரஞ்செய்தும் மார்க்கத்தையும் தமது செயலுக்கு ஏற்றவாறு புரட்டவும் முயற்சிக்கின்றார் என்று அவருடைய கட்டுரையிலிருந்து தெரிகிறது. இந்நிலைமையில் மேலே கூறப்பட்ட இருவர்களில் எவர் மிகக் கெட்டவர்களென்பதையும், இத்தகைய ஹாபிஸ் மேலே கூறப்பட்டவரை ஏளனம்செய்வதற்கு யோக்யதை யானவரா வென்பதையும் நேயர்களே யூகித்து முடிவு செய்து கொள்வார்களாக.

படம் வைப்பது கூடாதென்று நமது நபிகள் நாயகம் (ஸல்) திருவாய் மலர்ந்தருளியுள்ள ஹதீதுகளை ஏளனம் செய்து ஒரு சிறிய கட்டுரையை தா. இ. ஆசிரியர்கள் பிரசுரித்திருக்கிறார்கள். அதற்கும் தக்க பதில் விளக்கிக் கூறுதல் அவசியமென்று கருதுகிறேன் அக் கட்டுரை கீழ்க்காணுமாறு:—

மௌலானா:—சிறுவர்களே! வீட்டில்படம் வைப்பது கூடாது.

ஒரு சிறுவன்:—ஏன் கூடாது?

மௌலானா:—பட மிருக்கும் வீட்டிற்குள் வானவர் விஜயம் செய்யமாட்டார்.

சிறுவன்:—அதுதான் எனக்கு நல்லது.

மௌலானா:—ஏன் உனக்கு நல்லது?

சிறுவன்:—மரணத்துக் குரிய மலக்கும் இங்கு விஜயம் செய்ய மாட்டார் இது எனக்கு நல்லதல்லவா?'' "அந்தோ! ஹதீதும் ஏளனத்திற் கிலக்கானதோ!'' (நபிகள் நாயகத்தின் திருவாக்கியங்களை இவ்வாறு ஏளனஞ் செய்வோர் நாயகமவர்களை கௌரவிப்பதற்காக நடத்தப்படும் மீலாத் ஷரீப் கொண்டாட்டத்திற்கும் தேசங்கள் சுற்றித் திரிகிறோமென்று கூறுவாராயின், அது நம்பப்படுமா? சுய நலசூழ்ச்சியே சூழ்ச்சி)

உருவப் படங்களிருக்கும் இடத்துக்கும் நாய்களிருக்கும் இடத்துக்கும் மலக்குகள் வரமாட்டார்கள் என்று ஹதீதில் கூறப்பட்டிருப்பதன் கருத்து, ரஹ்மத் துடைய மலக்குகள் வரமாட்டார்க ளென்பதுதான் என்று முஹத்திதீன்கள் கூறி யிருக்கிறார்கள். மேலும் உயிர் வாங்குவதற்காக ஏவப்பட்ட மலக்கு நாயின் உயிரை எவ்வாறு அருவருப்புடனே வாங்குவதற்கு வருவாரோ, அவ்வாறே படம் வைத்திருப்பவனுடைய உயிரையும் வாங்க அருவருப்புடன் வந்து வாங்கி விடுவாரென்பதை தா. இ. ஆசிரியர்கள் உணரக்கடவார்களாக. இவ்விதமே அம்மனிதனுடன் "கிராமன் காதிபீன்'' மலக்குகளும், பாதுகாக்கும் மலக்குகளும், அருவருப்புடனேயே யிருந்து வருவார்களென்று முஹத்திதீன்கள் கூறியிருப்பதை ஹாபிஸ் உணரவில்லை போலும்!

சோதரீர்! தா. இ. ஹாபிஸ் என்பார் முந்திய கட்டுரையில் 4 மத்ஹபுகளுடைய இமாம்களான பாரவான்களால் குர்ஆன்

ஹதீதுகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள பிக்ஹூ சட்ட திட்டங்கள் உறுதியற்றன வென்று கூறி அவைகளை குரங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டு நடப்பது சரியல்ல வென்றும், அப்பிக்ஹூ சட்டங்கள் பொது ஜனங்களுக்கு நன்மையைப் பயக்கா வென்றும், பலவாருகப் பிதற்றி பிக்ஹூ சட்ட திட்டங்களையே அடியோடு ஒழிக்க முயன்றிருக்கிறுர். அதற்குத்தக்க வாயாப்பும் பெற்றிருக்கிறுர். இப்பொழுதோ வெனின் பரிசுத்த குர்ஆன் ஷரீபையும் எம்பிரான் அவர்களால் அருளப்பெற்ற ஹதீது ஷரீபுகளையும் புரட்டவும் திரித்துக் கூறவும், ஹாபிஸ் உடையவும் அவருடைய மேன்மை தங்கிய ஆசிரியர் எனப்படுவோ ருடையவும் வரண்டுபோன மூளைகளினின்று உதிக்கும் யுக்தியை ஹதீதிலும் குர்ஆனிலும் புகவிட முயல்கின்ருரென்பது அவருடைய மேற்கண்ட கட்டுரைகளிலிருந்து நேயர்கள் நன்குணர்ந்து கொண்டிருப்பார்கள். ஆனதுபற்றி இத்தகைய மார்க்கப் புரட்டர்களைச் சந்தியில் கொண்டு வந்து தக்கப் புத்திபுகட்டி அவர்களைச் சீர் திருத்தி நேர் வழிக்குக் கொண்டு வருவது மார்க்க பக்தியுள்ள ஒவ்வொரு உண்மை முஸ்லிம்கள் மீதும் முக்கிய கடமையாகு மென்பது மூக்காலும் உண்மை. இத் தகையினரை சீர்திருத்த முயற்சிப்பது உண்மை இஸ்லாமிய ஆசாரமும் இஸ்லாம் மதப் பாதுகாப்புமாகும், என்பதை நேயர்கள் உணர்ந்து இப்புண்ணிய காரியத்தைச் செய்ய தீவிரமாக ஒவ்வொருவரும் முன் வருவார் களென்று எதிர்பார்க்கின்றேன்.

தா. இ. ஹாபிஸின் தவருன பத்வா

தா. இ. ஆசிரியர் ஹாபிஸ் என்பார் உருவப் படங்களைத் தாங்கள் சித்தரிப்பதும் படம் பிடிப்பதும் பிரசுரிப்பதும் அவைகளை இல்லத்தில் வைத்துக் கொள்ளுவதும் நம் மார்க்கத்தில் கூடுமென்றும் சாதிக்கும் காதியானிகளைப் பின்பற்றி அதை நிரூபிப்பான் வேண்டி தா. இ. வில் குர்ஆனுடைய ஆயத்துகளுக்கும் ஹதீது ஷரீபுகளுக்கும் தவருன வியாக்கியானங்களைச் செய்து மனம் போன படி உளறிக் கொட்டியவரென்பதும், அதற்கு 30-7-30-ல் வெளியான ஸை. இ. வில் குர்ஆன் ஹதீதுகளைக்கொண்டு தக்க ஆதாரங்களோடு வாயாப்பு அறையப் பெற்று அதற்கு நாளிதுவரை எத்தகைய பதிலும் கூற முடியாமல் மூலையில் பதுங்கிக்கொண்டிருக்கின்ருரென்பதுவும் நேயர்களறிவர். ஷை ஹாபிஸ் என்பார் 15-8-30ல் வெளியான அவரது தா. இ. வில் "மார்க்க வினவிடை" என்ற மகுடத்தின்கீழ் தமது தவருன கொள்கையை ஸ்திரப்படுத்தி ஓர் மார்க்க பத்வா வெளியிட்டுள்ளார். அது வருமாறு:—

மார்க்க வினவிடை

(1) முஹம்மத் நபி (ஸல்) அவர்களுடைய மவ்லித் ஷரீப் ஓதப்படும் வீட்டிற்கு ஹிந்துக்கள் வரலாமா?

(2) மவ்லித் ஷரீபு ஓதப்படும் இடத்தில் தண்ணீர் வைத்து லெப்பை அவர்களால் ஓதி ஊதப்பட்டால் அதைப் பெண்கள் சாப்பிடலாமா?

(3) மவ்லித் ஷரீப் ஓதப்படும் வீட்டிலுள்ளவர்கள் இம்மாதம் 12 நாளைக்கும் மீன் வகையருக்கள் தின்னலாமா?

(4) மவ்லித் ஷரீபு ஓதும் வீட்டிலுள்ளவர்கள் அவ்வீட்டில் ஜிமாஃ (சேர்க்கை) செய்யலாமா?

(5) மவ்லித் ஷரீப் ஓதப்படும் இடத்தில் மேக்கட்டியில் பக்ஷிகள் தொட்டில் மாதிரி பூவினல்செய்து மேற்படி தொட்டிலில் பூவினல் பக்ஷி மாதிரி செய்து வைத்து மேற்படி மேக் கட்டியில் கட்டலாமா? இங்ஙனம்

ப. அ. சையித் அஹ்மத் தரகனர்,
மேலப்பாளையம்.

விடை

*   *   *

(5) அந்த இடத்தை அழகாய் வைத்திருப்பது நல்லதுதான். ஆனல் எல்லே கடந்து அனுவசியமான இஸ்ருப் செய்வதுதான் கூடாது.

சகோதரர்காள்!

5-வது வினுவுக்கு ஹாபிஸ் என்பார் இறுத்திருக்கும் விடை எம்மட்டும் பொருத்தமானது என்பதைக் கவனிப்பீர்களாக. வினவியவரின் நோக்கம் மவ்லித் ஷரீப் ஓதும்படியான இடத்தில் அழகிய பட்சிகளின் சொரூபங்களேக் கடிதங்களாலோ வேறு வஸ்துக்களாலோ செய்து அவைகளேத் தொட்டிலில் உட்கார்ந்திருப்பதுபோல் அமைத்து மேக்கட்டிகளில் தொங்கவிடலாமா என்பதேயாகும். அவ்வாறு அவர் வினு வினவுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லே. இதில் முக்கிய கேள்வி பட்சியின் முழு சொரூபங்களே மவ்லித் ஷரீப் ஓதப்படும் இடத்தில் வைக்கலாமா? என்பதே. அவ்வாறு மவ்லித் ஷரீப் ஓதும் ஸ்தலத்தில் தொங்கவிடுவது நம் மார்க்கச் சட்டப்படி ஹராமாகுமென்பது திண்ணம். நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திரையில் சொரூபப் படம் அமைக்கப்பட்டிருந்த வீட்டினுள் நுழைய மறுத்துவிட்டார்களென்று ஹதீது ஷரீபில் வந்திருப்பதை 30-7-30 ஸைபுல் இஸ்லாத்தில் விளக்கமாகவும் விவரமாகவும் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். மவ்லித் ஷரீபு ஓதப்படும் சங்கையான மஜ்லிஸுக்கு எம்பெருமான் நாயகமவர்களின் தூய்மையான ரூஹ் முபாரக் பிரசன்னமாகிறதென்று நமது மார்க்கத் தலேவர்களாகிய பெரியார்கள் பகர்ந்துள்ளார்கள். அதை நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். திரையில் அமைக்கப்பட்ட உருவப் படத்தைக் கூடாதென்று விளக்கிய எம்பெருமான் நபிகள் திலகம் நாயகமவர்களின் தூய்மையான ரூஹ் முபாரக் பக்ஷிகளின் உருவச் சிலேகள் உயிர் தங்கக்கூடிய விதமாகவும், நிழல் விழக்கூடிய விதமாகவும் அமைக்கப்பட்டு தொங்கவிடப்பட்ட ஸ்தலத்திற்குப் பிரசன்னமாகுமென்று எவ்வாறு நினேக்க முடியும்?

ஆனதுபற்றி இவ்வித சொரூபங்களேத் தூய்மையான இடத்தில் வைக்கக் கூடாதென்று அழுத்தமாகச் சொல்லவேண்டியிருக்க, அது நல்லது தான் என்று கூறிய ஹாபிஸ் பாக்கவியின் மார்க்கப் புரட்டை எவர்தான் கண்டிக்காமலிருக்க முடியும்? இவ்வித இலட்சணத்தில் உள்ள அவர் மார்க்க வினு நமக்கு அனுப்புவோர்கள், அத்துடன் ரூபா 5 அனுப்பவேண்டும், இன்றேல் அவ்வினு கவனிக்கப்படமாட்டா, என்று அவரது தா. இ. வில் விளம்பரஞ் செய்திருந்தார். வயிற்றுப் பிழைப்புக்காகப் பணத்தைக் கேட்டாலும் அதற்கு ஒழுங்கான முறையில் ஊழியஞ் செய்யவேண்டுமென்பது கடமையென்பதை உணரவில்லே போலும்.

மார்க்க விரோதமான கொள்கைகளே முஸ்லிம் சாமான்ய ஜனங்களிடையே வெட்கமும், அச்சமுமின்றி பரப்ப முயற்சித்து கண்ணியமுள்ள உலமாக்களின்பெயர் நாமங்களேக் கெடுத்துவரும் இன்னவரை குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பென்று ஏன் கூறக் கூடாது?

மேலும் தென்னிந்தியாவுக்கே கல்வியின் பொக்கிஷமாகக் கீர்த்தி பெற்றுத் தென்னிந்திய மத்ரஸாக்களுக்குத் தாய் மத்ரஸாவாய் விளங்கி நிற்கும் வேலூர் மதரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தின் பெயர் நாமத்தையும் இன்னவர் கெடுத்து வருகின்ருர். ஓர் மத்ரஸாவில் கல்விகற்று வெளியாகியவர்கள் பல திறப்பட்டவர்களா யிருப்பதும் அவர்கள் வம்சத்திற்கும் இயற்கைக் குணத்திற்கும் ஏற்றவாறு மார்க்கப் பக்தர்களாகவும் புரட்டர்களாகவும் ஏற்படுவதும் உலக சகஜமேயாயினும், அவ்வித பகிரங்க மார்க்கப் புரட்டராய்த் தோன்றி ஜனங்களே வழிகெடுப்பதற்கு, அம்மதரஸாவினுல் இவருக் களிக்கப்பெற்ற பட்டத்தைக் கையாயுதமாக உபயோகப்படுத்துவதை அறிந்த அம்மதரஸா அதிபதிகள் அப்புரட்டரைக் கண்டித்து நேர்வழியில் திருப்ப முயற்சிக்கக் கடமைப்பட்டுள்ளார்களென்பதை நான் வினயமாக அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் அதிபதிகள் உடனே மேற்கண்ட ஹாபிஸ் பாக்கவி என்பவரை அழைத்து அவர் மார்க்கவிரோதமாக வரைந்துள்ள விஷயங்கட்கு ஆதாரம் காட்டும்படியும் கேட்டு, அவருக்கு நற்புத்திபுகட்டி கெட்ட கொள்கையை விட்டும் நீங்கி நேரான வழியில் நடக்கும்படி தாக்கீது செய்ய வேண்

டுவது அத்தியாவசிய மென்பதை மத்ரஸா பாக்கியாத்தின் பெரியார்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன். எம்போன்றவர்கள் உண்மையை எடுத்து கூறப்புகின் மேற்கண்ட ஹாபிஸ் என்பாரும், அவரின் கோஷ்டியினர்களும் ஏதோ நாங்கள் பொறுமை கொண்டு வீண்பழியைச் சுமத்திவிடுகின்றோ மென்று கூறுகின்றார்கள். அதைப்பாமரஜனங்களும் நம்பஇடமுண்டாகிறது. ஆனதுபற்றி ஹாபிஸ் பாக்கவி யென்பாருக்கு பொது ஜனப் பணச் செலவில் விலாப்புடைக்க சாப்பாடு போட்டுக் கல்வியைக் கற்பித்து ஸன்னதும் அளித்துப் பேருபகாரம் புரிந்த வேலூர் பாக்கியாத்து ஸாலிஹாத்தின் அதிபரவர்களும், உஸ்தாதுகளும் அவருடைய மார்க்க விரோதச் செயல்களை விட்டு நேரான வழியில் நடந்துகொள்ளும்படி நல்லுபதேசம் செய்ய வேண்டும். அதற்கு அவர் இணங்காவிடில் அவர் மார்க்கப்புரட்டரென்பதை சாமானிய முஸ்லிம் சகோதரர்களும் நன்குணர்ந்து கொள்வார்கள்.

சகோதரர்களே! மேற்கண்ட ஹாபிஸ் பாக்கவியின் மார்க்க முரணான கூற்றை நம்பி ஏமார்ந்து போகாதீர்கள். நாயக மவர்களின் மவ்லித் ஷரீபு ஸ்தலங்களில் மேற்கண்ட விதமான பக்ஷிகளின் சொரூபங்களையும் மற்றும் உயிருள்ள வஸ்துக்களின் படங்களையும் அமைத்துக் கொள்ளாது தூய்மையாக வைத்துக் கொள்வீர்களாக.

'மார்க்க பக்தன்.'

தா. இ. ஆசிரியர்களின் இலங்கைவிஜய விநோதம்

இலங்கையில் நிகழ்ந்த உண்மை யாது?

தா. இ. வின் அண்டப்புளுகும், அதன் நிருபரின் ஆகாயப் புரட்டும்.

பா. தா. வின் பிரசங்க ஊழல்.

நமது நபிகள் திலகம் எம்பெருமான் ரஸூல் (ஸல்) அவர்களின் பிறந்த தினக் கொண்டாட்டத்தை விமரிசையாக நடத்த வேண்டுமென முன்னதாகவே சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம், ஸைபுல் இஸ்லாம், தூண்டிவந்ததன் பயனாக நாடெங்கும் அவ்விழாவை வெகு சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்துவந்ததுபோல் இலங்கை நகரிலும் நடத்த முயற்சிகள் செய்யப்பட்டு வந்தன. அச் சந்தர்ப்பத்தை தா. இ. ஆசிரியர்கள் தங்களின் தீய—வழிகெட்ட—பிரசாரத்தை இலங்கையில் பரத்துவதற்கு ஏற்ற சமயமாகக் கருதி அவர்களின் கொள்கையில் சிக்கி உழலும் ஒரு சில சாமான்யர்களைத் தூண்டி அவர்கள் மூலமாக இலங்கை விஜயஞ் செய்து தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவான் வேண்டி மீலாத் ஷரீபின் கொண்டாட்ட மகா சபைக்கு தங்களை இலங்கை முஸ்லிம்கள் அழைத்திருப்பதாகவும் தாங்கள் விஜயஞ் செய்யப்போவதாகவும், தங்கள் தா. இ. வில் வெளியிட்டார்கள். அதற்கேற்ப, இலங்கையிலுள்ள தா. இ. அபிமானியான ஒ. கே. மொய்தீன் கைச்சாத்துடன் ஓர் துண்டுப் பிரசுரமும் வெளிவந்தது. அதில் "ஹிமாயத்துல் இஸ்லாம்" சங்க ஆதரவின்கீழ் நபிகள் நாயகம் பிறந்ததினக்கொண்டாட்ட மகாசபை "கோல்பீஸ்" மைதானத்தில் நடைபெறுமென்றும், அதில் பல அறிஞர்கள் பேசுவார்களென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் உண்மையை உசாவினதில் பா. தா. வின் வருகைக்காக செய்யப்பட்ட சூழ்ச்சியென்றே தெரியவந்தது. அதன்பேரில் பா. தா. சுன்னத்துவல் ஜமாஅத்து கொள்கைக்கு முரணான காதியானி அஹ்மதிக் கொள்கையைப் பிரசாரஞ்செய்கிறவரென்றும், அதற்காகவே இங்கு விஜயஞ் செய்கின்றாரென்றும், அவ்வாறு இங்கு விஜயஞ் செய்வதால் முஸ்லிம் சமூகத்தில் பிளவு ஏற்படுமென்றும், எற்கெனவே இவர் சிங்கப்பூர் சென்றகாலத்து அங்குள்ள முஸ்லிம்களில் பிளவும், குழப்ப

மும் ஏற்பட்டதின் நிமித்தம் அரசாங்கத்தாரால் இவர் வெளியேற்றப்பட்டாரென்றும், ஆனதுபற்றி அவரை இங்கு வரவொட்டாமல் அரசாங்கத்தார் தடுக்கவேண்டுமென்று இங்குள்ள முக்கிய முஸ்லிம் பத்திரிகை அரசாங்கத்துக்கு எச்சரிக்கை செய்தது. அதை இங்குள்ள மார்க்க பக்தி கொண்ட முஸ்லிம்களும் ஆதரித்தனர். இதை அறிந்த தாவூதி கோஷ்டிகள் இங்குள்ள அஹ்மதியத் தலைவர் மூலமாக அரசாங்கத்துக்கு சிபாரிஷ் செய்யும்படி வேண்டிக் கொண்டனர். அவருடைய சிபாரிஷின் பேரில் 7-8-30-ல் தூத்துக்குடி கப்பலில் தா. இ. ஆசிரியர்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்தார்கள். உடனே C. I. D. போலீஸ் அதிகாரி கப்பலுக்குச் சென்று அவர்களை நேரே போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். இவர்களை வரவேற்பதற்காகச் சாமான்ய கூலிவேலை செய்பவர்களும், சம்பளக்காரர்களும் சுமார் 10, 15, பேர்களே வந்திருந்தனர். அவர்களும் போலீஸுக்குப்பின் தொடர்ந்து சென்று வெளியில் காத்துக் கொண்டிருந்தார்கள். போலீஸார் ஷெ ஆசிரியர்களை 1 மணி நேரம் கேள்விகள் கேட்டு விசாரித்து அவர்களை போட்டோ பிடித்தும், அவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டும் வெளியே விட்டார்கள். அவர்கள் வெளியே வந்தவுடன் காத்துக்கொண் டிருந்தவர்கள் இவர்களை ஓர் மோட்டாரில் ஏற்றி அம்பட்டன்தெரு 105, நெ. கட்டிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஏற்கெனவே ஷெயார்கள் தங்குவதற்காக கொல்பிட்டியில் ஒரு பெரிய பங்களா அமர்த்தப்பட்டிருப்பதாக அக்கோஷ்டியினர் செய்த பிரஸ்தாபம் பொய்யென்று வெளுத்தது. இதன் ரகசியம் வெளியாகாமற் போகாது. கோல்பீஸ் மைதானத்தில் மகாநாடு கூட்டுவதற்கு அனுமதிகேட்ட ஒ. கே. மொய்தீன் வகையறா யோக்கியதைப் பொறுப்பற்றவர்களென்பதைத் தெரிந்து அரசாங்கத்தினர் அனுமதி கொடுக்க மறுத்துவிடவே, டவுன் ஹாலில் ஷெ மகா நாடு கூடுமென்று அவர்கள் வெளியிட்ட பிரசுரத்திற்கு மாறாக 8-8-30 ல் பிரைஸ் பார்க் மைதானத்தில் ஓர் கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு சிங்கள ஸ்ரீமான்ஜெயத்திலகா தலைமை வகிப்பாரென்று பிரசுரஞ்செய்திருந்தும் அவர் வர மறுத்துவிட்டார். அந்தக் கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்த அவ்வூர் முஸ்லிம்களில், எவரும் அதில் தலைமை வகிக்க கிடைக்காமையால் மனம் நொந்து பா. தா. வுடன் கோஷ்டியாக சேர்ந்துவந்த திருநெல்வேலி ஜனுப் பிஜ்லி சாஹிபே தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். பின்னர் ஹாபிஸ் பாக்கவி என்பார் குர் ஆன் ஆயத்து சிலவற்றை ஓதி அமர்ந்தார். பின்பு அக்கிராசனர் எழுந்து ஆங்கிலத்தில் கொஞ்ச நேரம் பேசி அமர்ந்த பின், பா. தா. எழுந்து குர் ஆனில் ஸூரத்துல் பக்ராவில் ஆரம்பத்திலிருந்து முப்லிஹூன் வரை ஓதி முடித்து அவ் வாயத்துகளுக்கு வியாக்கியானஞ் செய்கையில் கூறியதாவது:-

இவ்வாயத்துகளில் முஸ்லிம்கள் ஜெயசீலர்கள் என்று ஆண்டவன் சொல்கிறானே அப்படி ஜெயம் பெற்றிருந்தால் இந்தச்சட்டசபையில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கின்றார்கள்? அசெம்பிளியில் எத்தனை முஸ்லிம்கள் இருக்கிறார்கள்? என்று நீங்கள் சொல்லுங்கள்; அப்படியில்லையானல் அல்லாஹ் சொன்னது பொய்யா? இந்த இடத்தில்தான் நான் ஒப்புக்கொள்வதில்லை. இந்த சட்டசபையில் எவ்வளவோ மகான்களெல்லாம் இருக்கிறார்கள், அவர்களுக்கு இவ்வுலகத்தில் தான் செல்வமென்றும் மறுவுலகத்தில் அவர்களுக்கு ஒன்றுமில்லை யென்றும் முஸ்லிம்களுக்குத் தான் எல்லா பாக்கியமுமென்றும் சொல்வது சரியில்லை; இதற்கு கருத்து வேறு இருக்கிறது. உலகத்தில் தீர்க்கதரிசிகளாக ஈசாநபி வந்தார், மூஸாநபிவந்தார், பௌத்தபிரான், கிரிஷ்ணமூர்த்தி, ராமர் வந்தனர். இவர்களெல்லாம் ஏகதெய்வத்தையே வணங்கும்படி மதப்பிரசாரம் செய்தார்கள். ஆனல் அவர்கள் ஏகதெய்வக் கொள்கையை நிலைநிறுத்தவில்லை; பலதெய்வங்களையும் வணங்கி வந்தார்கள். அவர்களெல்லாம் மரணித்த பிறகு ஆறுநூறு வருடங்கட்குப்பின்னல் ரசூலே கரீம் முஹம்மது (ஸல்) பிறந்து தாய் தகப்பன் இல்லாது அனாதையாக வளர்ந்து அவருடைய காலத்தில் ஒட்டகம் ஆடு மேய்த்து 40-ம் வயதில் ஏகதெய்வக்கொள்கையை நிலை நிறுத்தினர்............பத்ரில் முஷ்ரிக்

குகள் 1000 பேர்களுடன் சிறுவர்களுள் பட 313 முஸ்லிம்களைக் கொண்டு யுத்தஞ் செய்தார். அப்பொழுது ஆண்டவனிடம் துஆ கேட்டார். அதில் 'முன் நான் வயது சென்ற ஓர் விதவையை (கதீஜாவை) கலியாணம் முடித்தேன்; இப்போது ஆயிஷா என்ற ஓர் கன்னிகையை முடித்திருக்கிறேன். இந்தக் கன்னிகையுடன் இன்பங்களை அனுபவிக்க என்னை விட்டுவை' என்றாவது அல்லது 'என்னுடைய சின்ன மகள் பாத்திமாவை எனது தம்பி அலிக்கு பால்ய விவாகஞ்செய்து பார்க்க என்னை விட்டுவை' யென்றாவது கேட்கவில்லை. ஆனால் இந்த 313 முஸ்லிம்களும் இறந்து விட்டால் உன்னுடைய ஏக தெய்வக் கொள்கையை நிலைநிறுத்த முடியாமற் போகுமே என்றுதான் கேட்டார்.

ஹிந்து மதமானாலும் பௌத்த மதமானாலும் கிறிஸ்துவ மதமானாலும் நான் எந்த மதத்தையும் தூஷிப்பதில்லை. நான் சிறு பிராயமுதல் சகல மதங்களையும் ஆராய்ச்சி செய்திருக்கின்றேன். ராமாயணத்தை என்னைப்போல் ஒரு ஹிந்துவுங்கூட படித்திருக்கமாட்டான். எனக்கு நிகராக ராமாயணத்தைப் பிரசங்கஞ் செய்யக் கூடியவர்களில்லை. ராமாயணசாமி, ராமாயண பண்டிதர் என்ற பட்டத்தையும் எனக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் ராமாயணத்தையாவது உங்களுடைய "சீறா" வையாவது சொல்ல இங்கு வரவில்லை. ஹிந்து மதத்தில் கடவுள் ஒன்றென்றாலும், புத்த மதத்தில் கடவுள் ஒன்றென்றாலும், கிறிஸ்துவ மதத்தில் கடவுள் ஒன்றென்றாலும் நான் ஒப்புக்கொள்வேன். மக்கமா நகரத்தில் 360 புத்துகளை வணங்கிக் கொண்டு வந்தார்கள். அதைத் தவிர வீட்டுச்சாமி, காட்டுச்சாமி என்று வைத்து வணங்கினார்கள். அந்த அனாச்சார சாமிகளை விட்டுவிட்டு நபிகள் நாயகமவர்கள் கொண்டுவந்த இஸ்லாம் மார்க்கத்தில் ஈடுபட்டார்கள். அந்த மார்க்கத்தில் இன்று 45 கோடி முஸ்லிம்கள் இருக்கிறார்கள். அந்த நாயகத்தின் பெயரைக் கேட்டு கலிமா ஓதுங்கள்! "லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு". அந்தநாயகம் 5 வக்து தொழும்படி ஏவினார்கள். அதை 50 வக்து தொழும்படி நான் சொல்வேன். அந்தத் தொழுகை அத்தனை மேன்மையானது. மேலும் முஸ்லிம்கள் அவசியம் தொழவேண்டும். (ஷை பிரசங்கத்தில் உடனே நின்று கொண்டும் தலை திறந்தவராகவும் தண்ணீர் குடித்துவிட்டுச் சொன்னதாவது) நான் இதோ நின்று கொண்டு குடிக்கிறேன்; மௌலவிமார்கள் தாவூத்ஷா நின்று குடித்தான் "காபிர்"; தலை திறந்தவனாகக் குடித்தான் "காபிர்" என்ற பத்வா கொடுக்கமுன் வந்து விடுவார்கள். நாளைத் துண்டு பிரசுரங்களும் பறக்கும். இன்னும் தாடிவைத்தால் காதியானி,(ஜெக்) முடிவைத்தால் காபிர்,இந்தப்படி அவன் காபிர் இவன் காபிர் என்ற பத்வா கொடுப்பதில்பின் வாங்கமாட்டார்கள். இவர்கள் யாராவது ஒரு அன்னியனை முஸ்லிம் ஆக்கியது உண்டா? அல்லது நீங்கள் யாராவது ஒருவனை முஸ்லிமாக்கியதுண்டா? அப்படியானால் எத்தனை பெயரை முஸ்லிம்களாக ஆக்கியிருக்கிறீர்கள்? விரலை நீட்டுங்கள். தவிர நின்று குடிப்பதில் குபிருமில்லை, ஹராமுமில்லை, மக்ரூஹுமில்லை. இது விலக்கென்று நான் ஒரு கிதாபிலும் பார்க்கவில்லை. எங்கள் நாயகமும் ஒரு படையில் நின்று குடித்திருக்கின்றார்கள், அதுபோல் நானும் நின்று குடித்தேன்........

இதற்குப்பின் இவ்வாறே பல வீண்வார்த்தைகளைச் சொல்லியும் உலமாக்களைத்திட்டியும் தமது பிரசங்கத்தை முடித்தார்.

நண்பீர்! நான் இவரின் பிரசங்கம் எவ்வாறு யிருக்கின்ற தென்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்ற கருத்தோடு அச்சபைக்குச் சென்றிருந்தேன். நான் கவனித்தவரை அவருடைய பிரசங்கத்தை மேலே உள்ளபடி குறிப்பிட்டுள்ளேன். அதில் ஏதாவது பதங்கள் வேறுபட்டிருக்கலாம். ஆனால் விஷயமும் கருத்தும் மாற்றமா யிருக்கமுடியாது. அவருடைய மேற்கண்டபிரசங்கத்தை நேயர்கள் கவனிப்பார்களேயாயின் அவருக்கு மார்க்ககல்வி ஞானம் எம்மட்டும் உள்ள

தென்பது தெற்றென விளங்கிவிடும். அவர் ஓதிய குர்ஆன் ஆயத்தில் முஸ்லிம்களை ஜெய சீலர்களென்று கூறப்பட்டிருப்பது முஸ்லிம்கள் சட்ட சபையில் ஸ்தானம் வகிப்பதுதானென்று அவர் கருதியிருப்பதாக அவருடைய சொல்லிலிருந்து தெரிகின்றது. இது எம்மட்டும் பொருத்தமான தென்பதை நீங்களே யூகித்து அறிந்து கொள்வீர்களாக. மேலும் அவர் "இச் சட்டசபையில் எவ்வளவோ மஹான்களெல்லா மிருக்கிறார்கள். அவர்களுக்கு இவ்வுலகத்தில் தான் செல்வமென்றும், மறு உலகத்தில் அவர்களுக்கு ஒன்றுமில்லை, முஸ்லிம்களுக்குத்தான் சகல பாக்கியங்களுமென்றும் சொவ்வது சரியல்ல. இதன் கருத்து வேறு இருக்கிறது" என்று கூறியிருப்பதானது காபிரீன்களும் சுவர்க்கம் புகுதுவார்கள் என்ற அவருடைய தவறான கொள்கையை இப் பிரசங்கத்தில் நுழைத்திருக்கின்றாரென்பது விளக்கிக்காட்டுகிறது. நபிகள் நாயகமவர்களின் திருநாமத்தைக் கேட்டவுடன் கலிமாவைச் சொல்லுங்களென்று கூறி, தானும் கலிமாவை ஓதிக்காட்டினதிலிருந்து, நாயகமவர்களின் திருநாமத்தைக் கேட்டவுடன் ஸலவாத்துச் சொல்லவேண்டுமென்ற அவ்வளவு ஞானமும் அவருக்கு இல்லை யென்றே விளங்குகிறது. அவர் நின்று தண்ணீர் குடித்தது மல்லாமல், நாயகமவர்கள் யுத்தகளத்தில் ஓர் சந்தர்ப்பத்தில் நின்று குடித்ததாகவும் கூறுகின்றார். அவர் நின்று பிரசங்கஞ் செய்யும் ஸ்தலத்தை யுத்தகளமென்று நினைத்துக்கொண்டார்போலும்! அவருடைய பிரசங்கத்தில் உள்ள தவறுகளை எடுத்துக் கூறப்புகின் மணல் சோற்றில் கல் ஆராயப் புகுவதற் கொப்பாகுமென் றஞ்சி நேயர்களேஅதை ஆராய்ந்துஉணர்ந்துகொள்ளும்படிவிட்டு விடுகிறேன்.

நாயகமவர்களின் பிறந்ததினக் கொண்டாட்ட மகா சபைகளில் அறிஞர்களால் செய்யப்பட்ட அநேகப் பிரசங்கங்களை நான் கேட்டிருப்பதுபோல் நேயர்களும் கேட்டிருப்பீர்கள். ஆனால் பா. தா. வின் பொருத்தமற்ற தவறுகள் மலிந்த பிரசங்கத்தைப்போல் கேட்டிருக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன். இத்தகைய பிரசங்கத்தைச் செய்கிறவரின் இஸ்லாமியத் தொண்டும் இஸ்லாமியப் பிரசாரமும் எத்தகையதா யிருக்குமென் பதை நான் விளக்கிக் காட்டாமலே நேயர்களறியக் கடவர்.

10-8-30 ஞாயிற்றுக்கிழமை டவுன் ஹாலில் பிஜ்லி சாஹிபு தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடுவதாகவும், அதிலும் தாவூத்சா முதலியவர்களும் பேசுவதாகவும். அறிவிக்கப்பட்டிருந்தது. குறித்தநேரத்தில் பிஜ்லி சாஹிபு வராமையாலும், தலைமை வகிக்கத் தகுந்த வேறு எவரும் அக் கூட்டத்தி லில்லாமையாலும், தாவூத்சாவே தலைமை வகித்துத் தண்டபாணி பிள்ளையைப் பேசும்படி சொன்னார். பிஜ்லி சாஹிபு சற்றுநேரம் கழித்து வந்தார். அவர் வந்தவுடன் இங்கிலீஷில் கொஞ்சம் பேசினார். கூடியிருந்தவர்கள் தமிழில் சொல்லும்படி கூறினார்கள். அதற்கு தாவூத்சா எழுந்து "இப்போது அவர் சொன்னதை தமிழில் சொல்ல சந்தர்ப்பம் இல்லை; நாளை வாழைத்தோட்ட மைதானத்தில் கூட்டம் நடைபெறும். நோட்டீஸை எதிர் பார்க்கவேண்டாம். நீங்கள் எல்லாரும் சமுகங் கொடுக்க வேண்டும். அப்போது நான் பிஜ்லி சாஹிபு பேசியவைகட்கு தமிழில் மொழி பெயர்க்கின்றேன்" என்று கூறி சபையைக் கலைத்தார். மறுநாள் 14உ வாழைத் தோட்ட மைதானத்திற்கு ஒருசில ஜனங்களும், C. I. D. போலீஸும் சென்று காத்துக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் தாவூத்சாவைக் கேள்விகள் கேட்பதற்குத்தயாராக வந்திருந்தனர். இது விவரந் தெரிந்த தாவூத்சா அக் கூட்டத்திற்கு வராமல் ஒளிந்து பதுங்கிக் கொண்டார். காத்துக் கொண்டிருந்தவர்கள் ஏமாற்றமடைந்து கலைந்து சென்றார்கள்.

பின்பு கொழும்பில் அவருடைய மனோரதம் பலிக்காமற் போகவே, கண்டியில் யாரோ அவர்களை அழைத்ததாக கண்டிக்குச் சென்றனர். அங்குள்ள மார்க்க பக்தி பூண்ட ஸுன்னத்து வல்ஜமாஅத்து முஸ்லிம்கள் இவர்களுக்கு தக்க புத்தி புகட்டவே, அங்கும் இவர்கள் கூட்டம் கூட்டவோ பிரசங்கம் செய்யவோ முடியாமல் ஓர் இடத்தில் பதுங்கி யிருந்து விட்டு புறப்பட்டு கொழும்புக்கு திரும்பவும் 14-ந் தேதி வந்து சேர்ந்தார்கள். அன்றையத்தினமே கொழும்பைவிட்டு இந்தியாவிற்கு புறப்பட்டும் விட்டார்கள். இவர்கள் இவ்வளவு அவசரமாகவும், அலங்கோலமாகவும் கொழும்பைவிட்டுப் புறப்

பட்டமைக்குக் காரணம் இல்லாமற்போகவில்லை. இதுதான் இவர்கள் இலங்கை வந்து சாதித்த சாதிப்பு! உண்மை இவ்வாறிருக்க 15-8-30-ல் வெளிவந்துள்ள தா. இ. பத்திரிகையில் "கொழும்பில் மீலாத் ஷரீபு, ஜனாப் தாவூத்ஷா அவர்களுக்கு ஆடம்பரமான வரவேற்பு, மீலாத் ஷரீபு கமிட்டியாரின் அபார உழைப்பு, சகல வெற்றியும் ஜனாப் ஓ. கே. மொய்தீன் அவர்களுக்கே" என்ற படாடோபமான தலையங்கங்களை சூட்டி "நம் விசேஷ நிருபரிடமிருந்து" என்று ஓர் கட்டுரை வெளியாகியிருக்கிறது. அதைக் கண்ணுற்ற கொழும்பு, முஸ்லிம்களில் தா. இ. வின் அண்டப்புளுகையும், ஆகாயப்புரட்டையும் உணர்ந்து நகையாரெவருமிலர். ஏனெனின் இவர்களைக் கொழும்புத் துறைமுகத்தில் பதினாயிரக்கணக்கான முஸ்லிம்கள் எதிர்கொண்டழைக்கக் காத்துக்கொண்டிருந்தனரென்று கூறுகிறார். வந்திருந்தவர்களில் முக்கியஸ்தர்களின் பெயர் நாமங்களைக் குறிப்பிடும்போது தாவூதி குஞ்சுகளாகிய சாமான்ய பேர்வழிகளான வ. மி. ஷம்ஸுத்தீன், ஓ. கே. மொய்தீன் முதலிய 10 நபர்களையே குறிப்பிடுகிறார். இதிலிருந்து பதினாயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தனரென்பது வடிகட்டின பொய்யென்று விளங்குகிறதன்றோ? எதிர்கொண்டழைக்கப் பதினாயிரம்பேர் வந்தார்களென்றும், கூட்டத்திற்கு ஐயாயிரம் பேர் வந்தார்களென்றும் கொஞ்சமும் அல்லாஹ் ரசூல் பயமின்றி பச்சையாய்ப் புளுகியிருக்கிறார்! இவ்விதப் பொய்யும், புளுகும், பித்தலாட்டமுமான கூற்றுக்களைக் கொண்டு இலங்கையல்லாத பிற ஊர்களி லுள்ளவர்களை ஏமாற்றினாலும், சகல நடவடிக்கைகளையும் கண்கூடாகக் கண்ட இலங்கை வாசிகளை ஏமாற்ற முடியாதென்பது திண்ணம். "நாய் பட்டபாடு நாயை அடித்த தடிக்கு மறைந்ததன்று" என்பது ஓர் முதுமொழி. அதற்கேற்ப பா. தா. இலங்கையில் அடைந்த கதியை இலங்கை வாசிகளுக்கு எள்ளளவும் மறைக்க முடியாது. தா. இ. வின் சொந்த நிருபரின் புரட்டான கூற்றுக்களை அனுசரித்து 22-8-30ல் வெளியான தா. இ. வில் அதன் ஆசிரியர்கள் "எமது இலங்கைப் பிரயாணம்" என்ற மகுடத்தின் கீழ் தலையங்கம் வரைந்துள்ளார். அதில் 'குப்புற விழுந்துங்கூட மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கூற்றுக்கேற்ப அவர்களின் மனச்சாட்சிக்குக் கூட ஓர் சிறிதும் ஒவ்வாத புளுகை வரைந்து உளறிக் கொட்டியிருக்கிறார். என்னே! இவர்களின் புளுகு!! இவர்கள்தானா இஸ்லாமிய போதகாசிரியர்கள் !!! இவர்களை வரவேற்ற ஒன்றரை டஜன் நபர்களிலும் இவர்களின் கூட்டத்திற்குச் சென்றிருந்தவர்களிலும் இலங்கையிலுள்ள கண்ணியமுள்ள வியாபாரிகளிலாவது தக்க மனிதர்களிலாவது ஒருவரேனும் தென்படவில்லை என்பதை நான் கண்ணுற் கண்டுள்ளேன். கூட்டத்திற்கு ஒரு சில ஜனங்கள் கூடியதும், என்னைப்போல் இவர் பிரசங்கத்தின் தோரணை எவ்வாறிருப்பதென்பதை அறிவதற்காகவே வந்தவராவர். இவரது பிரசங்கத்தை நேரில் கேட்டவர்கள் இவரின்மீது அபிமானங் கொண்டிருந்தவர்கள் உள்பட இவர் சுரக்குடுக்கை தான், உள்ளில் பண்டம் ஒன்றும் இல்லாதவரென்பதை நன்குணர்ந்து கொண்டார்கள். யானும், இவர் இத்துணைப் படுமோசமான நிலைமையில் இருப்பாரென்று கருதியிருக்கவில்லை. அவருடைய பிரசங்கத்தை நேரில் கேட்ட பிறகு தான் இவரின் கேவல நிலைமை எனக்கும் நன்கு புலனானது. இவர் சென்னை சென்று இங்கு நிகழ்ந்தவற்றிற்கு முற்றும் மாற்றமாக, பொய்யும் புளுகுமாக, தமது பத்திரிகையில் வரைந்து வெளி யிட்டிருப்பதிலிருந்து, இவர் ஆதிமுதல் தமது பத்திரிகையில் பொய்யும் புளுகுமாக வரைந்து வருகின்றனரென்பது இலங்கை வாசிகளாகிய எங்களுக்கு நன்கு புலனாகிவிட்டது. இவர்களை இதுவரை இவ்விதப் பொய் பிரசாரத்தைக்கொண்டு ஏமாற்றி வந்தார்களென்பதை அவர்களும் உணர்ந்துகொண்டார்கள். இனி தாவூத்சாவின் ஜபம் இலங்கை நகரில் பலியாதென்பது திண்ணம்.

பா. தா. தமக்கு கமுதியிலும், நெல்லிக்குப்பத்திலும் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்ததாக அப்பத்திரங்களை யெல்லாம் தமது பத்திரிகையில் பிரசுரித்திருக்கின்றார். ஆனால், அவர் இலங்கையை விட்டு இந்தியாவுக்கு ரயில் ஏறியபொழுது ஸ்டேஷனில் இலங்கைக்கு வரவழைத்த ஓ. கே. மைதீன் கோஷ்டியினர் அவருக்குச் சொன்ன பிரிவு உபசாரத்தையும் அதற்கு பா. தா. கூறிய பதிலையும் பிரசுரிக்காமல் விட்டிருப்பதன் இரகசியம் என்ன?

பிரிவுபசாரப் பத்திரத்தில் "தாங்கள் எளிய நடையில் வரவேற்றதாகவும், இங்கு தங்களுக்கு ஏற்பட்ட அநேக கஷ்டங்களைத் தாங்கள் சகித்துக் கொண்டதாகவும், எதிர் பாராத பல கஷ்டங்கள் நேரிட்டதாகவும், தாங்கள் தங்கியிருக்கும் இடத்துக்கு நாங்கள் சரியாக வந்து கண்டுகொள்ள முடியாமற் போனதற்கு வருந்துவதாகவும், மன்னிப்பு கோரியிருப்பதும், வெளியாகிவிடுமென்று? பா. தா. அதற்கு பதில் கூறுகையில், "நீங்கள் எங்களை அழைத்து அதனால் நீங்களடைந்த கஷ்ட நஷ்டங்களை நாங்கள் அறிவோம். எளிய நடையில் எங்களை இச் சந்தர்ப்பத்தில் வரவேற்றது என் தரத்திற் கதிகமென்றே நினைக்கின்றேன். நாங்கள் கோரி வந்தகாரியம் நிறைவேறாமல் C. I. D. காவலில் இருந்ததற்கு வருந்துகின்றோம். கண்டியிலும் எங்களுக்கு இடம் கொடுக்காமல் தடுத்துவிட்டனர்............................" இந்த விஷயங்களெல்லாம் வெளியாகிவிடுமென்று? இவைகளை எல்லாம் மற்ற ஊரார்களுக்கு மறைக்கக் கூடுமானாலும் இலங்கை வாசிகளுக்கா மறைக்க இயலும்?

உண்மை யுரைப்போன்,

கொழும்பு

அழைப்புக் கடிதம்.

சோதரீர்! தாருல் இஸ்லாம் ஆசிரியர்களான பா. தா வும், ஹாபிஸ்பாக்கவி என்பாரும், நம் சன்மார்க்கத்துக்கு முரணான பற்பல கொள்கைகளை வெளியிட்டுவருகின்றார்களென்பது உலகறிந்த விஷயம். அவைகளைத் தக்கமுறையில் விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று சுன்னத்து வல் ஜமா அத்து உலமாக்களால் ஆசிரியர்கள் பலமுறையும் அழைக்கப்பட்டனர். சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரும் அவ்வாறு அழைத்தனர். உலமாக்கள் அழைக்கும் இடத்துக்கு வர அவ் வாசிரியர்கட்கு விருப்பமில்லாவிடின் அவ்வாசிரியர் அழைக்கும் இடத்துக்கும் உலமாக்கள் வருவதாக வாக்களித்தனர். எனினும் அவர்கள் ஒன்றுக்கும் இசைந்தார்களில்லை. அஃதேபோன்று தா. இ. ஆசிரியர்கள் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த காலை கண்ணியமான முறையில் அழைப்புக்கடிதம் அனுப்பியிருந்தோம். இதற்கும் இணங்காமல் இந்தியாவுக்கு திரும்பி விட்டனர். நம்ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கத்தார் அனுப்பிய அழைப்புக்கடிதத்தையும் அதை யொட்டி நடந்துள்ள வேறு கடிதப் போக்கு வரத்தையும்நேயர்கள் கவனிக்குமாறு இதன்கீழ் பிரசுரிக்கின்றோம்.

ஹிதாயத்துல் இஸ்லாம்

106, 2-ம் குறுக்குத்தெரு கொழும்பு. 8-9-30

பஹிரங்க அழைப்பு.

"தாருல் இஸ்லாம்" பத்திராதிபரும், ஜவாஹிருல் புர்கானின் ஆசிரியருமான ஜனப். பா. தாவுத்ஷா சாகிப் பி. ஏ. அவர்களுக்கு கொழும்பு ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கத்தின் அங்கத்தினர்கள் அறிவிப்பதாவது:—

தங்களால் இயற்றப்பெற்ற ஜவாஹிருல் புர்கான் என்னும் தமிழ் மொழி பெயர்ப்பு வியாக்கியான நூலிலும், இதர நூற்களிலும் "தத்துவ இஸ்லாம்" "தாருல் இஸ்லாம்" ஆகிய பத்திரிகைகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் நம் "சுன்னத்து வல் ஜமாஅத்தின்" மூலக் கொள்கைகளுக்கு முற்றும் மாறுபட்ட பல விஷயங்கள் எங்கள் பரிசீலனை மூலம் காணப்படுகின்றன. ஆகையால் அவ்விஷயங்களைப் பற்றி தங்களிடம் நேரில் நியாயமானதும், கண்ணியமானதுமான சமரசத்தோதோரணையில் விவாதித்து உண்மையான முடிவுக்கு வந்து அதனை முஸ்லிம் மகாஜனங்களுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்ற முடிவு செய்திருக்கிறபடியால், நிகழும் ஆகஸ்டு மாதம் 13-ந்தேதி புதன்கிழமை

காலை 10 - மணிக்கு (சம்மாங்கோட்டு) ஜாமி உல் அள்பர், பள்ளியில் பிரபலஉலமாக்களும் கண்ணியம் வாய்ந்த முஸ்லிம் கனவான்களும் கூடும் சபைக்குத் தயவுசெய்து தாங்களும் தங்களின் மௌலவி பாஜில் ஹாபிஸ் எ. என். முஹம்மது யூசுப் (பாக்கவி) அவர்களும் தங்களுக்குரிய சகல ஆதாரங்களுடன் சமுகங் கொடுக்குமாறுகோருகிறோம். நாங்கள் குறிப்பிட்ட பள்ளிக்கு வருவதில் தங்களுக்கு ஏதேனும் ஆக்ஷேபனையிருக்கும் பக்ஷத்தில் தங்களால் குறிப்பிடப்படும் எந்தப் பொது ஸ்தலங்களுக்கும் நாங்கள் வரத் தயாராக யிருக்கின்றோம். 13-ந் தேதி சபைக்கூட்ட 10-ந் தேதி வரையும் தங்களின் பதிலை எதிர்ப் பார்க்கிறோம்.

இங்ஙனம்,

ஹிதாயத்துல் இஸ்லாஸ் சங்கம்

காரியதரிசிகள்.

குறிப்பு :—இதில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் நிருபத்தின் அசல் கடிதத்தை கனம் பா. தா. அவர்களுக்கு போஸ்டல் சர்டிபிகேட் பெற்று அனுப்பியிருக்கிறோம்.

இவ் வழைப்புக்கு பா. தா. எவ்வித பதிலையும் அனுப்பவில்லை. ஆனால் அவருடன் சென்றிருந்த திருநெல்வேலி வக்கீல் ஏ. கே. பிஜ்லீ சாஹிப் அவர்கள் ஆங்கிலத்தில் பதிலொன்றை அனுப்பி வைத்தனர். அதன் தமிழ்மொழிப் பெயர்ப்பு பின்வருமாறு :—

கொழும்பு, 9உ ஆகஸ்டுமீ, 1930

கொழும்பு, இரண்டாம் குறுக்குத் தெருவிலிருக்கும் ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசிகளுக்கு, கொழும்பு அம்பட்டன் தெரு, 105-நெ. வீட்டிலிருக்கும் திருநெல்வேலி வக்கீல் A. K. பிஜ்லி சாகிபு M. A., L. L. B., எழுதியது :—

நாளிதுமீ 13உ தாங்கள் குறிப்பிடப்போகும் நேரத்தில் தாருல் இஸ்லாம் ஆசிரியராகிய பா. தாவுத்ஷா ஆ தாங்கள் சாட்டும் குற்றங்களுக்கு அவர் சரியானபதில் அளிக்க வேண்டுமென்ற மார்க்க தர்க்கப் போட்டிக்கு அழைப்பதாயுள்ள ஒரு கடிதத்தை இன்று காலை என்னிடம் காட்டினர். தாவுத்ஷாவின் பிரசங்கத்தில் ஏதும் தவறுகளிருப்பின், அல்லது ஏதும் ஆக்ஷேபிக்கக் கூடியவை யிருப்பின் அவ்விஷயமாக என்னிடம் வந்து கேட்டால், அதற்கு மறுமொழி நான் கொடுக்கிறேனென்று நேற்றைய பகிரங்க மைதான பிரசங்கக் கூட்டத்தில் நான் சொன்னது தங்களுக்கு நன்கு ஞாபகமிருக்கும். நான் அவ்வாறு சொல்லியிருந்தும், தாவுத்ஷா சாகிபுக் கெழுதிய கடிதத்தைப் பார்க்க வியப்புறுகிறேன். அக்கடிதத்தில் அவருடைய தவறுகள் இன்ன, இன்னவை யென்று குறிப்பிட்டு விபரமாக எழுதினீர்களுமில்லை; அல்லது இருகக்ஷியாருக்கும் பொதுவாக பஞ்சாயத்தார் யாரென்று தெரிவித்தீர்களுமில்லை.

இவ்வித ஒரு சீர்கேடான, முறையில்லாத ஒரு கூட்டத்திற்கு அவர் வருவாரென்று எவ்வாறு எதிர்பார்த்திருக்கிறீர்கள்? எனினும், ஸிலோன் ஸீ. ஐ. டி. யிலுள்ள டிப்ட்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் மார்க்கத் தர்க்கம் புரிவதற்கு அனுமதிக் கொடுப்பார்களாயின், அவர் சந்தோஷமாக நல்ல சம்மதத்துடன் தங்கள் அழைப்புக் கிணங்கி மறுமொழி செப்ப தயாராக இருப்பதாக எனக்குத் தெரிவிக்கிறார். இது ஓர் மகா அனுவசியமான காரியம். அவருடைய பிரசாரம், பிரசங்கம் இவைகள் இலங்கையில் ஒற்றுமையின்மை, கலகம் இவைகளை விளைவிக்குமென்று தெரிவித்து, தாவுத்ஷா இறங்கினதும், ஸி. ஐ. டி. டிபார்ட்மெண்டு அவரை அழைத்துக்கொண்டுபோய் மார்க்கத் தர்க்கங்களில் ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கைபண்ணி விட்டிருக்கிறார்கள். ஆகையால் அவருக்கு "வாய்க்குப்பூட்டு" ப் போட்டதும், அவருடைய "வாக்குச் சுதந்தரத்தை அபகரித்து விட்டதும் இலங்கை வாசிகளாகிய நீங்கள் தானே! பார்த்தீர்களா! தங்களின் வேண்டுகோளை (வேண்டுகோள் கடிதத்தை) ஸி. ஐ. டி. க்கு அனுப்பியிருக்கிறோம். அதன் பதிலை எதிர்ப் பார்த்துக்கொண்டும் இருக்கிறோம்.

இந்த தர்க்கத்தில் நானும் இருந்துகொள்ள வேண்டுமென்ற அவா யிருப்பதால், தயவுசெய்து அதற்கு அனுமதி கூடிய சீக்கிரம் எழுதி அனுப்புவீர்களானால் மிகவும் நன்றென நினைக்கிறேன். நான் 10-ந்தேதி யன்று இலங்கையைவிட்டு வெளிச் செல்வதனால், அதற்கு முன்னமேயே அதற்குரிய ஏற்பாடு

களைச் செய்வீர்களென்றும் எதிர்ப்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
(கையொப்பம்) ஏ. கே. பிஜிலி.

இக்கடிதத்துக்கு நம் ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கத்தார் அனுப்பிய பதிலான இங்கிலீஷ் கடிதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு பின் வருமாறு:—

கொளும்பு, 10-8-30.

"ஹிதாயத்துல் இஸ்லாம் சங்க காரியதரிசிகள், கனம் எ. கே. பிஜ்லீ சாஹிபவர்களுக்கு எழுதியது.

தாங்கள் நாளது மாதம் 9-ந் தேதி எழுதிய லட்டரை கண்ணுற்றபோது அந்தஸ்திலும், புத்தி தீக்ஷண்ணியத்திலும், அறிவிலும் சிறந்த தங்கள் போன்ற மகானுக்கு, நாங்கள் எழுதியிருந்த கடிதத்தைப் படித்து விஷயத்தை அறிந்துகொள்ள எவ்விதம் இயலாமற் போய்விட்டதென்பதை கவனிக்க வெகு ஆச்சரியமாகவே யிருக்கின்றது. எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி தயவுசெய்து இன்னொரு முறை அந்த கடிதத்தை வாசித்துப் பார்ப்பீர்களானல், எங்களுடைய கடிதம் வாழைத் தோட்டத்து மீட்டிங்கு பிரசங்கத்தை குறித்ததன்றென்பது நன்கு விளங்கும். ஆனல் சென்ற 10-11 வருடங்களாக அவருடைய நூற்களிலும் பிரசுரங்களிலும் நீடிய ஆராய்ச்சிச் செய்ததின் பொருட்டு எழுதப்பட்ட கடிதமென்று தங்களுக்கு விளங்குமென்று திட்டமாக நாங்கள் கருதுகின்றோம்.

வாழைத் தோட்டத்து மீட்டிங்கு சபாநாயகர் என்ற தோரணையில் தாங்கள் இவ் விஷயத்தில் பிரவேசித்தமை நிரம்பவும் பொருத்தமற்றதாகவே யிருக்கின்றது ஏனெனின் தாங்கள் சபாநாயகராக இருந்த மீட்டிங்கிற்கும் அவர் இதுகாலம் வரை செய்துகொண்டு வரும் தப்பு, தவறு, கொடார்த்தங்களுக்கும் காரணங் காட்டும்படி எழுதியிருந்த கடிதத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை.

மேற்கண்ட காரணங்களினல் இதற்குப் பதிலெழுதுகிறதற்கு அவரே கடமைப்பட்டிருக்கிறாரன்றி தாங்களல்லீர்.

(ஒப்பம்) காரியதரிசிகள்.

இக்கடிதத்துக்கு எ. கே. பிஜ்லீ சாஹிப் எழுதிய பதில் பின் வருமாறு:—

"ஹிதாயத்துல் இஸ்லாம் காரியதரிசிக்கு எழுதிய லட்டர்:—

அருமையான துரையே! தங்களின் கடிதம் கிடைத்தது. நான் எவ்வாறு நினைத்திருந்தேனே, அவ்வாறு விஷயம் உண்மையில் இல்லாததால் என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நானுமிருந்து கூடுமானல் இரு திறத்தாரையும் ஒன்று கூட்டி நல்ல அன்னியோன்னியமான முடிவுக்குக்கொண்டு வரலாமென்றெண்ணி யிருந்தேன். ஆனல் நான் எண்ணியபடி இல்லாததால் தாங்களிரு திறத்தாரிடத்திலும் இவ்விஷயத்தை விட்டு விடுகின்றேன். உங்களுக்குள் எவ்விதத்தில் தர்க்கித்து முடிவு செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமிருக்கின்றதோ அவ்விதமே செய்துகொள்ளுங்கள்.

(ஒப்பம்) எ. கே. பிஜ்லி.
10—8—30.

எதிர் பார்க்கப்பட்டபடி பா. தாவூத்சா இது சம்பந்தமாக எவ்விதமான பதிலையும் அனுப்பவில்லை. இதைப்பற்றி ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கத்தார் வெளியிட்ட அறிக்கையை இதன் கீழே பொறிக்கின்றோம். அது வருமாறு:—

கொழும்பு ஹிதாயத்துல் இஸ்லாத்தின் அழைப்பும், பா. தாவூத்ஷாவின் ஒளிப்பும்.

சகோதரர்காள்!

ஜனப் பா. தாவூத்ஷா இயற்றியுள்ள நூற்களிலும் அவரது பத்திரிகைகளிலும் மார்க்கத்தின் மூலக்கொள்கைகளுக்கு முற்றும் முரண்பட்ட விஷயங்கள் பல காணப்படுவதை சீர்திருத்தம் செய்யும் நன்னேக்கங்கொண்டு, ஜனப் தாவூத்ஷா சாஹிபையும் அன்னரின் மவுலவி முஹம்மது யூசுபு சாஹிபையும் நேரில் வந்து எங்களின் வினக்கட்கு தக்க ஆதாரங்களோடு பதிலளிக்கும்படியாக கண்ணியமானவும் நியாயமானவுமான முறையில் போஸ்டல் சர்டிபிகேட் பெற்று அவருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பினேம் என்பதை துண்டுப் பிரசுரவாயிலாய் நேயர்கள் அறிந்திருக்கலாம். அவ்வழைப்புக்கு தாக்கல் தராமலும் விஜயஞ் செய்யாமலும் மௌனமாயிருந்து

விட்டு 14௳ ரயில் மார்க்கமாய் மத்ராஸுக்கு கம்பி காட்டிவிட்டார். ஆனதால் இம் மார்க்கப் புரட்டரின் கூற்று வெளியாகிவிட்டதென்பதை உணர்வீர்களாக.

கண்ணியம் வாய்ந்த உலமாக்களின் ஒழுங்கான அழைப்பிற்கிணங்கி, பா. தா. சபைக்கு விஜயஞ் செய்து முகாலோபனம் செய்ய மறுத்துவிட்டபடியால் இனி அவர் எவ்வகையிலும் தம்முடைய தீய கொள்கைகளை அகற்றிக்கொள்வாரென்ற நம்பிக்கை எடுபட்டு விட்டதால் முஸ்லிம் உலகில் அவரின் தீய பிரசாரம் பரவாமல் தடுப்பதற்காக பொதுமக்களுக்கு அவரின் மாறான கொள்கைகளை விளக்கிக்காட்டுவதும், மார்க்கமறியாமல் அத்தீய கொள்கைகளை நம்பி ஏமாந்து போயிருக்கும் நம் சகோதரர்களை அக் கொள்கையை விட்டகற்றுவதும் ஒவ்வொரு தலைவர்களையும் பொருத்த விஷயமென்பதை ஞாபக மூட்டுகிறோம். இனியாவது தக்க முயற்சியோடு முன்வந்து தங்கள் தங்கள் கடமைகளை செய்து தாவூத்ஷாவின் வழிகெட்ட கொள்கையில் சிக்காமல் தடுக்கும்படி மிக வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். வஸ்ஸலாம்,

கொழும்பு, ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கம்.
15—8—30. காரியதரிசிகள்.

குறிப்பு:—10௳ வரை பா. தா. வின் தாக்கல் கிடைக்காததால், நாங்கள் 12௳ C. I. D. டிப்டி இனிஸ்பெக்டர் ஜெனரல் துரை அவர்களுக்கு பா. தா. உடன் பஹிரங்க மார்க்க தர்க்கம் செய்ய அனுமதி தரவேணுமென்று மனு செய்திருந்தோம். அதற்கு C. I. D. துரை அவர்கள் எங்களை அழைத்து இன்று 13௳ தாவூத்ஷா கண்டிக்கு எங்கள் பார்வையில் போயிருக்கிறார், வருத்தி பேசுவதாக சொன்னார்கள். அதுபோல் 14௳ காலை 11-மணிக்கு கண்டியிலிருந்து வந்ததும் C. I. D. க்கு ஆஜருக்கு போனார். ஆனால் அன்று மாலையே பா. தா. வின் பரிதாப வெளியேற்றத்தை பார்த்ததிலிருந்து எங்கள் C. I. D. துரை அவர்களின் கேள்விக்கு இசைந்தாரில்லை போலும்! என்னே இவரின் ஆண்மைத்தனமும் இவரின் மவுலவி சாகிபின் பேடித்தனமும் வெட்கம்! வெட்கம்!!

குறிப்பு:—நண்பீர்! தா. இ. ஆசிரியர்களுக்கு நம் சங்கத்தார் அனுப்பிய அழைப்புக் கடிதத்தை மேலே படித்திருப்பீர்கள். கண்ணியமான தோரணையில் அழைக்கப்பட்டிருப்பதையும் நன்குணர்ந் திருப்பீர்கள். ஒன்றையும் அவ்வாசிரியர்கள் பொருட்படுத்தாமல் தாங்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று மனம் போனபடியெல்லாம் செப்பித்திரிய முடிவு செய்திருக்கிறார்களென்று நன்கு புலனாகின்றது. பகிரங்க சபைகளுக்கு வந்தால் தங்களுடைய வண்டவாளம் வெளுத்துப் போகுமென்று அதைரியப் படுவார்களானால், அத்தகைய கெட்ட கொள்கைகளைப் பத்திரிகைகளில் பிரசுரித்து வந்தும்—வருவதுமல்லாமல் பிரசாரம் செய்வதற்கு வெளியில் கிளம்பலாமா? இவ்விஷயம் சாமான்யமானதன்று. முஸ்லிம்களின் உயிருக்கும் மேலாக மதிக்கப்படும் திருக்குர்ஆன் ஷரீபுக்கு இன்னோர் தப்பான வியாக்கியானங்கள், விபரீத அர்த்தங்கள் செய்து வருகிறார்களென்பது நிரூபிக்கப் பட்டுப் போயிற்று. இந் நிலைமையிலும் மேற்படி தா. இ. ஆசிரியர்கள் மவுனஞ்சாதித் திருப்பதன் கருத்துதானென்னே? இனிமேலும் முஸ்லிம்கள் அசட்டையாக யிருக்கமாட்டார்கள் என்பதை இன்னோர் நன்குணரக்கடவர். மேலும் திருக் குர்ஆன் ஷரீபானது ஒரு சில நபரால் தப்பான முறையில் வியாக்யானஞ் செய்யப் பட்டு பொது மக்களிடையே பரத்தப் படுங்கால் முஸ்லிம்கள் இதனைப் பொருட் படுத்தாமலும், கவனியாமலும் மவுனஞ் சாதித்துக் கிடப்பார்களாயின் தங்கள் சன்மார்க்கத்துக்கு இதனினும் வேறென்ன இடையூறு வேண்டியிருக்கிறது?

ஜனாப் பிஜ்லி சாஹிப் கோரியபடி ஸி. ஐ. டி. டிபார்ட் மெண்டாரிடத்திலும் உத்தரவு வாங்கப்பட்டுப் போயிற்று. மத்தியஸ்தர்கள் வேண்டுமென்றால் கோடானகோடி முஸ்லிம்களில் சன்மார்க்க அறிவும், நியாய புத்தியுமுள்ள ஒரு நான்குகனவான்கள் அகப்படாமலா போய்விட்டனர்? இவ்வித நிலைமையில் ஏன் தயங்கவேண்டும்? ஆதலால் பசப்பு வார்த்தைகளால் பொதுஜன முஸ்லிம்கள் ஏமாறுங்காலம் மலையேறி விட்டது. இதன் உண்மையை பா. தா, சிங்கப்பூர் சுற்றுப்பிரயாணத்தில் ஒருவாறு உணர்ந்திருந்தாரென்றே நம்ப இட முண்டாயிருந்தது. இது சமயம்

தனது தவறுகளை திருத்திவிடுவதாக ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டோமே, இனியும் ஜனங்களைச் சிலகாலம் எமாற்றலாமென்று கொழும்புக்குப் பிரயாணஞ் சென்றிருந்ததில், அங்கு நடந்த நிகழ்ச்சி விபரங்களிலிருந்து அவ்வாசிரியர்கட்கு தகுந்தபடிப் பிணை ஏற்பட்டிருக்குமென்றே நம்புகின்றோம். இனியேனும் அவ்வித குதர்க்கவாதங்களையும், வீண் முயற்சிகளையும் புரியாமல் தங்களது காதியானி அஹ்மதிய்யாக் கொள்கைகளை அகற்றிக் கொள்வதற்கு முன் வருவார்களாக.

காரியதரிசிகள்,

ஹிதாயதுல் இஸ்லாம் சங்கம்,
கொழும்பு.

லாஹூர் அஹ்மதிய்யாக் கோஷ்டியினரால் பிரசுரிக்கப்படும் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும்.

Magazines published by the Lahore section of the Ahmadiya Community to disseminate the Light of Islam.

பா. தா. ஒரு பக்கா அஹ்மதியே.

தா. இ. பத்திரிகை அஹமதியாக் கொள்கையைத் தான் பிரசாரம் செய்கிறது.

கோழும்பு ம. கா. நா. முஹம்மத் ஷம்சுத்தீன் எழுதுகிறுர்.

“மெய் வந்துவிட்டது. பொய் அழிந்து விட்டது. நிச்சயமாக பொய்யானது அழிந்து போகக்கூடியதாகவே இருக்கிறது.” (அல் குர்ஆன்)

நமது நண்பர் பா. தாவூதுசா பி. ஏ. என்பார் சிறிது காலமாய் நம் தமிழகத்தின்கண் அஹ்மதியாக்களின் கொள்கைகளைப் பிரசாரம் செய்துவருகிறுரென்பதும், லண்டன் வோக்கிங் மஸ்ஜிதிற்குச்சென்று அஹ்மதியா மிஷனில் சம்பளம்பெற்று வேலை செய்து வந்தாரென்பதும் லாஹூருக்குச் சென்று காதியானியாகிய மௌலவி முஹம்மத் அலீ எம். ஏ. எல். எல். பி. யை நேரில் தரிசித்து “பைஅத்து” பெற்று வந்தாரென்பதும் உலகறிந்த விஷயமே யாகும். இவர் மௌலவி முஹம்மத் அலியின் அருமைச் சிஷ்யர் என்பதில் எட்டுணையும் சந்தேகமின்று. ஆனல் இக் கொள்கைகளைப் பகிரங்கமாகக் கூறின், நந் தமிழ்நாட்டில் எவரும் ஒப்புக் கொள்ளமாட்டார், தன்னுடைய புத்தகங்களும் விலையாகா, தன் வயிற்றிலேயே மண் வீழ்ந்துவிடும் என்பதை யுணர்ந்து அக்கொள்கைகளை மறைமுகமாகவும் இரகசியமாகவும் பிரசாரம் புரிந்துவந்தார். இதனல் நந் தென்னுட்டில் ஒரு பெருங்கிளர்ச்சி யேற்பட்டிருக்கிறதென்பதை யாரே மறுக்கவல்லார்?

மேலும் தங்களது கெட்ட கொள்கைகளை இக் கொழும்பிலும் கொணர்ந்து பரப்புவான் வேண்டி தா. இ. ஆசிரியர்கள் மீலாத்ஷரீப் கொண்டாட்டம் நடத்தப்போவதாக பெயர் கூறிக்கொண்டு சிலோனுக்கு விஜயம்செய்யப் போவதாக அறிவித்திருந்தார்கள். இதைக் கண்ட சிலோனின் ஸுன்னத்து வல் ஜமாஅத்து முஸ்லிம்கள் மேற்படி ஆசிரியர்கள் சிலோனுக்கு வராமல் ஸி. ஐ. டி. மூலியமாய் தடை யுத்தரவு பிறப்பிக்கவேண்டு மென்று கோரினர்கள். இதை யறிந்த ஹிமாயத்துல் இஸ்லாம் சங்கத்தார் சிலோன் அஹ்மதிய அஸோஸியேஷன் காரியதரிசி கனம் சி. எச். மந்தாரா அவர்கள் மூலியமாக கவர்ன்மெண்டாருக்கு அடியிற்கண்ட விஷயங்களைச் சமர்ப்பித்துக்கொண்டார்கள். அதாவது;—

“பா. தாவூத்சா அஹ்மதியச் சங்கத் தலைவரான மௌலவி முஹம்மத் அலியின் சிஷ்யர். இவர் லண்டன் வோக்கிங் மஸ்ஜிதில் பணிவிடையில் அமர்ந்திருந்து, லண்டனைவிட்டு இந்தியாவுக்குத் திரும்புங்கால் இலங்கை அஹ்மதிய அஸோஸியேஷன் விருந்தினராகவு மிருந்திருக்கின்றுர். தற்காலம் தமிழ்நாட்டில் “தாருல் இஸ்லாம்” என்ற பத்திரிகையை நடத்திவருகின்றுர். அதற்கு இவர்தான் ஆசிரியராகவும் விளங்குகின்றுர். முன்னர் இவ் விலங்கைக்குக் கவர்னராக யிருந்த ஸர். ஹைகிலி போர்டு துரை யவர்களால் அஹ்மதிய மெஷினரிகளுக்கு கொடுக்கப்பட்டிருந்த “பெர்மிட்டை”க்காண்பித்து இவரதுவருகையின் தடையை நிவர்த்திக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்கள். அதற் கிணங்க கவர்ன்மெண்டாரும் பா. தா. அஹ்மதி மிஷனரியர் என்ற ஹோதாவில் இலங்கையில் இறங்கலாம், என்று அனுமதி யளித்தார்கள். இச் சம்பவத்திலிருந்து அவர் “பக்கா அஹ்மதீ” என்று தெளிவாய் விளங்கி விட்டது.

மேலும் 28-7-26-ல் லாஹூர் அஹ்மதியாச் சங்கம் வெளியிட்டிருக்கும் ‘பைகாமெஸுல்ஹு’ என்னும் பத்திரிகையில், தங்கள் அஹ்மதியக் காதியானிக் கொள்கைகள் எந்தெந்தவிடங்களில், எந்தெந்த பத்திரிகைகள் வாயிலாக, எவ்வெவரால் பிரசாரம் செய்யப்பட்டுவருகிற தென்பதைப்பற்றி ஒரு படம் பொறிக்கப்பெற்றுள்ளது. அதில் நம் “தாருல் இஸ்லாம்” சஞ்சிகையும், அதன் ஆசிரியர் தாவூத்ஷா பி. எ.” என்றும் எடுத்துக் காட்டப்பட் டிருக்கிறது. பரிசுத்த, ஈமானை மேற்

கொண்ட தென்னாட்டு முஸ்லிம்களை ஏமாற்றுவான் வேண்டி "நான் காதியானியுமல்லன், அஹ்மதியு மல்லன், அஹ்மதிய்யாக் கொள்கையை யான் சரிகாணவுமில்லை" என்று தன் பத்திரிகையில் பன்முறையும் எழுதிவந்தாரே யன்றி காதியானிகளின் "பைகாமே ஸுல்ஹில்" அஹ்மதியக் காதியானிகளின் பத்திரிகைகளோடு தமது பத்திரிகையும் பிரசுரித்தமை தவறென்று அப் பைகாமே ஸுல்ஹில் ஓர் அக்ஷரமேனும் பிரசுரிக்கச் செய்தாரில்லை." காதியானிகளிடத்தில் "தான் காதியானிதா னென்றும் பரிசுத்த ஸுன்னத்து ஜமாஅத்து முஸ்லிம்களிடத்தில் நான் முஸ்லிமாகத்தா னிருக்கின்றேன்" என்றும் கூறிப் பசப்பி வெளவால் போல் ஏமாற்றி வருகிறாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கு கிறது. மேலும் காதியானி அஹ்மதிய்யாக்களாகிய மௌலவி முஹம்மத் அலீமுதலியோரால் எழுதப்பட்ட (1) TheHolyQuran (2) Translation ofTheHolyQuran (3) Muhommad TheProphet முதலிய புத்தகங்களும், காதியானி மிர்ஜா குலாம் அஹ்மத் எழுதிய (4) TheTeachings of islam என்னும் புத்தகமும் தங்களிடத்தில் கிடைக்குமென்று தம் தாருல் இஸ்லாம் பத்திரிகையில் விளம்பரம் செய்து வரப்படுகின்றமையும் ஒய்ந்தபாடில்லை.

இவ்வாறு அஹ்மதிய்யா காதியானிகளுடன் பா. தா. வுக்கு நெருங்கிய சம்பந்தமிருப்பதை இனியேனும் நம் சுன்னத்து ஜமாஅத்துப் பொதுஜன முஸ்லிம்களுக்கு எடுத்தறிவித்து விட்டால் அவர்கள் ஏமாற்ற முறாமல் நேர்மையான வழியில் நடந்துகொள்வார்களல்லவா?

பா. தா. தான் லாஹூர் பார்ட்டியைச் சேர்ந்த அஹ்மதிய்யுமல்ல-காதியானியுமல்லவென்றும், மிர்ஜா சாஹிபை மஸீஹென்றோ மஹ்தீயென்றோ, முஜத்தி தென்றோ, இமாமென்றோ தாம் நம்பவில்லை யென்றும் அடிக்கடி பத்திரிகையில் பிரசுரித்து வருவதைக் கண்ணுற்று, இதன் உண்மையை அறிய வேண்டுமென்று லாஹூர்ப் பார்ட்டித்தலைவரான மௌல்வி முஹம்மத் அலீ எம். ஏ. எல். எல். பி. வுக்கு, கொழும்பு டேம் ஸ்டிரீட்டின் வர்த்தக கனவா னொருவர் அடியிற் கண்டவாறு ஒரு நிருபம் அனுப்பினர். அந்த நிருபமாவது:—

"கவுரவம்தங்கிய மௌல்வி முஹம்மத் அலீ சாஹிப் எம். ஏ. எல் எல். பி அவர்களுக்கு:—

தென்னாட்டில் தங்கள் அஹ்மதிய்யா இஷாஅத்தே இஸ்லாத்தின் கொள்கைகளைப் பிரசாரம்செய்வதற்காக "தாருல் இஸ்லாம்" என்னும் சஞ்சிகை ஏற்பட்டிருப்பதாகவும், அதற்கு ஆசிரியராக பா. தாவூத்ஷா பி. ஏ. இருந்து வருவதாகவும் எங்களுக்குத்தெரிய வருகின்றது. அவ்வாசிரியர் ஓர் உண்மை அஹமதியர்தானா? அவர் தங்கள் கரத்தில் பைஅத்துச் செய்திருக்கின்றாரா? அப்படிச் செய்திருந்தால் அதன் ஆதாரத்தை அனுப்புவீர்களாக" என்பதாகும்.

இதற்கு விடையாய் அவர்கள் தமது காரியதரிசி மூலமாக அனுப்பியபதில் நிருபம் வருமாறு:—

அவரது கடிதத்தின் மொழி பெயர்ப்பு

"அஹ்மதியா அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம்" லாஹூர், 6-டிசம்பர், 1928.

தாங்கள் எனக்கும், ஹஜ்ரத் அமீர் அவர்களுக்கும் அனுப்பிய எல்லாக் கடிதங்களும் தவறாது கிடைத்தன. தாவூத்ஷா அவர்கள் ஓர் அஹ்மதிய்யே. அவர் எம்மிஷனரியாளாக இங்கிலாந்துக்கும் (ஒக்கிங்குக்கும்) சென்றார். அதன் நற்சாக்ஷிகளை தங்களுக்கனுப்புவதற்கவசியமில்லையென நாங்கள் கருதுகின்றோம். ஓர் அஹ்மதியை அவரது செய்கையைக் கொண்டு மதிக்கப்படுமேயன்றி டம்பத்தைக் கொண்டன்று."

(ஒப்பம்) முஹம்மத் மன்ஸூர் இலாஹி,
கவுரவக் காரியதரிசி.

இக்கடிதங்களிலிருந்து பா. தாவூத்சா ஓர் பக்கா அஹமதிதானென்று நிச்சயமாய் தெரியவருகின்றது.

பா. தா., லாஹூர் அஹ்மதியாச் சங்கத்தாரால் 1924-ம் வருடம் வரை தமக்கு மாதந்தோறும் ரூ. 200-0-0 சம்பளம் கிடைத்து வந்ததாகவும், அதுவரை அவ்வியக்கத்தில் தமக்கு ஏகதேசத்தில் சம்பந்த

மிருந்து வந்ததாகவும், பின்னர் அச்சம்பளம் நிறுத்தப்பட்டு, தமது சம்பந்தத்தை நீக்கிக் கொண்டதாகவும் 2-8-29 ல் வெளியான தா. இ. வில் வெளிபிட்டிருக்கின்றார். மேலே பொறிக்கப்பட்டுள்ள படத்தில் 1925-ம் வருடம் டிசம்பர் மாதம் தாருல் இஸ்லாம் காணப்படுகின்றது. மேலும் இதுவரை அஹ்மதிய்யா இயக்கத்தில் தா. இ. வுக்கு சம்பந்த மிருந்து வந்ததாக அஹ்மதியர்களே கூறுகின்றார்கள். மௌலவி முஹம்மத் அலீ 6-12-28-ல் எழுதிய தபாலில் பா. தா. பக்கா அஹ்மதிய்யா யிருக்கின்றாரென்று குறிப்பிட்டிருக்கின்றார். இன்னமும் மேல்படி முஹம்மத் அலீயின் ஆங்கிலம்-உர்தூ தப்ஸீரையே பா. தா. மொழி பெயர்த்து "ஜவாஹிருல் புர்கான்" என்று வெளியிட்டு வருகின்றார். ஆகையால் பா. தா. அச்சம்பந்தத்தினின்று இதுவரைக்கும் விலகினரல்லர் என்பது தெற்றென விளங்குகின்றது. பா. தா. வின் குருவான மௌலவி முஹம்மது அலீயின் கூற்றுப் படியே பா. தா. வின் டம்ப வார்த்தைகளையும், எழுதுக்களையும் தவிர்த்து அவரின் வேலையையும், பிரசாரத்தையும் அனுசரித்து அவரை பக்கா அஹ்மதி என்று நிச்சயமாய்க் கூறமுடியும்.

மேலும், தான் நபியென்று தஅவாச் செய்து மரித்துப்போன மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானியால் எழுதப்பட்ட (The Teachings of Islam) என்னும் புத்தகத்தை "இஸ்லாமிய ஞான போதம்" என்ற தலைப்பின் கீழ் மொழிப் பெயர்த்து தமது சஞ்சிகையில் தொடர்ந்து வெளியிட்டும் வந்துள்ளார். இதன் மூலாசிரியரை நேர்முகமாகத் தென்னாட்டு முஸ்லிம்களுக்கு அறிவித்து விட்டால் தன்னைக் காதியானிகளென்று விளங்கிக்கொள்வர், தமது வயிற்றுப் பிழைப்பில் மண் விழுந்துவிடும் என்றஞ்சி அஃதொரு பெரும் "மௌலவி சாஹி" பால் எழுதப்பட்டு, மௌலவி அப்துல் கரீம் சாஹிபவர்களால் ஒரு மகா சபையில் வாசிக்கப்பட்டதென்று மறைமுகமாக எழுதியிருக்கின்றார். காலம் செல்லச் செல்ல அதை எழுதிய மகான் இன்னாரென்றும், அவர் விஷயத்தில் தமது கொள்கைகள் இன்னின்னவை யென்றும் பகிரங்கமாய்ச் சொல்லத் தொடங்குவார் போலும்!

இவைகளைக்கொண்டு பா. தா. ஒரு பக்கா அஹ்மதியாக விளங்குகின்றார் என்பதை எல்லோரும் நன்குணர்தல்வேண்டும்.

"உங்களினின்றும் எவருக்கேனும் முஹம்மத் (ஸல்) பிதாவாகயில்லை. எனினும் அல்லாஹ்வின் திருத்தூதராகவும், இறுதி நபியாகவு மிருக்கின்றார். இன்னும் அல்லாஹ் எல்லா வஸ்துக்களையும் மிக அறிந்தவன்" (அல் குர்ஆன்)

"எனது உம்மத்தில் முப்பது பொய்யர்கள் தோன்றுவார்கள். அவர்களெல்லோரும் நாங்கள் அல்லாஹ்வுடைய நபியாகயிருக்கின்றோம் என்று தஅவாச் செய்வார்கள். உண்மையில் "நான் இறுதி நபியாக" இருக்கின்றேன். எனக்குப்பின் வேறுநபி கிடையாது" (அல்ஹதீஸ்)

இவ்வாறு நம் திருமறையும், நாயகத் திருமொழிகளும், நபிகள் நாயகத்திற்குப்பின் வேறு நபியே கிடையாதென்று வெகுவிளக்கமாய் கூறியிருக்கின்றது. இதற்குமாறாய் மிர்ஜாகுலாம் அஹ்மத் காதியானி 'தான் நபியென்றும், பொதுவாய் எல்லா நபிமார்களைப் பார்க்கினும், குறிப்பாக எம்பெருமானார் நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்களைப் பார்க்கினும் தாம் மிகவும் மேன்மை பொருந்தியவரென்றும் தஅவாச் செய்தார். தன்னை முஜத்தித் என்றும், வாக்குச்சொல்லப்பட்ட மஹ்தியென்றும், ஈஸாவென்றும், ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பகரமாய் அவதரித்தவரென்றும் பலவாறாய்ப் பிதற்றினர். மேலும் தமது கிரந்தங்களில் இவைகளை எழுதியும் வெளியிட்டார். இக்காரணங்கள்பற்றி அவர் வழிகெட்டவரென்னும், சன்மார்க்கத்தைவிட்டுப் புறம்பானவரென்றும் அகில உலக உலமாக்களால் தீர்மானிக்கப்பட்டுப்போயிற்று. இவ்வழிகேடரை காதியானி — அஹ்மதிய்யாக் கோஷ்டியினர் பின்பற்றுகின்றனர். பா. தா. வும் லாஹூர் கோஷ்டியைச் சேர்ந்தவரென்று இதுபோழ்து தெற்றென ஊர்ஜிதமாயிற்று. ஆனதுபற்றி ஏ யுவர்காள்! நீங்களும் இக்கெட்ட கொள்கையையுடையவருடன் சேராமல் விலகியிருந்து உங்கள் ஈமானைப் பாதுகாத்துக் கொள்வீர்களாக!

நிருபசாரம்

பழனி:—மௌமுந்நபி கொண்டாட்டம். ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசி அவர்களுக்கு.— தங்களால் அனுப்பப்பட்ட "நபிகள் திலகம்" என்றும் நூல் 100 வரப் பெற்றோம். தாங்கள் கோரிக்கொண்டபடி 8-8-30-ல் மகாநாடுகூட்டி நபிகள் நாயகத்தின் சிறப்பு, தியாகம் முதலியவற்றைக் குறித்து உபன்னியாசிக்கப்பட்டது. அவ் வரும்பெரும் "நபிகள் திலகம்" நூல்ஹிந்து முஸ்லிம்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. அதற்காக நன்கொடையாக ரூ 8-0-0 அனுப்பியிருக்கிறேன். வீரத் அச்சிட்ட கணக்கில் வரவு வைத்துக்கொள்ளுங்கள். இது விஷயமாய் நாங்கள் கவனியாமலிருந்தும் தாங்கள் சங்கத்திலிருந்து புஸ்தகங்கள் அனுப்பிக்கொடுத்ததானது உண்மையான இஸ்லாமிய சகோதரத்துவத்தை நிரூபிக்கின்றது. இனியும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் எங்களை மறக்காமல் இருப்பீர்களென்று எதிர்பார்க்கின்றோம் என்று டவுன் காஜி மௌல்வி பீர் முஹம்மதுசாஹிப் தெரிவிக்கிறார்.

"நபிகள் திலகம்" போற்றப்படுகிறது:— ஹிபாஜத்துல் இஸ்லாம் காரியதரிசி அவர்கட்கு,

தங்கள் சங்கத்தால் வெளியிடப்பட்ட பிரஸ்தாப நூல்கிடைத்து பயனடைந்தோம். நபிகள் நாயகத்தின் உண்மையான சரித்திரத்தை தெரிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்ததற்கு துதிசெய்கின்றோம். இந் நூலின் மூலகர்த்தாவான கர்வ்ஷ் சாஹிப் அவர்களுக்கும், இதனை நந் தமிழ் பாஷையில் மொழிபெயர்த்து வழங்கிய தங்கள் சங்கத்தாருக்கும் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம். மௌமுந்நபிக்கென்று அஹ்மதியரால் தமிழில் எழுதப்பட்ட நூலையும் படித்தோம் எக் காரணத்திற்காக இவ்வியக்கம் உண்டாக்கப்பட்டது? சகல மதஸ்தரும் உய்த்துணர்வதாயின் அஃது எவ்வாறு எழுதப்படவேண்டும்" என்ற விஷயங்களைக் கவனியாது வெளியிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக நபிகள் ாதர் அவர்களுடைய திருவுருவச்சிறப்புகளை எழுதுவதனால் இதர மதஸ்தர்களுக்கு என்ன பிரயோசனம் ஏற்படலாம்? என்பது தெரியவில்லை என்று ஈரோடு முஹம்மது ஹுசேன் சாஹிப் எழுதுகிறார்.

ஜிப்ரி மௌலானா அவர்களின் வபாத்து.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வம்சத்தில் பிரபல்யமான ஸாதாத்த பாஅலவிய்யாக்களைச் சேர்ந்த அஸ்ஸய்யிது ஷெய்கு இப்னு முஹம்மது ஜிப்ரியுல் ஹரமி(ரலி) அவர்களின் பௌத்திரரும், அஸ்ஸய்யிது அப்துர் றஹ்மானுல் ஜிப்ரி (ரலி) அவர்களின் புத்திரரும், அஸ்ஸய்யிது ஹுஸைன் ஹபஷி (ரலி) அவர்களின் பிரதான சிஷ்யரும், சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் கொழும்பு ஆதரிப்புக் கூட்டத்தின் சபா நாயகரும், கொழும்பு "ஹிதாயத்துல் இஸ்லாம்" சங்கஸ்தாபகருமான அல்ஆலிமுல் அல்லாமா ஹாஜியுல் ஹரமைனுஷ்ஷரீபைன் அஷ்ஷெய்குல் காமில் ஹஜ்ரத் மௌலானா அஸ்ஸய்யிது அஹ்மதுல் ஜிப்ரி பூக்கோயா தங்கள் அவர்கள் சென்ற 21-8-30 பின்னேரம் வெள்ளிக்கிழமை இரவு கொழும்பில் பிரபல வியாபாரியாகிய கனம் அல்ஹாஜ் பி. பி. உம்பிச்சி J. P. அவர்கள் இல்லத்தில் இஷா தொழுகைக்குப்பின் "கியாமத்தின்" விஷயத்தைப் பற்றி அங்கிருந்தவர்களுக்கு உபதேசஞ் செய்துவிட்டு படுக்கைக்குச்சென்றுவிட்டார்கள். படுக்கையில் "தஸ்பீஹ்" செய்து கொண்டிருக்கும்பொழுது மும்முறை "அல்லாஹு அக்பர்" என்ற திக்ரைஉரக்கச்சொன்னார்கள். தக்பீர்கட்டிக்கொண்டு ஆண்டவனின் அழைப்பிற்கிணங்கி அவனது திருச்சமுகம் ஏகிவிட்டார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹிராஜிஊன்) நாயகமவர்கள் மரணமானதைக் குறித்து உள்ளூர், வெளியூர் முதலிய இடங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் வந்து குழுமி விட்டார்கள். அன்றையதினம் முஸ்லிம்களின் வியாபாரஸ்தலமெல்லாம் அடைக்கப்பட்டன. மாலை 4 மணிக்கு "ஜாமிஉல் அளுபர்" பள்ளியில் பெரும் திரளான ஜனங்

களோடு ஜனஸா தொழுக வைக்கப்பட்டு, 50,000 ஜனங்கள் புடைசூழ புதிய சோனகத் தெருவில் மௌலானா அவர்களுக்காகக் கட்டப்பட்ட "ஜிப்ரியத்துல் அவ்லியா," வென்னும் தைக்காவில் 5 மணிக்கு சிறப்பாய் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. மௌலானா அவர்களுக்கு வயது 55. அவர்கள் கொழும்பில் அல்ஹாஜ் பி. பி. உம்பிச்சி J. P. அவர்கள் வீட்டில்தான் விசேஷமாக வசித்து வருவார்கள். அவர்களின் நல்லுபதேசங்களைப் பின்பற்றி நடக்கும் முரீதீன்கள் இவ்விலங்கையிலும், இந்தியாவிலும் அநேகருளர். மௌலானா அவர்களின் வபாத்தானது பொதுவாய் எல்லா முஸ்லிம்களுக்கும், குறிப்பாய் அவர்களின் முரீதீன்களுக்கும் ஈடு செய்யமுடியாத நஷ்டமென்பதிலையமில்லை. அல்லாஹுதஆலா மௌத்தாவுக்கு மக்பிரத்தையும் முஸ்லிம்களுக்கு ஸப்ரையும் தந்தருள்வானாகவும்.

இங்ஙனம்

காரியதரிசிகள்

ஹிதாயத்துல் இஸ்லாம் சங்கம்
கொழும்பு.

பினுங்:— இவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் யுனைடெட் முஸ்லிம் அசோசியேஷனுதரவில் மத்ரஸா இத்திஹாதுல் முஸ்லிமீன் என்னும் பாடசாலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இப்பாடசாலையின் திறப்பு விழா 9-8-30-ல் நடைபெற்றது. அம்மகா சபைக்கு ஜனுப் ஆனந்தகவி ந. நா. உதுமான் மைதீன் சாஹிப் அக்கிராசனம் வகித்தார். ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர். ஆனரபிள் ஆலிஜனுப் H. H. அப்துல்காதிர் பார் அட்லா J. P. அவர்களால் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. பலர் கல்வியின் அவசியம், முஸ்லிம்களின் முன்னேற்றம் முதலியவைகளைப்பற்றி சொற்பெருக்காற்றினர்.

புதக்குடி:—அன்னூறு முஹம்மதிய்யு மத்ரஸா பட்டமளிப்பு விழா:— தஞ்சை ஜில்லா புதக்குடியில் நியமிக்கப் பெற்றிருக்கும் மத்ரஸாவானது சுமார் 15 வருஷமாய் நம்தென்னுட்டில் ஆற்றிவரும் ஊழியம் யாவரு மறிந்ததே. நூற்றுக்கதிகமான கலாவல்லுனர்கள் அரபி, பார்சி, உர்தூஆகிய பாஷைகளில் சன்மார்க்கக்கலைகளைக்கற்றுத் தேர்ந்துள்ளனர். இக்கலாசாலையின் ஸ்தாபகரான ஆலி ஜனுப் பொ. செ. ஹாஜி பக்கீர் முஹம்மது சாஹிப் மர்ஹூம் அவர்களும், அதற்கு நாஜிராகவும் தலைமை ஆசிரியராகவுமிருந்து தொண்டாற்றி வந்தமௌலானு மௌல்வி அல்ஹாஜ் அப்துல் கரீம் சாஹிப் அவர்களும், தங்கள் காலத்தே மதரஸாவின் பட்டமளிப்புவிழா—தஸ்தார் பந்தி ஜல்ஸா நடத்தவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் நாட்டம் அவ்வாறு இல்லாததால் அவ்வமயம் நிறைவேறவில்லை. கனம் ஹாஜியார் அவர்களின் உத்தமப் பத்தினியார் அவர்கள் ஷை பட்டமளிப்பு விழாவை தங்கள்சொந்தச் செலவில் நடத்திவைக்க முடிவு செய்துள்ளார்கள். இவ்விழா 28-9-30ல் நடைபெறும். அம்மகா சபைக்கு வேலூர் ஆலிஜனுப் மௌலானு மௌல்வி அல்ஹாஜ் கான்பஹதூர் ஜியாவுத்தீன்முஹம்மது சாஹிப் பஹதூர் அவர்கள் தலைமை வகிப்பார்கள், வேலூர், மதராஸ் மற்றும் தென்தேசத்திலுள்ள உலமாக்களும், மதரஸாவின் முக்கியஸ்தர்களும் கனதனவான்களும் சமுகங்கொடுப்பார்கள். மகாநாடு சிறப்பாய் நடைபெறுவான் வேண்டி வரவேற்பு கமிட்டியார் தக்க ஏற்பாடு செய்து வருகிறுர்கள்.

தா. இ. பஹிஷ்கார நிரூபம்

கண்ணிய மிக்க ஆலி ஜனுப் ஆசிரியர் அவர்கள் மேன்மை சமுகத்திற்கு (காதிம்) த. சே. பா. முஹம்மத் ஜமாலுத்தீனின் மிகப் பணிவான அஸ்ஸலாமு அலைக்கும். (வர) தங்களால் நடத்தப்படும் சங்கை பொருந்திய ஹிபாஜத்துல் இஸ்லாம் வெளிவர ஆரம்பமானது தொடுத்து நமது தென்னுட்டில் ஓர் புதில் உணர்ச்சியை உண்டாக்கி விட்டதென்பதிய ஐயமில்லை. தங்கள் சங்கமும் மாசிகையும் இதுவரைக்கும் செய்து வந்திருக்கும் மார்க்கத்தொண்டு அனந்தமுண்டு. அதிலும் குறிப்பாக மார்க்க ஞானமற்று மதத்திற்கு முற்றிலும் விரோதமாக பிரசாரம் செய்துவரும் தா. இ. வும், அதன் பா. தா. வுமாகிய மார்க்கம் இன்னதென அறியா ராக்ஷஸ பாம்பின் வலையில் நின்றும் என்போன்ற வாலிபர்களை நீக்கி வைத்தது தங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் என்பதில் சந்தேகமுண்டோ? தவிர, நான் சென்ற மாதம் தங்கள் பத்திரிகைக்கும், ஸை. இ. விற்கும் எழுதிய தா. இ.

பஹிஷ்கார வியாசத்தைப்பற்றி எனது நண்பர்களும் எனது உறவினர்களிற் சிலரும் எம்மீது சந்தேகங்கொண்டு நேரிலும் கடித மூலமாகவும் கேட்பதை முன்னிட்டு அவர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய இத்துடன் ஒரு வியாசம் அனுப்பி இருக்கிறேன். வரப்பெற்று தயவு கூர்ந்து முக்கிய பதிப்புகளிற் இதுவுமொன்றாக பாவித்து அவசியம் வரும் மாதப் பத்திரிகையில் வெளியிடவேணுமாய் பணிவுடன் பிரார்த்திக்கிறேன். வஸ்ஸலாம்.

தங்கள் காதிம்

த. சே. பா. முகம்மத் ஜமாலுத்தீன்,

ஜமீன், ஆத்தூர்.

தாருல் இஸ்லாத்தையும் அதன் ஆசிரியரையும் பஹிஷ்கரித்த தேன் ?

மாண்புமிக்க மித்திரர்காள் ! யான் சென்ற ஒருவருட காலமாக தாருல் இஸ்லாம் பத்திரிகையை ஆதரித்தும், அப்பத்திரிகையில் பல வியாசங்களை வெளியிட்டும் வந்ததுமட்டுமின்றி, யாதொரு காரணமுமின்றி கூட்டத்தில் கோவிந்தா! கூறினகதையேபோல் எம் மனங்கொண்ட மட்டும் மார்க்கக் கல்விகற்ற மேதாவிகளை வசைமொழிகளால் அலங்கரித்தும் வந்தேனென்பதையும், இப்பால் மேற்படி தா. இ. வையும், பா. தா. வையும் பஹிஷ்கரித்துவிட்டதற்காக ஸைபுல் இஸ்லாம், ஹிபாஜத்துல் இஸ்லாம் முதலிய பத்திரிகைகளிற் பிரசுரித்திருந்த வியாசங்களையும் கண்ணுற்றிருப்பீர்கள். முட்டாள் குருக்களுக்கு மூடச் சிஷியன் உதவியதுபோல் யானும் என் அறியாமையால் பா. தா, வைப் போற்றியும் உலமாக்களைத் தூற்றியும் பல வியாசங்களை தா. இ. மூலம் வெளியிட்டதற்காக தலை குனியவும் நேரிட்டுவிட்டதென்பதையும் ஒளியா தெடுத்துரைக்கின்றேன். பா. தா. வின் தமிழ் அலங்கார நடையில் மயங்கியே அவர் பத்திரிக்கையை ஆதரிக்க முன்வந்தேன். இத்துடன் குத்பா தர்ஜுமா விவாதமும், பா. தா. வின் வசைத்தூண்டியில் மாட்டும்படி செய்துவிட்டது. யான் ஒரு வருட காலமாக தா. இ. வை வரவழைத்துப் பார்த்ததிலும், பல வியாசங்கள் அதில் பிரசுரிக்கப் பெற்றதிலும் எமது ஆப்த நண்பர்களெல்லாம் எம்மைச் சினந்து பலகடிதங்களையும் வரையலாயினர். அக் காலை என் நண்பர்களின் சினங்களை லக்ஷியம் செய்யாமல் அதி தீவிரமாக தா. இ. வுக்கு ஆதரவுகளளித்து வந்தேன். அச்சமயம் எமது சில நண்பர்களும் உலமாக்களும் பா. தா. வையும், அவரின் தா. இ. வையும் போற்றி வருவதைப்பற்றி எம்மை இக்கொள்கையை விட்டு விடும்படி வற்புறுத்துவதைப் பற்றியும் குரோதகுணம் கொண்டே பா. தா. வை தாக்குகின்றார்களென்று எண்ணி, அவர்களின் அந்தரங்க சுத்தியான விவாதங்களை லக்ஷியம் செய்தேனில்லை. இப்பால் தா. இ. வில் இப்னு தைமிய்யாவின் கொள்கைகளை இடைவிடாமல் பரத்திவருவதின் நோக்கம் யாதென சிந்திக்கலானேன். இது மட்டுமல்லாமல் லாஹூர் அஹ்மதிய்யா பார்ட்டியாருடன் தமக்கு எவ்வித சம்பந்தமுமில்லையென அறுதியிட்டு உறுதிகூறும் பா. தா. அவர்களின் பத்திரிகையாகிய தா. இ. வின் மாதாந்திர சஞ்சிகையின் டைட்டல் பேஜ் ஒன்று லாஹூர் அஹ்மதிய்யா பார்ட்டியார்களால் நடத்தப்படும் 8 பேப்பர்களுடன் பிரசுரிக்கப் பட்டிருந்ததையும், அப் பார்ட்டியார்களால் எழுதப்பட்ட புத்தகங்களையே மொழிபெயர்த்து வருவதையும், அவர்களின் பத்திரிக்கைகளிலிருந்து பல ஆபாச வியாசங்களை பிரசுரிப்பதையும், நம் பெண்மணிகளின் கற்பிற்கே அணிகலனாகிய கோஷா முறை குர்ஆன் ஹதீதுகள் மூலமாகத் தெளிவுறப் போதிக்கப்பெற்ற முறைக்கு மாற்றமாகக் கண்டித்து எழுதப்படும் சில காமப்பித்தர்களின் வியாசங்களையும் கண்ணுற்றலிருந்தும், பா. தா. அவர்கள் தம்மையே பெரிய மேதாவியென நடிப்பதை ஊகிக்கக்கூடிய அநேக, வியாசங்களை அடுக்கி யடுக்கி எழுதும் தோரணையைக் கண் கூடாகக் கண்டறிலிருந்தும், இன்னும் எத்தனையோ, எண்ணத் தொலையாத ஆபாசங் களெல்லாம் அப் பொல்லாத தா. இ. வில் குவிந்து கிடப்பதை கண்ணுற்றதி லிருந்துமே, நான் பா. தா. வின் மாயவலையிலிருந்து வெளி யாகும்படி நேரிட்டது. எம்போன்ற பல வாலிபர்களும் எம்மைப்போல் ஏமாந்து கடைசியாக அவர் கொள்கைகளிலிருந்து விலகியிருக்கின்றார்களென்பதை யான் பன்முறை ஸை. இ. மூலம் பார்த்திருந்தும், யானும் நேரே பா. தா. வின் விதண்டா வாதங்களை அறியவேண்டிய

தாக இருந்தது போலும்! எமது ஆப்த நண்பர்களிற் சிலர் யான் சென்ற 25-6-30 தேதி ஸை. இ, ஹிபாஜத்துல் இஸ்லாம் முதலிய பத்திரிகைகளில் எழுதிய வியாஸத்தைப் பற்றி சந்தேகங்கொண்டு யான் மனப்பூர்வமாக பா. தா. வின் கொள்கைகளை விட்டு நீங்கவில்லை என்று கடிதங்கள் மூலமும் நேரிலும் எம்மை வினவி வருகின்றபடியாற்றான், இந்நீண்ட பிரசுரத்தை வெளியிட முன்வந்தேன். ஆகையால் மார்க்க மேதாவிகளாகிய எனது குரு (உஸ்தாது) மார்களும், இதர நண்பர்களும், மற்றும் எமது பந்து மித்திரர்களும் இனியாவது இவ்வடியேன்மீது சந்தேகங் கொள்ளாது பா. தா. வின் கொள்கைகளை விட்டு நான் நீங்கி விட்டேனென்பதையும், தா. இ. வை. பஹிஷ்கரித்து விட்டேனென்பதையும் நம்புவார்களென்றுஆதரவு வைக்கும்,

தங்களன்புள்ள நண்பன்,

த. சே. பா. முஹம்மத் ஜமாலுத்தீன்

(ஜமீன்) ஆத்தூரி, சங்கராபுரம்.

மன்னிப்புக் கடிதம்.—சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம், லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் டொபாக்கோ கம்பெனியார் தங்கள் சிக்ரெட் பெட்டிகளில் நபிகள் நாயகம் அவர்களின் சித்திரப் படமென்று ஒன்றை பிரசுரித்தமை பற்றி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி அவர்களுக்கும், சிங்கப்பூர் ஏஜெண்டிற்கும் அனுப்பிவைத்தது நேயர்கள் அறிந்ததே. அதற்கு சிங்கப்பூர் ஏஜெண்டு அடியிற் கண்ட பதிலை அனுப்பியிருக்கிறார். அதாவது:—

அமெரிக்க புகையிலை கம்பெனி

11, கெப்பல் சாலை, சிங்கப்பூர்.

31—7—30.

காரியதரிசி அவர்கள்,

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்.

48, அங்கப்பநாய்க் தெரு, சென்னை.

அன்பார்ந்த ஐயா!

வெஸ்ட்மினிஸ்டர் 'ரீஜண்ட்' சிகரட்டுகள் அடங்கிய பெட்டிகளில் பரிசுத்த நபிகள் 'முஹம்மது' அவர்கள் உருவப் படங்களைக் கொண்ட கார்டுகள் இருப்பதைப்பற்றி அறிவுறுத்திய தங்கள் ஜுலை 30-ந் தேதி கடிதம் வரப்பெற்றனம். இந்நிகழ்ச்சிக்கு மிகவும் வருந்துகின்றனம்.

இதுபற்றி பினங்கு முஸ்லிம்களாலும் எமக்கு அறிவுறுத்தப் பெற்றது. எனவே, இத்தகைய ஆபாசப் படங்களை இனி சித்தப்படுத்தி அனுப்பாதிருக்குமாறு உடனே நாம், சிக்ரெட்டுகள் செய்தனுப்பும் கம்பெனியார்கட்குத் தந்தி கொடுத்தோம்.

இவ்வூரிலும் பினங்கு, கோலாலம்பூர், மலாக்கா, ஈப்போ முதலிய ஊர்களிலும் உள்ள முஸ்லிம் சங்கத் தலைவர்கட்கு எம்மை மன்னிக்குமாறு தெரிவித்துக் கொண்டதோடு, முஸ்லிம் சமூகத்திற்கு அறியாமலிழைத்த எமது தீங்கை பொறுத்தருளும்படியும் வேண்டி, எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டோம்.

மேலும், இப்பகுதியில் வெஸ்ட்மினிஸ்டர் சிக்ரட்டு டின்கள் பல்லாயிரம் பரவி யிருக்கின்றன. இவைகளிலும் அப்படங்கள் இருக்குமாற்றால், அவைகளைப் பரவவொட்டாமல் தடுக்குமாறு, "மக்கள் தலைவரவர்" களின் பத்துப் படங்களை எமக்குத் தருபவருக்கு இனாமாக ஒரு டின் சிகரட்டு கொடுப்பதாகவும் பிரசுரித்தோம். இம்முயற்சி ஈடேறியது. இதன் பயனாய் 'முஹம்மது' அவர்களின் எல்லாப் படங்களும் எங்கட்குக் கிடைத்துவிட்டன. அவைகளை யெல்லாம் இப்பகுதியிலுள்ள முஸ்லிம் சங்கத் தலைவர்கள்பால் சேர்த்து விட்டோம்.

இதுகால், மிகவும் வருந்தற்குரிய இத்துரதிருஷ்டமான சம்பவம் நிகழ்ந்தமைபற்றி தங்களது சங்கத்திற்கு எமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இத்தகைய செயலால் தங்கள் சமூகத்திற்கு எத்தகைய மனக் கொதிப்பு உண்டாகக் கூடும் என்பதை இனிதுணர்கின்றோம். எங்கள் வியாபாரத்திற்கு ஆதாரமான உங்கள் சமூகத்தின் மனதை நாங்கள் வேண்டுமென்று புண்படுத்த மாட்டோம் என்றும், இத்தகைய 'படங்களை' நாங்கள் அறியாமையினாலேயே பிரசுரித்து விட்டோம் என்றும் தங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(ஒப்பம்) ....

மானேஜர்.

இக்கடிதத்திற்கு சங்கத்தார் அனுப்பிய பதில்

அன்பார்ந்த ஐயா!

நாயகமவர்கள் படப்பிரசுரத்தின் சம்பந்தமாக எமக்கு அனுப்பப்பெற்ற தங்களின் சென்றமாதத்து 31-ந் தேதி மன்னிப்புக் கடிதம் வரப்பெற்றோம்.

இத்தகைய நுண்ணிய விஷயத்தில் தாங்கள் உடனே தலையிட்டமை பற்றி உவக்கின்றோம். மேலும் பிரசுரமாய 'முஹம்மது' படங்களை எல்லாம் தாங்கள் மீண்டும் சேகரித்து தங்கள் முயற்சி நிறைவேறியமைக்கும் எமது பாராட்டு உரித்தாகின்றது.

எமது சங்கத்தினது வந்தனமும், முஸ்லிம் சமூகத்தினது வந்தனமும் தங்களைச் சாரும் என்றும் தங்கட்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தங்கள் உண்மையுள்ள

காரியதரிசி,

ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம்,

சென்னை.

இஸ்லாத்தின் பாதுகாப்பு சங்க அறிக்கை.

யவ்முந்நபீ :—சென்ற 8-8-30 தேதியை நாகத் திருநாளாகக் கொண்டு நாடோறும் கொண்டாடும்படி நாம் அறிவித்திருந்ததற்கிசைந்து, எல்லா ஊர்களிலும் தக்க முறையில் இத்திருநாள் கொண்டாடப் பெற்றது. மகாநாடுகள் கூட்டப்பட்டன. முஸ்லிமல்லாதாரும் அதில் கலந்து கொண்டார்கள். "நபிகள் திலகம்'' என்ற நூல் யாவருக்கும் வழங்கப்பட்டது. நடவடிக்கை விபரங்களைக் குறித்தது நம் மாசிகையில் பிரசுரிக்கும்படி பலரும் பல நிருபம் அனுப்பியுள்ளார்கள். விரிவஞ்சி விடப்பட்டது. நபிகள் திலகம் 15000 பிரதிகள் அச்சிடப்பட்டன. தங்கள் சொந்தச் செலவில் வாங்கி வினியோகித்து அதன் பலனை கொள்ளை கொள்ளும் கனவான்கள் முன்னாடியே தெரிவிக்கும்படி அறிவித்திருந்தோம். அதற்கேற்ப அநேக கனவான்கள் வரவழைத்து வழங்கினார்கள். 1-8-30 வரை எதிர்பார்த்து சங்கச் சார்பில் இனமாக பல ஊர்களுக்கும் அனுப்பப்பட்டது. கடைசியாக அநேகர்கள் ஆர்டர்கள் செய்து மணியார்டரும் அனுப்பினார்கள். சிலர் மௌலானா கர்ஷி சாஹிப் அவர்கள் மூல்யமாகவும் ஆர்டர் அனுப்பினார்கள். இவைகள்யாவும் பிந்திக் கிடைத்தால் அனுப்பமுடியாமற் போனதற்கு வருந்துகின்றோம். இனி எச்சரிக்கையுடன் குறிப்பிட்ட காலத்தை யனுசரித்து ஆர்டர் செய்வார்களென்று எதிர் பார்க்கின்றோம். திருநெல்வேலி பால்ய முஸ்லிம் சங்கத்தார் கர்ஷி சாஹிப் அவர்கள் இயற்றிய "வீரத்தின்'' மொழி பெயர்ப்பை 3000 பிரதி அச்சிட்டு தென் ஜில்லாக்களில் வழங்கினார்கள். அவர்களின் இத்திருஊழியம் எங்களுக்கு ஓர் பக்க பலமாகவே திகழ்ந்தது. இருவகையிலும் நந்தமிழகத்தின் கண் பதினெண்ணாயிரம் பிரதிகள் வழங்கப்பட்டனவென்பதை நேயர்கள் அறிவார்களாக. மற்றும் சில சங்கத்தார்கள் நாயகச் சரித்திரச் சுருக்கத்தை அச்சிட்டு ஆங்காங்கு வினியோகித்திருக்கிறார்கள்.

நமக்கு "நபிகள் திலகம்'' அச்சியற்றுவதற்கு நன்கொடையளித்த கனவான்களின் பெயர் நாமங்களும், தங்கள் சொந்தச் செலவில் வாங்கி வினியோகித்தவர்களின் விபரங்களும், சங்கச்சார்பாக அனுப்பப்பட்ட ஊர்களும், அவைகள் விநியோகிக்கப்பட்ட விபரங்களும் அடுத்த மாசிகையில் வெளியிடப்படும்.

வருஷக்கொண்டாட்டம் :-உங்கள் (ஹிபாஜத்துல் இஸ்லாம்) சங்கம் 13-9-29-ல் ஆரம்பமாயிற்று என்பது யாவருமறிந்ததே. இம்மாதம் 13-ந் தேதியிலிருந்து சங்கத்தின் இரண்டாவது வயது உதயமாகிறது. ஆனால் அக்டோபர் முதல் தேதியிலிருந்தே இரண்டாவது வருஷாரம்பத்தைத் துவக்குவதென்று சங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள். அம் மாதத்தில் வருஷக்கொண்டாட்டம் நடத்துவதென்றும், அம் மகாசபைக்கு பல பாகங்களிலிருந்தும் தலைவர்களையும், பிரதிநிதிகளையும் அழைக்கிறதென்றும் நிச்சயிக்கப் பெற்றுள்ளது. காரியதரிசிகள்.

ஆசிரியர் குறிப்பு

கவுது நாயகம் அவர்களும் தர்க்காக்களும் :—வலிகள் நாயகம் முஹ்யித்தீன் ஜீலானி அவர்களின் திருவாழ்க்கையை மற்றோர் அங்கத்தில் பிரசுரித்துள்ளோம். அதனை ஊன்றிப்படிப்பின் நாயகமவர்களின் தியாகம், ஒழுக்கம், தெய்வபக்தி, வணக்கம், ஜனங்களுக்கு அவர்கள்செய்த ஊழியம், அன்னவர்களை செம்மைப்படுத்த அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி, அவர்களின் ஹிதோபதேசம், மேலும் தேசியம், ராஜ்யத்தில் தலையிட்டு தேசத்திற்கு அவர்கள் செய்த தொண்டு முதலானவைகள் நன்கு விளங்கும். ஷிர்க்கு, குபிரு, பித்அத், அனுச்சாரம் இவைகளை அகற்ற அவர்கள் அரும்பாடுபட்டார்கள். இக் காரணங்கள்கொண்டே அக்காலத்திலிருந்தே அம் மகானின் திருநாமம் நாடெங்கும் பிரபல்யமாயிற்று. அவர்கள் அடங்கிய "பக்தாத்" நகர் சன்னிதானத்தில் ஓர் அழகிய தர்க்கா கட்டப்பட்டுள்ளது. அதற்குப் பலராலும் தகுந்த வருவாயும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த தர்காவானது அம் மகானின் ஞாபகச் சின்னமாக இற்றைக்கும் விளங்குகின்றது. அவர்கள் பெயரால் எல்லாத் தேசங்களிலும் மஸ்ஜிதுகளும், ஜெபிக்கும் இடங்களான ஸாவியா, மஹ்ளராக்களும் கட்டுவிக்கப்ப டிருக்கின்றன.

முதலாவதாய் பக்தாத் மாநகரில் நாளது மாதம் 11-ந் தேதி ஹஜ்ரத்தவர்கள் சன்னிதானத்தில் நடைபெறும் கிரியைகளைக் கவனிப்போம்:— நம் தேசத்தில் அன்று நடத்தப்படும் துர்க்கிரியைகளையும் உற்று நோக்கி ஒழுகுவோமாக. பக்தாதில் அன்றையதினம் தர்கா சுத்தப்படுத்தப்பட்டு வாசனைத்தூபம் போடப்பட்டிருக்கும். உலமாக்களும் கனவான்களும் வந்து கூடுவார்கள். மல்லிதுஷரீபும், புகழ்ப்பாமாலைகளும் ஓதப்படும். தர்காவின் "நகீப்" அவர்களும்சமுகம் கொடுப்பார்கள். தர்காவில் தயாரிக்கப்பட்டிருக்கும் விருந்தில் எல்லோரும் உணவருந்துவார்கள். அன்று மாலை வரை இவ் வைபவம் நடைபெறும். எல்லோரும் வந்து ஜியாரத்துச் செய்து செல்வார்கள். இதைத் தவிர்த்து வேறெத்தகைய பித்அத்துகளும் அத்தர்பாரில் நடைபெறா.

நம்மவரோ வெனின், நாயகமவர்களுக்குக் பொருத்தமற்றவாறு அவர்களுக்காக கூடு கொடியேற்றம் எடுக்கின்றனர்; அவைகளுக்கு நேர்ச்சைக் கடன்கள் நிறைவேற்றுகின்றனர்; அவ்வாறு செய்யாவிடின் அபாயம் நேரிடுமென்று கருதுகின்றனர். என்னே! இவர்களின் அறியாமை! தீனுல் இஸ்லாத்தின்கோட்பாடுகள் செவ்வனே விளங்கி நிலவும் இக்காலை இவர்களின் மூடபக்தி இவ்வாறு தாண்டவமாடுமெனில், இதைவிட முஸ்லிம்களுக்கு இழிவு வேறுளதோ? இக்கொள்கைகளால் அவர்களின் ஏகதெய்வக் கொள்கை சிதைந்து ஷிர்க்கன்றோ வந்து சேர்ந்துவிடும்! ஷிர்க்கானது பொறுத்தற்கியலாத பாவம். அப்பாவத்தைச் செய்பவர்கள் நரகலோகத்தை விட்டு ஒருபோழ்தும் வெளியேற்றப்படமாட்டார்கள், என்றும் விபரத்தை யாம் பன்முறையும் எடுத்தோதியிருக்கின்றோம். அல்லாஹ் தஆலாயிடத்தில் பாபமன்னிப்புத் தேடி மஸ்ஜிதுகளையும், தர்காக்களையும் இக் கெட்டகாரியங்களைவிட்டும் சுத்தஞ்செய்ய முயலுவீர்களாக. இக் கெட்டகாரியங்களை நிகழ்த்துவதினால் ஹஜ்ரத்தவர்களின் கோபப்பார்வைக்கு ஆளாகுவார்களேயன்றி, ஒரு போதும் அவர்களின் அன்பிற்குப் பாத்திரவான்களாகார் என்பது திண்ணம்! திண்ணம்!! திண்ணம்.

காயல் பட்டணம்.

ஒரு விஞ்ஞாபனம்.

காயல்பட்டணம் ஜும்ஆப் பள்ளியான துமிஸர், கெய்ரோவிலிருந்து வந்த மேன்மை தங்கிய பிரபு சுல்தான் ஜமாலுத்தீன் நயினர் அவர்களால் கட்டி வைக்கப்பட்டு, அவரது புதல்வரால் ஹிஜ்ரீ 737-ம் வருடம் வக்பு செய்யப்பட்டு நாளது வரை முஸ்லிம்கள் தொழுகைகளை சிறப்பாய் நிறைவேற்றி வரும் பரிசுத்த ஸ்தலமாய் இலங்குகின்றது.

இப்புராதனப் பள்ளிவாசலுக்கு சலவைக் கற்கள் (ஸங்கெ மர்மர்) பதிப்பதற்காக மதராஸ் மெஸ்ஸர்ஸ் லக்ஷிமி ராட்டன் லிமிடெட் கம்பெனியாரிடம் அவர்களின் கைதேர்ந்த தொழிலாளர்களை கொண்டே நல் அமைப்பாய் கற்களை பதித்து ஒவ்வோர் வரிசை (ஸப்பு)க்கு மிலக்காய் கருப்பு மார்பள் வாலக் கற்களும் பொருத்தித்தரக் கூலியுட்பட சதுர அடி 1-க்கு ரூ. 1-8-0 வீதம் 4000 அடி முதல் 5000 அடி வரை ஒப்பந்தம் பேசி, இட்டாலி அண்டு பெல்ஜியம் ஆகிய இவை இருவகைக் கற்களுக்கும் மேற்படி கம்பெனியார் ஆர்டர் செய்து கற்களும், தூத்துக்குடித் துறைமுகத்துக்கு வந்துவிட்டன.

ஒப்பந்தத்துடன் அட்வான்ஸ் கொடுத்த ரூ. 2000 போக, தற்பொழுது ரூ. 2000 கொடுத்து கற்களை காயற்பட்டணத்திற்கு எடுத்தனுப்பி அடுத்த செப்டம்பர் மாதம் வேலை ஆரம்பித்து நடக்கவேண்டியிருப்பதால், அதற்காக வாக்களித்த புண்ணிய சீலர்கள் தயவுசெய்து மேற்படி கைங்கரியம் தாமதமாகாமலும், இவ்வேலையை மேற்போட்டுக் கொண்டவர்களுக்கு கஷ்டம் விளையாமலும், சுறுதியாய் அனுப்பித்தரவேணுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்:

மு. க. முஹம்மது முகியித்தீன் தம்பி,

ரு. க. மு. சே. முகியித்தீ சாயபு,

சென்னை. 26-8-30.

நமது பத்திரிகை கிடைக்குமிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் A. M. அப்துல்லாஹ் சாஹிப் & Co,
77, மார்கட் ஸ்டிரீட்.

ஜனுப் K. V. முகம்மது சுல்த்தான் அவர்கள்,
91, மார்க்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

மெஸர்ஸ் M. M. துல்பகீர் கம்பெனி,
34, நார்த் பிரிட்ஜ் ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் M. M. துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனுப் ஹாஜீ K. O. முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரம்பா ஸ்டிரீட்.

பினங்

ஜனுப் V. O. ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனுப் V. M. அப்துற்றஹ்மான் அம்பலம் அவர்கள்,
85, மொகல் ஸ்டிரீட்.

Messrs. A. P. N. அப்துல் ஜப்பார் & பிரதர்ஸ்,
77, எடுவர்டு ஸ்டிரீட்.

கொழும்பு

ஜனுப் A. M. K. ஆலிம் சாஹிப்,
220, 2nd கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் A. M. K. ஹாஜி முகம்மது ஷரீப்,
மரைக்காயர் & பிரதர்,
220, அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் M. A. காதர் பாவா & பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Edited & Published by Moulvi A.R. Abdur Rahim Saheb
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.